# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

அமுத் ஊற்று 2
MARCH 2000

AMUDHU
துளி 6



# ஹே ராம்

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - மார்ச் 2000 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

.................................................
லீசிங்
.................................................
காப்புறுதி வசதிகள்
.................................................
வாடகை உரித்து
.................................................
கழிவு பற்றுச் சீட்டு (பில்):
.................................................
ஃபினான்ஸ் வர்த்தகம்
.................................................
செயற்பாட்டு வரி
.................................................
வீடு, சொத்து கடன்
.................................................

## வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**

10814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . 2
பட்டினியில் பறவை ராஜாக்கள் . . . . . 5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . . 6
**வாசலைத் தாண்டிய கடிதங்கள்** . .
**அரசியல் அரங்கம்:**
நம்பிக்-(கை) கொடுக்காத எதிர்க்கட்சி 8
**பேட்டி: டிலான் பெரோரா**
புலிகளை நிர்ப்பந்திக்க
எம்மால் முடியாது . . . . . . . . . . . . 10
**கவிதை:** யுத்தத்தைத் தின்போம் . . 14
இதுவும் ஒரு பேட்டி . . . . . . . . . . 18
**சிறுகதை:** விளிம்பு நிலை நோக்கி. . . 20
சரித்திரம் சிதைத்த சுதேசவைத்தியம் 23
**கவிதை:** நீங்கள் தூவிய மலர்கள் . 25
தலையலங்காரம் . . . . . . . . . . . . . 26
என்னைத் தேடி, என் வேரைத் தேடி . 28
எப்படி உருவானோம் . . . . . . . . . . 30
**சிறுகதை:** தவறு . . . . . . . . . . . . . 32
ஓவியம் வரையாத தூரிகை . . . . . . 35
**சிறுகதை:** ஒரு கட்டுக்கதை . . . . . . 36
புகை எமக்குப் பகை . . . . . . . . . . 38
**குங்.ஃபூ:**
கொல்லும் கரங்கள் பத்து . . . . . . . 40
**சினிமா:**
**கமல்** ராஜபார்வை முதல்
ஹேராம் வரை . . . . . . . . . . . . . . 42
**நோயற்ற:**
இடுப்பு நோவைச் சமாளிக்க . . . . . . 47
நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . 48


March 2000

**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

E-Mail: webmgr@sri.lanka.net




எமக்கில்லை உரிமை 10



யுத்தத்தை தின்போம் 14



என்னைத் தேடி... 28



புகை எமக்குப் பகை 38



கொல்லும் கரங்கள் 40



சினிமாவில் பெண் உடல் 42


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மயிர்சிலிர்க்க வைத்துவிட்டது உயிர்!



அமுதினைத் தொடர்ந்து படிப்பவர்களில் நானும் ஒருவன். ஆனால் 30 ரூபா கொடுத்து வாங்கிப் படிப்பதில்லை. வாசிகசாலையிலேயே படிப்பேன்.

உண்மையில் எந்தச் சிங்கள அரசும் எமக்கு நியாயமான தீர்வினைத் தரப்போவதில்லை என்பது பெரும்பாலான தமிழர்களுக்கும் தெரியும்.....

தனிநாடே எமது பிரச்சினைகளுக்கு ஒரே வழி. இந் நோக்கத்தை அடைவதற்கு பல்வேறு தந்திர முறைகளைப் பயன்படுத்திய சூழ்நிலைகள் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் உண்டு. அதில் ஒன்றுதான் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்க புலிகள் விரும்பினர். அதனையே தமிழ் மக்களும் விரும்பி வாக்களித்தார்கள். தேர்தல் முடிவுகள் இதையே தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

முற்றிலும் எல்.ரி.ரி.ஈ. யைச் சாடுவதிலேயே குறியாக உள்ளீர்கள். அதற்காக புலிகள் செய்ததெல்லாம் சரியெனக் கூற வரவில்லை. அவர்கள் சில தவறும் செய்துள்ளார்கள்.(முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை.)

- சி. ரஞ்சன், யாழ். பல்கலைக்கழகம்.

நான் 'அமுது' என்றசொல்லுக்கு அகராதியில் பொருள் பார்த்தும் பூரண தெளிவற்றுக் கிடக்க. அமுதே உன்னைக் கண்டபின்பு தான் பரிபூரண தெளிவுற்று மன நிறைவடைந்தேன்.

- ப்ரிய வாசகன்.

அறிவிற்கு ஆதாரமாகவும் கண்ணுக்கு விருந்தாகவும் அமையும் அமுதே. சென்ற இதழில் வெளிவந்த செல்போன் பற்றிய ஹலோ ஹலோ கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. வரிசை என்ற தலைப்பில் பக்கத்திற்கு பக்கம் தந்த படங்களும், தகவல்களும் பிரமாதம். டொக்டர் எம். கே. முருகானந்தன் அவர்கள் தந்த "மூட்டு வாதத்திற்கு புதிய மருந்து" என்ற தகவலும் சிறப்பு. அமுதிற்கு ஒரு சிறு வேண்டுகோள், சினிமா பகுதியில் இடம்பெறும் கவர்ச்சியான படங்களைக் குறைக்கவும். தென்னிந்தியப் பாடகர்களின் படங்களைப் பிரசுரிப்பீர்களா?

க. மயூரன்
ஆனைக்கோட்டை.

உங்கள் சஞ்சிகையையிட்டு பலர் கை பிசைந்துகொண்டிருப்பது என் மனக் கண்ணில் தெரிகிறது. ஏனெனில் அவர்களுக்கு ஒரே றெக்கோட் தான் பாட வேண்டும். வேறு விதமானபாட்டுஏதும் கேட்டால் அந்த றெக்கோடை உடனே அடித்து நொருக்கி மௌனமாக்கிப் பழக்கப்பட்டவர்கள். இதைவிடுதலைப் போராட்டம் என்ற பெயரில் மட்டுமல்ல, முன்னர் சாதி ஒடுக்குமுறையாகவும் செய்தவர்கள் இவர்கள். ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவது என்பதைவிட தாமே ஒடுக்குமுறையை மேற்கொள்வதில்தான் இவர்களின் உண்மையான அக்கறை உள்ளது. இவர்கள் எதிர்க்கிறார்ளென்றால் நீங்கள் சரியாகச் செல்கிறீர்கள் என்றே பொருள். துணிவான உங்கள் கருத்துக்களை இவர்களின் மிரட்டல்களுக்கு அஞ்சாமல் தொடர்ந்து வெளிக்கொணர வேண்டுமென்பதே எனதும் என்போன்ற பலரதும் அவா.

- முகுந்தன், யாழ்ப்பாணம்.

கடந்த சஞ்சிகையில் ஆபாசப் படங்கள் கூடுதலாக உள்ளது. அதனால் முழுக் குடும்பமும் பார்க்கும் அமுதை இம்முறை ஏனையோர் பாரா வண்ணம் மறைத்து வைக்க நேர்ந்தது. இச் சங்கடம் என்போன்ற குடும்பப் பெண்களுக்கு ஏற்படா வண்ணம் இனிவரும் அமுது இதழ்களைத் திருத்திக் கொள்வீர்களா?

- எஸ்.எப். ஷாமிலா,
வரக்காப்பொள.

'தன்னலமற்ற சேவை - மனப்பாங்குடன் பணி ஆற்றி மகத்தான தொண்டைத் தொடர மனத் தைரியமும் மக்கள் அபிமானமும் பெற்று- சிறப்புற வாழ்த்துகின்றேன். அமுதே உன் சேவையினை!" மிலேனியத்தில் வெளிவந்த அமுது படு சூப்பர். எழுத்தாளர் பாலா சங்குப்பிள்ளையின் "புயலான பூ" சிறுகதை மலையகத்தில் மதுவுக்கு அடிமையாயிருக்கும் ஒரு சிலரின் வாழ்க்கையினை எடுத்துக்காட்டியது.

- தேவி காளிமுத்து.
அன்கரனோயா.

'அற்பத்தனமான அரசியல் ஆலோசனை' என்ற தலைப்பில், மக்களுக்கோ நாட்டுக்கோ சற்றேனும் தேவையில்லாத விடயங்களை அலசி வீணாக ஒரு பக்கத்தைப் பழுதாக்கியுள்ளீர்கள். இதனையும் (அன்ரன் பாலசிங்கம் சந்திரிகாவை ரணில் தம்மிடம் தந்தால் தன் மனைவி கோபிப்பாரே என மாவீரர் தினத்தில் பேசியதை) ஒரு 'ஜோள்ளு' என நீங்கள் ஒதுக்கியிருக்கலாம்.

எத்தனையோ கனவுகளோடு, எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு எம்மவர் வெளிநாட்டில் படும் வேதனைகளை ஆற்றும் நோக்கில் பாலசிங்கம் அப்படிக் கூறியிருக்கலாம். இதையெல்லாம் வீணாகத் தூக்கிப் பிடிக்காதீர்கள். விட்டு விடுங்கள்.

தமிழனின் பெருமையினை- இறமையினை- பண்பினை- கலாசாரத்தினை கொச்சைப்படுத்த முனையும் பேனாவின் காதலருக்கு, எம்மையும் பேனா எடுத்தெழுதும், முகவரி தாருங்கள் உங்கள் முகத்திரையைக் கிழிக்கும்.

-இதயநிலா, வல்வெட்டித்துறை

உங்கள் சஞ்சிகையைப் பார்க்கவே அருவருக்கிறது. இப்படியான ஆபாசப் படங்களை ஏன் போடுகிறீர்கள்? எனது மகள் உங்கள் சஞ்சிகையின் அருகி வரும் விலங்குகள் பக்கத்தைச் சேகரிப்பதற்காக வாங்கி வருகிறார். அவரிடம் இப் புத்தகத்தை வாங்கிக் கொடுக்க முடியாதபடி இப் படங்கள் மனங் கூச வைக்கின்றன. மாற்றிக் கொள்ள மாட்டீர்களா?

- எம்.சி. சலாம்,
வெல்பொத்துவெவ.

நக்கீரனின் நெற்றிக்கண் அர்த்த புஷ்டியாக இருக்கிறது. நன்றிகள். புலிகள் செய்வது அனைத்துமே சரியானவை என்று நாம் எப்போதுமே கூற விரும்பவில்லை. அதைச் சுட்டிக்காட்ட வேண்டாமென்றும் நாம் கூறவில்லை. சுட்டிக்காட்டுவது சுதந்திரமாக இருக்க வேண்டும். முஸ்லிம்கள் இங்கு இல்லையென்பதால் அவர்களுக்கும் எங்களுக்கும் உறவில்லைஎன்பதா? ஏன், இங்கிருந்து தமிழர்கள் படும் கற்பழிப்புகளுக்கும் கை விரிப்புகளுக்கும் அவர்களும் ஆளாகவில்லை என்ற கவலையா? வேண்டாம். அவர்கள் அங்கேயே இருக்கட்டும். இனிதான அரசியல் உதயமாகும்போது நாம் நிச்சயம் முஸ்லிம்களுடன் கைகோர்த்துக் கலகலப்போம்....

- தமிழ்த் தாடி, யாழ்ப்பாணம்.

அமுது பெப்ரவரி இதழில் வந்த (நல்லதோர் வீணையில்) ஆசிரியரின் 'உயிர்' என்ற அம்சம் எம்மை மயிர் சிலிர்க்க வைத்துவிட்டது. உயிரின் பெறுமதியை எடுத்துக் காட்டியவிதம் அருமையிலும் அருமை...! அமுது மாதத்தின் முதல் வாரத்தில் வெளிவர ஆவன செய்யவும். குடும்பத்தோடு சேர்ந்து பார்க்க முடியாதுள்ள சில புகைப்படங்களைத் தவிர்த்து அமுது வெற்றி நடை போடுமென்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி விடை பெறுகிறோம்.

- சியாஜ்(னா). சயானா(ஜி),
கற்பிட்டி.

அமுதே அமுதசுரபி போல் உன்னில் இருந்து வெளிவரும் அனைத்து அம்சங்களும் நிறைவாகவே இருக்கின்றன.

"வெள்ளிப் பனி மீது" ஜனவரி மாத இதழுடன் கலண்டர் தந்து அசத்திவிட்டாய். பாலா சங்குப்பிள்ளையின் "புயலான பூ" சிறுகதை பிரமாதம். ஓராண்டு காலமாக நீ வெளிவந்தாலும், உன்னைக் கண்டதே நான் உன் அரையாண்டில் தான்.

- அ. சசிகாந்தன்
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே...



பொது சன நூலகம் 2006
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

வாழ்க்கை
அதன் அர்த்தம்தான் என்ன?
வெறுமனே உழைத்து, உண்டு, உறங்கி, இனம்பெருக்கி மடிவதா? அல்லது அதற்கும் மேலாக ஏதேனும் உள்ளதா?

வாழ்வின் அர்த்தம் அது வாழப்படுவதில்தான் துலங்குகிறது. ஒரு வீணை என்பது என்ன? மரத்துண்டும் இரும்புக் கம்பிகளும் சேர்ந்து கட்டப்பட்ட சடப்பொருளா? அது அற்புதமான ராகங்களை மீட்டுகின்ற கலைப்பொருளல்லவா? அது எப்படி மீட்டப்படுகின்றது என்பதைப் பொறுத்துத்தான் அதன் அற்புதங்கள் புலப்படுகின்றன. மீட்டப்படாத வீணை விறகுக்குச் சமன். வாழப்படாத வாழ்க்கையும் அப்படியே!

வெறுமனே, ஓடுகின்ற ஆற்றில் மிதக்கின்ற மரக்கட்டைபோல், எம்மைச் சூழலுக்குள் தொலைத்து விடுவது ஒரு வாழ்க்கையல்ல.
வாழ்க்கையை வாழுதல் என்பது ஒரு பிரக்ஞை பூர்வமான செய்கை. பொறுப்பு வாய்ந்த செய்கை. பக்குவமான செய்கை. அதேவேளை ஒரு கலைத்துவமான செய்கை.

'மனிதனது மதிக்கமுடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவைதான் வாழ முடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கிவிட்டேன் என்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பில்லாத வகையில் அவன் சீராக வாழவேண்டுமென்று புகழ்பெற்ற எழுத்தாளர் ஒஸ்திரோவ்ஸ்கி எழுதியதுபோல் நாம் எம் வாழ்வை அர்த்தபுஷ்டியாக்கிக் கொள்ள விளைய வேண்டும்.

உன் குடும்பத்துக்காக என்ன செய்தாய், சமுதாயத்துக்காக என்ன செய்தாய், நாட்டுக்காக என்ன செய்தாய், இந்த உலகுக்காக என்ன செய்தாய் என்ற கேள்விகளில் எதுவரை எம்மால் பதிலளிக்கக் கூடியதாய் உள்ளதென்பதிலேயே எம் வாழ்க்கையை நாம் மதிப்பிட முடிகிறது. பலர் முதற் கேள்விக்குள்ளேயே முடங்கிவிட, ஒருசிலரே கடைசிக் கேள்விவரை மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பதிலளிக்கக் கூடியவர்களாக மிளிர்கிறார்கள்.

ஒருவன் தனது கடப்பாடுகளில் எதுவரை பங்காற்றினானென்பதைப் பொறுத்தே அவனது வாழ்வின் மகிமை மதிப்பிடப் படுகிறதேயன்றி பிறப்பாலோ, செல்வத்தாலோ, அதிகாரத்தாலோ அல்ல

ஆ - ர்.



எதிர்பாருங்கள்!
அமுது
திருத்திய வடிவில் புதிய பொலிவுடன் விரைவில் உங்கள் கரங்களில்...

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அடிய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
ந. சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும் வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00 மணி முதல்
1.00 மணி வரை

**11%**

**சேமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபோங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 - 331101, 565998 அல்லது 565624

பிரமுக வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினியால் அழிந்திடுமா? பறவை ராஜாக்கள்!

வானத்தில் கழுகு பறந்தால் கீழே பிணம் இருக்கும் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம். பிணத்தை மட்டுமல்ல உயிரோடிருக்கும் பறவையை, மிருகத்தைக் கூட சண்டைக்கிழுத்து கொன்று சாப்பிடுவதிலும் கழுகுகள் கெட்டித்தனம் வாய்ந்தவை.

பறவைகளில் மிடுக்கானதும் வீரமானதும் கழுகுகள்தான். இது பயங்கரமான பறவையும் கூட. தன் வயிறை நிரப்ப எந்த இரை தேவை என நினைக்கிறதோ அதையே வேட்டையாடிச் சாப்பிடும் கழுகு.

பருந்தும் கழுகுக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு பறவையே. பருந்தில் இரண்டு வகையுண்டு. ஒன்று பறைப் பருந்து மற்றையது கருடன்.

இறைச்சி, மீன் என்பவையே இவற்றுக்கு விருப்பமான உணவு வகைகள். இவற்றின் அலகு வளைந்து கூர்மையாகக் காணப்படும். கருடன் மஹா விஷ்ணுவின் வாகனம் என்ற இந்துக்கள் வணங்குகிறார்கள்.

கழுகுகளில் பிரதானமாக 3 வகைகள் உண்டு. பாஸ், வல்லூறு, வேட்டை ராஜாளி.

மூன்றிலும் **பாஸ்** மிகப் பெரியது. பண்டைய இலக்கியங்கள் பலவற்றில் இப்பறவை பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆணை விடப் பெண் பாஸ் பயங்கரமானது.

மன்னர் அக்பர், அவரது புதல்வர் ஜஹாங்கீர் ஆகிய இரு மொகலாயச் சக்கரவர்த்திகளும் பொழுதுபோக்கிற்காகக் கழுகு வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்ததாக சரித்திரம் கூறுகிறது. இங்கிலாந்தின் முதலாவது எலிசபெத்தும் ஜெர்மனிய அதிபர் மஹா பிரடெரிக்கும் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான். இவர்கள் கழுகை வளர்த்து, அதனைக் கொண்டு ஏனைய பறவைகளை வேட்டையாடி இன்பம் கண்டனர்.





**கழுகுகள் காட்டில் பறக்கும் போது நான்கு கால் மிருகங்களும் பயப்படுவதுண்டு. யானை கழுகைக் கண்டதும் பயங்கர சப்தமெழுப்பும். சிங்கக் குட்டிகளையும் தூக்கிச் செல்வதற்கு கழுகுகள் ஒருபோதும் பின்நிற்பதில்லை.**

சிரியா, ரோம், ஜேர்மன், பேர்ஸியா போன்ற நாடுகளில் அதிகார இலச்சினையாகவும், அமெரிக்க காங்கிரஸின் இலச்சினையாகவும் இருக்கிறது கழுகு. ஏன், எமது நாட்டின் காப்புறுதி நிறுவனமொன்றின் குறியீடாகவும் விமானப் படையின் குறியீடாகவும் காணப்படுகிறது.

நமது ஊர்களில் கோழிக் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு செல்வது வல்லூறு எனும் கழுகுகள். வல்லூறுகள்தான் கழுகு வகைகளில் மிகத் துணிச்சலானது. ராஜாளி பொறுமையாக இருந்து வேட்டையாடும் கழுகு. இரை வரும் வரை காத்திருந்து தாக்கும். இதன் சிறிய ரகக் கழுகு ஷிகாரா எனப்படுகிறது.

திடகாத்திரமான கழுகுகள் 4 அடி வரை நீளமானவை. கழுகுகள் தன் சிறகை விரித்தால் 8 அடி வரையில் நீளும். இந்த விரிந்த சிறகுகள் இரை தப்பா வண்ணம் மூடிக்கொள்ளும். அதே நேரம் சுமார் 10 கிலோவுடைய தன் உடம்பைத் தூக்கிக் கொண்டு ஆயிரம் அடி உயரத்திலிருந்து கூர்மையான கண்களால் பார்த்து 110 கி. மீற்றர் வேகத்தில் குத்தெனப் பறந்து வந்து தன் கால்களால் இரையை லப்கெனக் கௌவிக்கொண்டு உயரே பறந்து சென்றுவிடும்.

உயரமான மலைகளில், நிலத்தில் இலை, குழைகளைக் கொண்டு கூடு கட்டும். மரத்தில் கூடு கட்டுவதில்லை. குடும்பம் பெரிதாக பெரிதாக இதன் வீடும் பெரிதாகும். பெண் கழுகுகள் பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரை 2-3 முட்டைகளை இடும். 5 கிழமைகளில் குஞ்சு வெளியே தலைகாட்டும். குஞ்சுகளுக்கு நாலு வாரம் வரும் வரை தாய்க் கழுகோ, தந்தைக் கழுகோ அருகிலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும். குஞ்சுக்கு அப்பா ரொம்ப செல்லமாம்.

கழுகு ஜோடிகளின் காதல் விந்தையானது. விமான அதிசய சேர்க்கஸ் போன்றது. இவை ஒன்றை விட்டு ஒன்று பிரிவதில்லை. விமானங்கள் பறப்பது போன்று காதலனும் காதலியும் மேலே பறக்கும். அந்த உயரத்தில் பெண் கழுகை ஆண் கழுகு தன் இறகுகளால் இறுக அணைத்துக் கொள்ளும். அப்படி அணைத்தபடியே துளியும் விலகாமல் அப்படியே செங்குத்தாக கீழ் நோக்கி விழுந்து தரைக்கு சில அடி உயரத்தில் கச்சிதமாக விலகி மேலே பறந்து செல்லும். அவை வானத்திலேயே கலவி செய்கின்றன.

கழுகுகள் தன் கால்களிலுள்ள நகங்களைப் பாவித்தே இரையை வேட்டையாடுகின்றன. காலால் இரையை வேகமாகத் தாக்கி நகங்களால் துண்டு துண்டாகக் கிழித்து விடும்.

கழுகுகள் காட்டில் பறக்கும் போதுநான்கு கால்மிருகங்களும் பயப்படுவதுண்டு. யானை கழுகைக் கண்டதும் பயங்கர சப்தமெழுப்பும். சந்தர்ப்பம் நேர்ந்தால் சிங்கக் குட்டிகளையும் தூக்கிச் செல்ல கழுகுகளால் முடியும்.

இதனாலேயே பறவைகளின் ராஜா என கழுகுகள் அழைக்கப்படுகிறது. ஐநூறு வருடங்களுக்கு முன்னரே அரச சின்னங்களாக இடம்பெற்றுவிட்ட கழுகுகள் எதிர்காலத்தில் சின்னத்தில் மாத்திரமே இருக்க வேண்டிய பரிதாப நிலை தோன்றி வருகிறது. ஏனெனில் நகரமயமாக்கல் திட்டத்தினால் துரிதமாக காடுகள் அழிக்கப்பட, கழுகுகளுக்கான இரையும் குறைந்து செல்கிறது. பட்டினி கிடந்து மடிய வேண்டிய நிலை கழுகுகளுக்கும்.

- எச். எஸ். டீன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேச்சு வார்த்தையில் விலகிநிற்க்ககோரும் பத்திரிகைப் பலாத்காரம்




நக்கீரன்

புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான மத்தியஸ்த்த முயற்சிகள் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்ததுதான் தாமதம் தமிழ்ப் பத்திரிகைகள் சில ஒரு பகீரத முயற்சியில் இறங்கியிருக்கின்றன. அவை 'நடுநிலைப் பத்திரிகைகள்' என்று தம்மைத் தாமே அழைத்துக் கொண்டாலும் (-நடுநிலைமை என்று ஒன்று உண்மையில் இருக்கிறதா என்பது வேறு விடயமாக இருந்தாலும்) யாருக்கோ 'நடு நடுங்கிய' நிலையில் பணியாற்றும் தொண்டு வேலையைத்தான் செய்வனவாக இருக்கின்றன.

இல்லையேல் ஒரு நடுநிலைப் பத்திரிகை எப்படித் துணிந்து தமிழ்த் தரப்பின் ஏனைய சகல பிரதிநிதிகளையும் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகி நிற்கும்படி திரும்பத் திரும்ப வலியுறுத்த முனையும்?

சாதாரணமாக யோசித்தால் எவ்வளவுக்கு எவ்வளவு தமிழ்த் தரப்பினர் கூடுதலாகப் பேச்சுவார்த்தைகளில் பங்காற்றுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகளை வலியுறுத்த முடியும் என்றல்லவா சிந்திக்கத் தோன்றும்? மாறாக ஏன் இவை எவ்வளவுக் கெவ்வளவு தமிழ்த் தரப்பினரை விலகி நிற்கும்படி செய்ய முடியுமென முனைகின்றன.

திம்பு பேச்சுவார்த்தையில் தமிழ் இயக்கங்களும் கட்சிகளும் ஒன்றுபட்டுப் பேசின. தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் தீர்வு பற்றிய முக்கியமான ஒரு விடயத்தையிட்டு நடத்தப்படும் இந்தப் பேச்சுவார்த்தைகளிலும் அவை ஒன்றுபட்டுப் பேசுவதையே நாம் வரவேற்க வேண்டும். அதைவிடுத்து புலிகளைத் தவிர ஏனையோர் விலகி நிற்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த இப் பத்திரிகைகள் முற்படுவது தலைகீழான அணுகுமுறையாக இருக்கிறது.

ஜனநாயகம் பற்றியும் ஐக்கியம் பற்றியும் கருத்துச் சுதந்திரம் பற்றியும் பெரிதாகப் பிரஸ்த்தாபிக்கின்ற இந்தத் தமிழ்ப் பத்திரிகைகள் எப்படி தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தங்கள்கருத்தைக்கூறுவதற்கும்தமதுதரப்பைப்பிரதிநிதப் படுத்துவதற்கும் உரிய ஜனநாயகத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் மறுக்கின்றன? எங்கே போனது இவர்களது 'நடுநிலைமை'?

'நடுநிலைமை' பற்றிப் பெருமை பேசிக் கொள்கின்ற இந்தப் பத்திரிகைகள் உண்மையில் தாம் கூறிக்கொள்ளுவதுபோல்நடந்துகொள்பவர்களாக இருந்தால் தந்தை செல்வநாயம் காலம் தொட்டு இன்றுவரை நிகழ்ந்து வரும் இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பங்களித்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் புறந்தள்ளி நின்று புலிகளுக்கு மட்டுமே வழிவிடுங்கள் என்று கோருவது,- அதையும் தாண்டி ஒருவகை பத்திரிகைப் பலாத்காரத்தைச் செலுத்தி அவர்களை நிர்ப்பந்திப்பது, எப்படி நியாயமென்றாகிறது? புலிகள் தம்மை மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வது வேறு. அதை இந்த 'நடுநிலையாளர்கள்' எப்படி வழிமொழிய முடியும்?

இப் பத்திரிகைகள் நடந்து கொள்ளும் விதம் புலிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் ஏவலாட்களின் செயற்பாடாகவேதென்படுகின்றனவேயன்றிஒருநடுநிலையாளரின் செயற்பாடாகத் தென்படவில்லை.

இவை முதலில் 'ஏனைய தமிழ்க் கட்சிகளை பேச்சுவார்த்தையிலிருந்து அரசாங்கம் விலத்தி வைக்க வேண்டும்' எனப் புலிகள் நிபந்தனை விதித்துள்ளதாகத் தலைப்புச்செய்திவெளியிட்டார்கள்.அதன்பின்சிலதமிழ்க் கட்சிகள் புலிகள் பேசி தீர்வு காண முடியுமானால் தாங்கள் விலகி இருக்கத் தயார் எனக் கூறியுள்ளதாகச் செய்தி வெளியிட்டார்கள். அதன்பின் அவ்வாறு கூறிய தமிழ்க் கட்சிகளை நம்பவும் முடியாதெனவும் அவர்கள் இப்படிக் கூறிக்கொண்டாலும் தாமும் இதில் தலையிடுவதற்கு மறைமுகமாக முனைவர்கள் என்ற வகையில் தம்மைத் தாமே புலிகளின் நிலையில் நிறுத்தி கருத்துக் கூறினர்.

இதில் இச் செய்திகள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றனவென்றால், சில தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்களுக்கு தொலைபேசி எடுத்து 'புலிகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தையிலீடுபடுவதற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பீர்களா' என வினவப்படும். அவர்கள் இயல்பாக இல்லை என்று பதிலளிப்பதை இப் பத்திரிகைகள் 'தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துடனானபுலிகளின்பேச்சுவார்த்தையில்தமிழ்க் கட்சிகள் விலகிநிற்கத் தயார்' எனத் தமக்கு ஏதுவான தலைப்பாக மாற்றிக்கொள்ளும்.

புலிகளுடன் அரசாங்கம் பேசுவதை தடுக்கவேண்டுமென எந்தத் தமிழ்க் கட்சிகளும் கூறப்போவதில்லை. ஆனால் தாம் பேசுவதைப் புலிகள் தடுப்பதையும் எந்தக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எனினும் இந்தத் தமிழ்ப் பத்திரிகைகள் செய்திவெளியிடும்விதம்மிகவியப்பானதாக இருக்கும். அதாவது தமிக் கட்சிகள் தம்மைத் தாமே தமிழ் மக்களின் சார்பாகப் பேச அருகதையற்றவர்களாக ஏற்றுக்கொண்டு விட்டதாக இவர்களின் செய்திகள் அமையும். அவ்வாறானால் அவை தனித்தனிக் கட்சிகளாக இயங்க வேண்டிய அவசியமில்லை, கட்சியைக் கலைத்துவிட்டுப் போக வேண்டியவர்களல்லவா?

தமிழர்களுக்கு ஒரேயொரு பெரிய தமிழ்ப் பத்திரிகை இருந்தால் போதும் மற்றய பத்திரிகைகளையெல்லாம் இழுத்து மூடுங்கள் என்று யாராவது சொன்னால் அதனை ஏற்குமா இப் பத்திரிகைகள்?

அத்தோடுதமிழ்த் தரப்பினர் அரசாங்கத்தோடு இதுவரை நடத்திய தொடர்ந்த பேச்சுவர்த்தைகளில் அரசாங்கத்தை பல்வேறு விடயங்களில் இணங்க வைக்க எடுத்த முயற்சிகளை வெறுமனே உதாசீனக் கண்ணோட்டத்தோடு இப் பத்திரிகைகள் அலட்சியப்படுத்தவும் முடியாது. ஒவ்வொரு சிறு நகர்வுக்கும் பெரியதொரு பிரயாசை இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை இவர்கள் மதிக்கவும் தெரிய வேண்டும்.

அதேவேளை பாராளுமன்றத்திலுள்ள தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் தத்தமது சொந்தப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள இரகசியமாக அணுகுகின்ற இப் பத்திரிகைப் பிரமுகர்களையும் பத்திரிகையாளர்களையும் பற்றி வெளியுலகுக்கு எதுவுமே தெரியாதென இவர்கள் நினைத்துக் கொள்ளவும் கூடாது.

புலிகளும் பேச வேண்டும், அவர்களைக் கட்டாயம் பேச அழைக் கவேண்டும் என்பதில் யாருக்கும் எதிர்ப்பு இருக்க முடியாது. ஆனால் அதற்காகமற்றவர்களுடன் பேசக்கூடாது என்பதும் ஒருபோதும் நியாயமாகாது. பத்திரிகை முதலில் நியாயத்தின் பக்கம் நிற்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு பத்திரிகைக்கே மக்கள் சார்பாகக் கருத்துக்கூற,அல்லதுதான்நினைப்பதைத்தான்மக்களின் கருத்தென்றுகூறஎவ்வாறுஉரிமைஇருக்கிறதோஅதைவிட மக்களின் பிரதிநிதிகளாக விளங்கும் கட்சிகளுக்கு தாம் பிரதிநிதப்படுத்தும்மக்கள் சார்பாக, அவர்களுக்கான அரசியல் தீர்வில் கருத்துக் கூற உரிமை இருக்கிறதல்லவா? மக்கள் பிரதிநிகளுக்கு அம் மக்களின் தீர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க உரிமை இல்லை என்றுகூறுவது எவ்வகையில் நியாயம்?

நீண்டகாலமாக இவ்வாறான பத்திரிகையாளர்கள் இப்படியான சுதந்திரத்தைத் தாமே எடுத்துக்கொண்டு நடுநிலை எனத் தாம் வகுத்த கருத்தை மட்டுமே வலியுறுத்திவிட்டுப் போகப் பழகிக் கொண்டதால் தாம் செய்வது ஒருவகை சர்வாதிகாரம் என்று உணரக்கூட முடியாதவர்களாகிப் போனார்கள்.

யுத்தமென்பது வேறு, அரசியல் தீர்வு என்பது வேறு. யுத்தம் குறித்த விடயங்களைப் புலிகளுடன் மட்டுமே பேச முடியும். ஏனெனில் அவர்களே யுத்தம் புரிபவர்கள். ஆனால் அரசியல் தீர்வு என்பது மக்களுக்கானது.

அதை இப் பத்திரிகைகள் ஏற்கிறார்களா? அவ்வாறு ஏற்பார்களானால் அத் தீர்வு எந்த ஒரு தனிப்பட்ட கட்சிக்குமானதல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டியவர்களாகிறார்கள். அப்படியானால் அத்தகைய ஒரு பேச்சுவார்த்தையில் சகல தமிழ்த் தரப்பினரும் ஈடுபட வேண்டுமென்பதே இங்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

முதலில் இந்த ஜனநாயகத்தை அவர்கள் புரிந்து கொள்ளட்டும். புலிகளைத் திருப்தி செய்வதுதான் பத்திரிகா தர்மம் என்ற பிரம்மையிலிருந்து மீண்டு உண்மையான தர்மம் பற்றி தமிழ்ப் பத்திரிகை உலகம் உணரத் தலைப்படவேண்டும். இல்லையேல் எவ்வாறு அவசரகாலச் சட்டத்துள் சதா செயற்பட்டு சிவில் உரிமைகள் என்றால் என்னவென்று எமது பொலீஸாருக்கு இன்று தெரியாமல் போய் விட்டதோ, அதேபோல் எமது தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கும்மக்கள்சார்புஎன்பதுஎன்னவென்பதே தெரியாமல் போய்விடும். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாசலைத் தாண்டிய கடிதங்கள்

31-2-2000ல் புலிகளால் யாழ். விமானப் பயணிகளுக்கு விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தங்களால் விதிக்கப்பட்ட பயணத் தடை இத்துடன் நீக்கப்படுவதாக அறிவித்துள்ளனர். இதில் இருந்து ஓர் உண்மையை அவர்களே காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

தங்களால் முடியாததால் எட்டாத பழம் புளிக்கும் என்று நரி சொன்ன கதைதான் உடன் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. 10-12-99ல் இருந்து குடா நாட்டு மக்கள் மீது புலிகள் தொடுத்திருக்கும் ஷெல் தாக்குதலைக்கூட இங்குள்ள பத்திரிகைகள் நியாயப்படுத்தி வருகின்றன.

இது போன்ற பத்திரிகைகள் இருப்பதிலும் பார்க்க, இல்லாமல் இருப்பது மேலானது. தனக்கிளப்பு, அறுகுவெளி பகுதிகளில் 4500 ஏக்கர் வயல் நிலங்களில் புலிகளால் நெல் அறுவடை செய்ய முடியாமலும், குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, அரியாலை, கேரதீவு போன்ற இடங்களில் மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் போன்ற பல கோடி பெறுமதியான பொருட்களும் எடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் பல்லாயிரககணக்கான மீனவர்களின் வயிற்றிலும் மண்ணை அள்ளி தூவிவிட்டார்கள். பத்திற்கும் மேற்பட்டவர்கள் இறந்தும் 25ந்திற்கும் மேல் காயப்பட்டும் உள்ளனர். பல ஆயிரம் மக்கள் வீடு வாசல்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இவைகளைத் தட்டிக் கேட்பதற்கு இந்த குடா நாட்டில் யாரும் இல்லையா?

மனித உரிமைகள் அமைப்புக்கள், சமாதானத்துக்கான நல்லெண்ணக் குழுக்கள், "யாழ் ஆயர் மன்றம்", துணிச்சலான பத்திரிகைகள் என்று தம்மையே புகழ்ந்து செய்தி பிரசுரிக்கும் செய்தித்தாள்கள் இன்னும் எத்தனையோ நிறுவனங்கள் எல்லாம் மௌன விரதம் அனுஷ்டிக்கின்றன.

அரச படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் அதுவும் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கம் ஒரு சில கோயில்களுக்கு பூசை உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றனவே என்று குறை கூறும் இந்து சமயப் பேரவை, மற்றும் சமய நிறுவனங்கள், இந்து குருமார் ஒன்றியம் போன்றன யாழ் கரையோரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் வழிபாட்டுக்கு புலிகளால் தடை விதிக்கப்பட்டதைக் கண்டும் காணாது இருப்பதுவும் கவலைக்குரிய விடயம். எனவே என் ஆதங்கத்தை வெளிப்படுத்த அமுதுவிடம் சரண் அடைகின்றேன். வாசலைத் தாண்டி அதற்குள் ஒரு இடம் தருவாயா அமுதமான அமுதே.... **யாழவன்**

ஐயா, நாம் வன்னியில் வாழ்கின்ற வஞ்சிக்கப்பட்ட மக்கள். எம் வாழ்வை ஆண்டவனிடம்தான் அர்ப்பணித்துள்ளோம். நான் ஒரு விசுவாசமான கத்தோலிக்கன். மனசாட்சியோடு வாழ விரும்புபவன். ஆனால் என் மனதில் இருக்கின்ற ஒரு உறுத்தலை யாரிடம் சொல்லுவது என்ற வேதனையோடு இதை எழுதுகிறேன். அதாவது எனக்குத் தெரிந்த ஒரு உண்மை ஆண்டவனின் சந்நிதியிலேயே மூடி மறைக்கப்பட்டுள்ளதை நான் சகித்துக் கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். இதைச் சொல்வதுகூட தெய்வ நிந்தையோ என்றும் எனக்குத் தெரியாது.

இந்தப் புத்தாயிரமாம் ஆண்டு பிறக்கும்போது அதற்கான ஆராதனைகளை நாட்டு மக்களுக்கு ஒலிபரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த அன்டனி மரிய தாஸ் என்ற எனது நண்பர் அப்பணியிலீடுபட்டு க்கொண்டிருக்கும் போதே, வவுனியா தேவாலய வளவுக்குள் வைத்தே விடுதலைப் புலிகளால் காரணமின்றிச் சுட்டுக் கொலலப்பட்டுள்ளார். கடந்த மில்லேனியத்தில் இவ் வுலகில் நிகழ்ந்த கடைசிக் கொலை அது. போப்பாண்டவர் அவர்கள் இந்த மில்லேனியத்தின் சமாதானத்துக்காகப் பிரார்தித்த போது அதன் பிறப்புக்கான ஆராதனையே கொலையுடன் முடிந்ததையிட்டு கிறிஸ்தவர்கள் வேதனைப்படாமல் இருக்க முடியுமா?

இங்கு நிகழ்ந்த வஞ்சனை யாதென்றால் இவ் அன்டனி மரியதாஸுக்கு, கிறிஸ்த்தவ சபை சார்பில் வடமாகாண ஒலிபரப்புத் தொடர்பாளராகப் பணிபுரிய நியமனம் வழங்கியவர் எமது பெரு மதிப்புக்குரிய மன்னார் ஆயர் ராயப்பு யோஸப் அவர்களே. அவருக்கான சம்பளத்தை வழங்கி வந்ததும் கிறிஸ்தவ சபையே. ஆனால் அவரை நியமனம் செய்த ஆயரே, அவர் சுட்டுக் கொல்லப்பட்டதையிட்டு எவ்விதக் கண்டனமோ, கேள்வியோ எழுப்பவில்லை. தன்னால் நியமிக்கப்பட்டவர் என்ற பொறுப்பைக் கூட அவர் எடுக்கவில்லை. அவன் எவ்வித்தத்தில் குற்றவாளியென்றாவது எம்மால் அறிய முடியவில்லலை. புனிதமான இறைபணியை மேற்கொள்ளும் இப்பெருந்தகைகளின் மௌனம், ஆண்டவனுக்கு நியாயமானதாவென எளியவனான எனக்குப் புரியவில்லை. புனிதர்களாலேயே வஞ்சிக்கப்பட்டு அநாதைபோல 'துரோகி' என்ற பொய்யான பெயரைச் சுமந்துகொண்டு இம் மண்ணுள் புதையுண்டு கிடக்கிறான். கர்த்தராவது அவனை ஆசீர்வதிக்கட்டும்.-

**எனது பெயரைக் குறிப்பிட்டால் இன்னொரு பாவம் நிகழ்ந்துவிடலாமென்ற அச்சத்தில் தவிர்த்துக் கொள்கிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்(கை) கொடுக்காத எதிர்க்கட்சி...



எந்த அரசாங்கமாவது இனப்பிரச்சினையைத தீர்க்க ஏதாவது ஒரு முயற்சியை எடுக்கும்போது எதிர்க்கட்சி எப்படியா வது அதைக் குழப்பியடித்து விடும். இதுவே இந்நாட்டில் காலா காலமாக நடந்து வரும் கேடு கெட்ட எதிர்க்கட்சி விளையாட்டு.

இலங்கை அரசியலில் ஒரு விளையாட்டு எப்போதும் உள்ளது. அது கடற்கரையில் மணல் வீடு கட்டுவதைப்போல கட்டக்கட்டக் கலைக்கின்ற விளையாட்டு.

அதாவது, எந்த அரசாங்கமாவது இனப்பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது ஒரு முயற்சியை எடுக்கும்போது எதிர்க்கட்சி எப்படியாவது அதைக் குழப்பியடித்து விடும். இதுவே இந்நாட்டில் காலா காலமாக நடந்து வரும் கேடு கெட்ட எதிர்க்கட்சி விளையாட்டு.

எல்லாவற்றையுமே ஆட்சிக் கதிரையைப் பிடிக்கும் முயற்சியாகவே பயன்படுத்தப் பழகிவிட்ட இந்த எதிர்க்கட்சி மனோபாவம் இவ் இனப் பிரச்சினையையும் அதற்கே பயன்படுத்தி வர வர அதைப் பிரம்மாண்டமான தீர்க்க முடியாத பிரச்சினையாக ஆக்கி விட்டு நிற்கிறது.

இவ் விளையாட்டுக்கு அது எடுத்துக்கொண்ட கருவி இனவாதமே. எப்போதும் எதிர்க்கட்சிகளின் செயற்பாடு "அரசாங்கம் தமிழனுக்கு இந்த நாட்டைத் தாரை வார்த்து விடப் போகிறது" என்ற இனவாத உணர்ச்சியைக் கிளறுவதாகவே இருக்கும்.

இப் பிரச்சினையின் உச்ச நிலையால் இன்று தென்பகுதியும் பேராபத்துக்குள்ளாகி, ஜனாதிபதிமுதல் சாதாரணமக்கள் வரை உயிர்கள் என்னேரமும் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையிலும் இவர்கள் இந்த அபாய விளையாட்டை நிறுத்துவதாக இல்லை.

இவ் அபாயகர நிலைமைக்கும், அதனால் ஏற்படும் அனர்த்தங்களுக்கும் ஆளும் அரசாங்கத்தை மிகச் சுலபமாகக் குற்றம் சாட்டி விட முடிகின்ற இந்த எதிர்க்கட்சிகளிடம் அதற்கான அர்த்தமுள்ள தீர்வைக் காண உதவும் மனோபாவம் இல்லை.

இன்று சில அதி முக்கியமான அரசியல் தீர்வுமுயற்சிகள் அரங்கேறியுள்ளன. இம் முயற்சிளில் ஒரு நல்ல பெறுபேறாக நோர்வே நாட்டு அனுசரனையுடன் புலிகளோடு பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதன் ஆரம்ப கட்ட முயற்சிகள் வெற்றிய எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் சம்மதமும் இவ் அனுசரனையாளர்களால் முறைப்படி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பித்தால் அரசாங்கம் ஒருதெளிவான அரசியல் தீர்வை அப் பேச்சு வார்த்தைகளின் முன்வைக்க வேண்டியது அவசியமான ஒன்று. அப்படியான அரசியல் தீர்வு புலிகள் நியாயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு குறைந்த பட்ச வடிவத்தையாவது கொண்டிருக்க வேண்டும்.

அதற்கேற்ப அரசாங்கம் ஏற்கெனவே தான் முன்வைத்திருந்த அரசியல் தீர்வைச் செப்பம் செய்யும் முயற்சியில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளும், பாராளுமன்றத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

அடுத்தபடியாக எதிர்க்கட்சியான ஐ.தே.க. வுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு தமிழ்க் கட்சிகளுடன் சர்ச்சைக்குரியபிரச்சினைகளில் உடன்பாட்டைஎட்டமுயலவிருந்த தருணத்தில் ஐ.தே.க. மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற விதமாக இதற்குத் தடைகளைப் போட முற்பட்டுள்ளது.

முதலில் ஜனாதிபதி நிர்ணயித்த தினத்தில் கலந்துரையாலைப் பகிஷ்கரித்தது. அதற்கு, அரசியல் ஆலோசனைகளில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனைப் படிப்பதற்கு கால அவகாசம் தேவையென்றும், அதே வேளை தாம் தமது ஆலோசனைகளை முன் வைக்கப் போவதாகவும் காரணம் கூறியது.

இதன்பின் தற்போது தனது ஆலோசனை என்ற ஒன்றை இப்போது முன்வைத்துள்ளது. இந்த ஆலோசனைகள் வெளித் தோற்றத்துக்கு ஒரு அக்கறையுள்ள நல்ல முயற்சி என்று தோன்றினாலும் இப் பேச்சுவார்த்தைகளைப் பின்னடிக்கச் செய்யவும் குழப்பவும் செய்கின்ற புது முயற்சியாகவே அமைந்துள்ளது.

முன்னைய காலத்தில் வெளிப்படையாக எதிர்த்த எதிர்க்கட்சி அரசியல் முறை சற்று மாறி இப்போதுவெளித்தெரியாமல்எதிர்க்கின்ற ஒரு நுட்பமான வடிவத்தைப் பெற்றுள்ளது என்பதே இங்கு பார்க்கக்கூடிய வித்தியாசம். நோக்கம் என்னவோ அரசாங்கம் தீர்வு கண்டுவிடாது தடுப்பதாகவே உள்ளது.

இதுவரைகாலமும் ஏதோ ஒரு செயற்பாட்டில் வடிவம் பெற்றுவந்த அரசாங்கத்தின் அரசியல் ஆலோசனைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அதைச் செப்பஞ் செய்வுதில் ஈடுபடாது, புதிய ஆலோசனைகளை இறுதி நேரத்தில் முன்வைப்பது சகலதையும் குழப்பியடிக்கவேமுனைவதாகும்.

இந்தஆலோசனைகளில்கூட இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆக்கபூர்வமான அரசியல் ஆலோசனைகள் எதுவும் காணப்படவில்லை. பதிலாக சில முட்டுக்கட்டைகளே நாசூக்காகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'பிரிக்கப்படாத இலங்கைக்குள் அரசியல் தீர்வு' காணப்பட வேண்டுமென அதில் குறிப்பிட்டுள்ள விடயம் தமிழ்க் கட்சிகள் கடுமையாக எதிர்க்கும் 'ஒற்றையாட்சி'என்பதைவலியுறுத்திநிற்கிறது. அதேபோல் 'சமூகத்தின் எல்லாத் தரப்பினரும் ஏற்கக்கூடிய நடைமுறைக்குரிய உடன்பாடு ஏற்பட்ட பின்னரே அரசியல் சட்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்' என அதில் குறிப்பட்டுள்ளது.

அது அழகாக இருந்தாலும், இந்நாட்டில் எந்தத் தீர்வையும் எதிர்க்கும் இனவாத சக்திகளையும் திருப்திப்படுத்த வேண்டுமென்றமறைமுகவலியுறுத்தலை மேற்கொள்கிறது. இது தீர்வை ஈட்ட முடியாது செய்கின்ற ஒரு தந்திரமான மார்க்மாகவுள்ளது.

இப்படியான 'கண்ணி வெடிகளை உள்ளே வைத்துவிட்டு' வெளியே தமிழ் மக்களைக் கவரக்கூடிய சில ஏமாற்றும் மேற்பூச்சுக்களை அது காட்ட முற்படுகிறது.

இந் நிலையில் இந்த எதிர்க்கட்சி அரசியல் எமக்கு எவ்வளவுதூரம் நம்பிக்கை தரப்போகிறது? •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்(கை) கொடுக்குமா நோர்வே?



இலங்கையின் எரியும் பிரச்சினையில் தீர்வு காண உதவும்கரமாகநோர்வே கை நீட்டியுள்ளது. நம்பிக்கை தருகின்ற கையாக அதை நாம் எதிர்பார்ப்போடு பற்றிக்கொண்டுள்ளது உண்மைதான். அந்த எதிர்ப்பார்பில் அர்த்தமும் உள்ளது.

இந்த இனப் பிரச்சினை சிறு பொறியாகத் தோன்றி இன்று கொடியயுத்தத்துடன்கூடியகோர முகம் காட்டிநிற்கின்ற இந்த நீண்டகால வரலாற்றில் எமக்குள்ளேயே பேசி இதைத் தீர்த்துக் கொள்ள வக்கற்றவர்களாக நம்மை நிருபித்துவிட்டோம்.

**நம்பிக்கை, என்பது இன்று இவ் இரு துருவங்களுக்கிடையிலும் இல்லையென்றாகி விட்டது.**

**இந் நிலையில் இன்னொரு கையை நாம் ஏங்கிநிற்பது யதார்த்தமே.**

**ஆனால் இடையேஇன்னொரு கை இப் பிரச்சினையில் ஈடுபடாமலும் இல்லை.**

**ஆம்! இந்தியா இப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க இடையே வந்துதான் இருந்தது.**

வேதனையில் வெதும்பிய போது "வாராயோ, வாராயோ" என்று வேண்டியழைந்தவர்களே அது வந்தபின் "போகாயோ, போகாயோ" எனப் போக்கடித்த போதிலும் இந்த இனப்பிரச்சினை என்ற நெருப்பைமட்டும் போக்கியவர்களால் அணைக்க முடியவில்லை.

இத் தருணத்தில்தான் நாம் மறுபடி மற்றொரு கையை உதவிக்குப் பற்றியுள்ளோம்.

உண்மையில் இங்கு எமக்குள்ள அச்சங்கள் ஒருபுறமிருக்க இதில் ஈடுபடத் துணிந்த நோர்வேக்கு உள்ள 'ரிஸ்க்'கையிட்டு யாரும் கவலைகொள்வதில்லை. இந்தியாவுக்கு நிகழ்ந்ததைப்போல் எத்தரப்பாவது திடீரென நோர்வேக்கு 'துரோகி'ப் பட்டம் சூட்டி வெளியேறச் சொல்லிவிட்டால்...?

எப்படியோ, நல்லதையே நினைப்போம். நம்பிக்கை கொள்வோம். நோர்வேயில் நம்பிக்கை வைப்பதற்கு முன் எம்மில் நாம் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வது முக்கியம். எமது நேர்மையில் நம்பிக்கை கொள்வது மிக முக்கியம்.

எப்படியிருந்தாலும் மூன்றாம் தரப்பாக வந்த வெளிநாடொன்றால்தான் - இந்தியாவால்தான் - இதுவரை அரசியல் தீர்வென்று கூறக்கூடிய மாகாணசபையாவது ஏற்படுத்தப்பட்டது. அதை ஏற்படுத்தவும் அது இரு புறத்தாரின் கைகளையும் இறுகப்பற்றிஒரு உடன்பாட்டுக்கு வர இழுத்து வர வேண்டியிருந்தது. அத்தகையஒருபலவந்தம் அதற்குத் தேவைப்பட்டிருந்தது.

எனவே இன்னொரு தீர்வுக்கும் வெளிநாடொன்றின் பிரசன்னமே உதவுமென நாம் எதிர்பார்ப்பது நியாயம்.

ஆனால் இன்று கை கொடுக்கும் நோர்வே, இந்தியாவைப்போல் அத்தகைய பலவந்தம் எதையும் பாவிக்காத 'அனுசரணையாளராக' மட்டுமே செயற்படவுள்ளதாக உத்தரவாதம் வழங்கியுள்ளது.இந்தவகையான மத்தியஸ்த்துவத்தால், திமிறிக் கொண்டிருக்கும் இரு தரப்பையும் ஒரு உடன்படிக்கைக்கு இட்டுவர முடியுமா என்ற சந்தேகம் நியாயமாகவே எழக்கூடியது.

ஆயினும் பேச்சுவார்த்தைக்கானஆரம்பகட்டவேலைகளைச் செய்து ஒரு பக்குவமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் இத்தகைய, எந்தப் பகுதிக்கும் அச்சுறுத்தலாக இல்லாத அணுகுமுறை அவசியமே.

இதேவேளை நோர்வேயின் வல்லமையையிட்டு எம்மவர் மிக சாதாரணமாக மதிப்பிடுவதும் தப்பு.

நோர்வே ஒரு தனிநாடாகத் தோற்றமளித்தாலும் அதுஐரோப்பிய நாடுகளின் ஆசியோடும் அனுசரணைகளோடும், வேண்டுகோளின் பேரிலும்தான் இதில் ஈடுபடுகிறது என்பதை நாம் பார்க்காதிருந்துவிடக் கூடாது. அது ஒரு மென்மையான பங்கை வகிப்பதுபோல் தோன்றினாலும் அதன் முயற்சியில் அசைய மறுக்கும் ஒருநிலைஏற்படும்போது அதற்கு அனுசரனையான சர்வதேச சமூகம் தம் நெருக்குதலை இருதரப்பு மீதும் மேற்கொள்ளும் என்பதை நாம் எதிர்பார்க்காமல் இருந்துவிட முடியாது.

பாலஸ்தீனப் பிரச்சினையில் நோர்வே மத்தியஸ்தராகச் செயற்பட்டாலும் அங்கே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமெரிக்காவின் வலுவான பிடி பின்னாளில் காரணமாய் இருந்தது என்கின்ற உண்மை எமக்கு நல்லஉதாரணமாகத் தெரிகிறது.

இதேவேளை, இலங்கைப் பிரச்சினையில் எப்போதும் அக்கறைகொண்டிருக்கும் அயல்நாடான இந்தியாவும் இதில் முற்றுமுழுதாக விலகி நிற்குமென எண்ணலாகாது. இந்தியாவுக்கு பேச்சுவார்த்தையின் விடயங்களைத் தெளிவுபடுத்தப் படுமென்பதை நோர்வீஜிய வெளிநாட்டமைச்சர் **வொலிபக் நட்** தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு இலங்கை வெளிநாட்டமைச்சர் இந்தியாவுக்குச்சென்று இப் பேச்சுவார்த்தைகள் பற்றி அந்நாட்டு வெளிநாட்டமைச்சரைச் சந்தித்துவிளக்கமளித்துள்ளார்.

**இந்த இனப் பிரச்சினை சிறு பொறியாகத் தோன்றி இன்று கொடிய யுத்தத்துடன் கோர முகம் காட்டி நிற்கின்ற இந்த நீண்டகால வரலாற்றில் எமக்குள்ளேயே பேசி இதைத் தீர்த்துக்கொள்ள வக்கற்றவர்களாக நம்மை நிருபித்துவிட்டோம்.**

எனவேஅரசாங்கமும்சரி,விடுதலைப் புலிகளும்சரி, அல்லது நோர்வேயின் வருகையோடுபரபரப்பாகிவிட்ட இதர தமிழ் குழாத்தினரும் சரி ஒன்றை மட்டும் இங்கு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இப் பேச்சுவார்த்தையில் தீர்வு காணவேண்டுமென்றஉண்மையானஈடுபாட்டுடன் செயற்படவேண்டியது அவசியம். அவ்வாறன்றி மற்றைய தரப்பினர்மீது பழிசுமத்திவிட்டு, வெறுமனே போக்குக் காட்டிக்கொண்டு செல்லலாமென்ற நினைப்புடன் இதில் ஈடுபடக் கூடாது. அத்தகைய போக்குகளைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்களாக சர்வதேச சமூகத்தை எடைபோடுவதே முட்டாள்தனமானது.

பேச்சு வார்த்தைக்கு உதவாத நிபந்தனைகளையும், ஒருசில அற்பக் காரணங்களையும் தமது துருப்புச்சீட்டாக இங்கு யாரும் பாவிக்க முடியாது. ஆனால் அப்படியான எண்ணம் இங்கு காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இருதரப்பும் தமதுநிபந்தனைகளைவிட உருப்படியான அரசியல் தீர்வுகளில் அக்கறை செலுத்துவதே அவசியம்.

இவ்வளவு அறிவுகளுக்குப் பின்பும் இப் பேச்சுவார்த்தைகளில் யாரும் நேர்மையாக நடந்துகொள்ள முன்வராவிட்டால் தமிழ் அரசியலின் வார்த்தைகளில் அவர்கள் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் எறியப்படவேண்டிய துரோகிகளே என்று நாம் துணிந்து சொல்லிவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை நிர்ப்பந்திக்கும் உரிமை எமக்கில்லை

## டிலான் பெரேரா

பிரதி அமைச்சர்
நீதி, அரசியலமைப்பு,
இன விவகார தேசிய
நல்லிணக்க அமைச்சு

பேட்டி கண்டவர் : **து. பாஸ்கரன்**






**கேள்வி:** பேச்சுவார்த்தை நடவடிக்கைகளின் நிலைமை இப்போது என்ன?

**பதில்:** ஜனாதிபதியவர்கள் இப் பேச்சுவார்த்தையை நான்கு படி முறையில் முன்னெடுத்துச் செலலத் திட்டமிட்டிருந்தார். முதலாவது படியாக, எமது தீர்வுக்கான ஆலோசனைகளை பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் ஆராய்வது. அதை நாம் பூர்த்தி செய்துவிட்டோம்.

இரண்டாவது படியாக, அதனை பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகளிடையே ஆராய்வது.

மூன்றாவது படியாக, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆராய ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ரணில் விக்கிரமசிங்க அதற்கு மறுத்துவிட்டார். கால அவகாசம் தேவையெனக் கூறியுள்ளார்.

இம் மூன்றாவது படியையும் முடித்துக்கொண்டு நான்காவதாக, புலிகளுடன் இத் தீர்வுத் திட்டம் குறித்துப் பேசுவதாய் இருந்தோம். நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் அப் பேச்சுவார்த்தையை நடத்தவிருந்தோம்.

இத் தீர்வுத் திட்டத்தின் மூலம் கூடுதலான பிரதேச சுயாட்சியைக் கொடுக்கவும், எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நாம் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளோம்.

**கேள்வி:** உங்கள் பேச்சுவார்த்தையில் தமிழ் கட்சிகளின் பிரதிபலிப்பு எவ்வாறாக இருந்தது?

**பதில்:** தமிழ்க் கட்சிகள் தீர்வு ஆலோசனைகள் மீதான பேச்சுவார்த்தைகளில் மிக சாதகமான பிரதிபலிப்புகளையே வெளிப்படுத்தின. அப் பேச்சுவார்த்தைகளின் இறுதி முடிவுகள் இன்னும் வரவில்லை. எனினும் தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகள் இணக்கப்பாட்டைக் காணும் திசையிலேயே இருந்தன.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண அர்ப்பணித்துச் செயலாற்றும் ஜனாதிபதியவர்களின் முயற்சிக்கு சாதகமான வகையிலேயே தமது பங்களிப்பை அவர்கள் வழங்கியிருந்தனர்.

அதேவேளை, இத் தீர்வுத் திட்டத்துக்கான விடுதலைப் புலிகளின் பதிலும் சாதகமானதாகவே அமையுமென நாம் நம்புகிறோம்.

நோர்வீஜிய அரசாங்கம் முன்வந்துள்ளது. ஜனாதிபதியவர்கள் புலிகளுடன் பேசத் தயாராக உள்ளார். புலிகளும் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளனர்.

இங்கே நீங்கள் ஒரு வரலாற்று வித்தியாசத்தைக் காணலாம். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்தன விஜயகுமாரணதுங்கவை தமிழ்ப் போராளிகளிடம் சமாதானத் தூது செல்லும்படி கேட்டபோது அவர் உடனடியாக ஒத்துக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். அது எப்போதென்றால், விஜயகுமாரணதுங்கவை நக்சலைட் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி சிறையில் அடைத்துவைத்திருந்த ஒரு வருடத்தின் பின்.

குறுகிய அரசியல் விளையாட்டு நடத்த எண்ணாமல், சமாதானத்தின் அவசியம் கருதி யாழ்ப்பாணத்துக்குத் தூதுசென்றார்.அவர்

**கேள்வி:** இப்போதய உங்கள் தீர்வுத்திட்டம் முன்னையதிலிருந்து பெரிதும் மாற்றப்பட்டுள்ளதெனவும், தமக்கு அவற்றைப் படிக்க காலம் தேவையென்றும், தாம் தமது ஆலோசனைகளை முன்வைக்கவுள்ளதாகவும் ஐ.தே.க. கூறியுள்ளதே, இது குறித்து உங்கள் அபிப்பிராயம்?

**பதில்:** இதுவும் மற்றொரு ஏமாற்றுக் கதையல்லவா? நாம் எமது தீர்வு ஆலோசனைகளை 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபரில் சமர்ப்பித்திருந்தோம். அப்போது 'நாம் இந்த ஆலோசனைகளை ஏற்கவில்லை. எமது ஆலோசனைகளை 6 மாதத்துக்குள் முன்வைக்கிறோம் என்று ஐ.தே.க. கூறியது. ரொனி டிமெல்லும், மஹிந்த சமரசிங்கவும் டீ.வி.யில் தோன்றி இதைச் சொன்னார்கள்.

6 மாதம் கடந்தது. ஒரு வருடம் கடந்தது. எதுவும் முன்வைக்கப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வெதையும் கூறாமல் அவர்கள் சுதந்திர தேர்தல் கமிஷன், பொலீஸ் கமிஷன் போன்றவை பற்றி இப்போது கதைக்கிறார்கள். அவை பற்றியும் கதைக்கலாம்தான். ஆனால் பிரதான விடயமான இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவர்கள் எதையும் முன்வைக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்பின் சந்திரிகா அவர்கள், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் மும்முரமாக இறங்கிய நேரத்தில் திடீரென ரணில் தமது கட்சி இந்தத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவளிப்பதற்குத் தயாரென அறிவித்தார்.

இப்போது, தீர்வுத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் தம்மால் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடியாதெனக் கூறுகிறார். நாமோ, நாம் 1997ல் முன்வைத்த தீர்வுத் திட்டத்திற்கான அவரது கருத்துக்களோடு வந்தாலே போதுமெனக் கேட்டிருந்தோம். அதனை ஆராய அவர்களுக்கு நிறைய நேரம் இருந்ததல்லவா. இதற்கு எந்தப் பதிலும் அவர்களிடமிருந்து இல்லை.

சந்திரிகாவுக்கு, இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக 51வீத மக்களாணையைக் கொடுத்துள்ளார்கள். அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த 43வீத மக்களும், வாசுதேவ நாணயக்காரவுக்கு விழுந்த வாக்குகளும் அவ்வாறானதே. எனவே இந்நாட்டின் 90வீதத்துக்கும் மேலான மக்கள் பேச்சுவார்த்தையூடான சமாதான முடிவையே எதிர்பார்க்கிறார்கள்.

யாராக இருக்கட்டும், இந் நாட்டு மக்களின் இப் பேரவாவுக்கு எதிராகச் சென்றால் அவர்கள் வரலாற்றின் குப்பைத்தொட்டியுள் எறியப்படுவார்கள்... சமாதானத்தை தடுக்க முயன்றால் அவர்கள் துரோகிகளாவர். நான் ரணில் துரோகியாகக் கூடாதென விரும்புகிறேன்.

**கேள்வி:** எவ்வவுகாலம் நீங்கள் அவருக்காகக் காத்திருக்கப் போகிறீர்கள்?

**பதில்:** அவர் இரண்டு வாரத் தவணை கேட்டுள்ளார். இரண்டு கிழமையென்றால் அது சரியாக இரண்டு கிழமையாகவே இருக்க வேண்டும். இந்த நாட்டின் நிலைமைக்கு இரண்டு வாரங்களே மிக அதிகமாகத் தோன்றும் தருணமிது.

எம் மக்களுக்கு இன்றே சமாதானம் வேண்டும். இங்கே பெருமளவு தமிழ் மக்கள் சமாதானத்துக்காக பிரபாகரனையும் எதிர்பார்த்தபடியுள்ளார்கள். ஏனெனில் அவர்களால் எந்த அரசாங்கத்தையும் நம்ப முடியவில்லை.

அவர்கள் பார்க்கும் ஒரே சிங்களவன், அவர்கள் முன்னால் கையில் துப்பாக்கியை ஏந்திய இராணுவ வீரனே. ஆகையால் இத்தகைய சூழ்நிலையில் செய்யக்கூடிய அதி பயனுள்ள விடயம் பேசுவதே. நாம் யாவரும் ஒன்றுபட்டு தமிழ் மக்களுக்கு சாதகமான அறிகுறிகளை அனுப்ப வேண்டும்.

தமிழர்கள்தான் பிரபாகரனை எம்முடன் பேசும்படி நிர்ப்பந்திக்க வேண்டும், சிங்கள மக்களாகிய எங்களுக்கு பிரபாகரனை நிர்ப்பந்திக்க எந்த உரிமையும் இல்லை என அவர்களுக்கு நாம் சொல்லவேண்டும்.

தமிழ்மக்களுக்கே பிரபாகரனிடம், இந்த யுத்தம் "போதுமடா சாமி" என்று சொல்லும் உரிமை உள்ளது.

**கேள்வி:** புலிகளுடன் பேசும்போது நீங்கள் ஒரு தீர்வை மேசையில் வைக்க வேண்டுமல்லவா?

**பதில்:** நீங்கள் கூறுவது மிகமிகச் சரியானது. எம்மிடம் ஒரு தீர்வுத் திட்டமும், நிகழ்ச்சித் திட்டமும் மேசைமீது இருக்கவேண்டும். அத்தீர்வு முதலில் எமது பக்கத்தில் ஆராயப்பட வேண்டும். அதைத் தடுப்பது யார்? ஐ.தே.க.வே. நீங்கள் கூறும் அந்த தீர்வுத் திட்டம் பேச்சுவார்த்தைக்கான மேசையேறுவதைத் தடுக்கிறது.

**கேள்வி:** நீங்கள் தமிழ்க் கட்சிகளுடன் அதிகாரப் பகிர்வுக்கான அலகு போன்ற அதி முக்கிய விடயங்களில் இணக்கம் கண்டுவிட்டீர்களா?

**பதில்:** பேச்சுக்களின் இறுதிப் பெறுபேறுகள் அதில் பங்குபற்றிய உயர்மட்டக் குழுவினருக்கே தெரியும். நான் அதில் இல்லை. ஆனால் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையின் பின் ஐ.தே.க. வுடன் பேச விழைந்துள்ளதனால் தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் பெருமளவில் சாதகமான வகையிலேயே அமைந்துள்ளதாகக் கருதுகிறேன்.

## கதை சொல்லும் சிலைகள்...

'பேசும் என் கிளி' என்றான்
கூண்டைக் காட்டி.
வால் இல்லை,
வீசிப் பறக்கச் சிறகில்லை
வானம் கைப்பட வழியில்லை
'பார் பார் இப்போது பேசும்' என
மீண்டும் மீண்டும் அவன் சொல்ல,

'பறவை என்றால் பறப்பது எனும்
பாடம் முதலில் படி' என்றேன்.

\- கல்யாண்ஜி

கொலம்பியாவில் நடைபெற்ற மில்லேனிய கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த சிலைப்பறவை.



**கேள்வி:** நோர்வே அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைக்கான அனுசரணை எப்படிச் செல்கிறது?


**பதில்:** எமக்குத் தெரிந்தவகையில் நோர்வீஜியர்கள் மிக ஆரோக்கியமான பங்கையையே ஆற்றுகிறார்கள். இப்படியான பிரச்சினைகளில் தீர்வு காண முனையும் போது நாமும் இதையெத்த சர்வதேச அனுபவங்களையும் படிக்க வேண்டும். உத்தியோகபூர்வப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்குமுன் பேச்சுவார்த்தைக்கான பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். ஜனாதிபதி இத்தகைய சகல உலக அனுபவங்களின் சாதகங்களையும் ஆராய்ந்து மிகச் சரியாக நோர்வீஜியர்களை அனுசரணையாளர்களாகச் செயலாற்றக் கேட்டுள்ளார்.



**தமிழர்கள்தான் பிரபாகரனை எம்முடன் பேசும்படி நிர்ப்பந்திக்க வேண்டும், சிங்கள மக்களாகிய எங்களுக்கு பிரபா-கரனை நிர்ப்பந்திக்க எந்த உரிமையும் இல்லையென அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டும்.**

**கேள்வி:** புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரையில், போடப்பட்டுள்ள நிபந்தனைகளை எவ்வாறு வெற்றிகொள்ளப் போகிறீர்கள்? மாவீரர் தின உரையில் புலிகள் தலைவர் பிரபாகரன் கோரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதித்திருந்தார். இதையிட்டு என்ன கூறுகிறீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இது தமிழ் சமுதாயத் திற்குள் நிகழும் மற்றொரு அதிகாரப் போட்டி. இவ் விடயம் தமிழ்ச் சமுதாயத் திற்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டிய விடயம். எம்மைப் பொறுத்த வரையில் நாம் தமிழ்மக்களின் அனைத்துப் பிரதிநிதிகளுடனும் பேசுவதற்கே தீர்மானித்துள்ளோம்.**

**பதில்:** இவைபற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் நோர்வே அரசாங்கத்திடம் சரியாக என்ன நிபந்தனைகளைக் கோரியுள்ளார்களென எமக்கு இன்னும் தெரியாது. ஆனால் இப்படியான ஒரு சூழ்நிலையில் தனது மாவீரர் உரையில் பிரபாகரன் தம் மக்களின் மனதை உற்சாகப்படுத்துமுகமாக, இவ்வாறெல்லாம் பேசக்கூடும். நாமும் இதேபோல் தான் பேசுவோம்.

ஆனால் நாம் ஏன் இன்னொரு நாட்டின் அனுசரணையை நாடுகிறோம்? இவ்விரு பக்கங்களையும் பாதிப் பாதித் தூரமாகவாவது முன்வரச் செய்வதற்கு முயற்சிக்கத் தான் அவர்கள் தேவையாக இருக்கிறது.

தென்னாபிரிக்காவை எடுங்கள். வெள்ளை இன ஜனாதிபதி டிட்லக் ஒருகாலத்தில் நெல்சன் மண்டேலாவை ஒரு கொலையாளியென விபரித்தார். அக் காலத்தில் பேச்சுவார்த்தையென்ற பேச்சுக்கே இடமில்லையென நிராகரித்தார். ஆனால் பிற்காலத்தில் நெல்சன் மண்டேலா நாட்டின் ஜனாதிபதியாக, டிட்லக் அவரது துணை ஜனாதிபதியானார். ஆதலால் இந்த மாவீரர் உரை உண்மையாக இருந்தாலும் பேச்சுவார்த்தையின் போக்குகளே மீதியைத் தீர்மானிக்கும்.

**கேள்வி:** இதே வகையில்தான் நீங்கள் போட்டுள்ள நிபந்தனைகளையும் கருதுவீர்களா? அதாவது புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும், யுத்தத்தின் மத்தியிலேயே பேசவேண்டும் போன்றவையும்...?

**பதில்:** சில கூற்றுக்கள் இருபக்கத்தாலும் கூறப்பட்டுள்ளன. அக் கூற்றுக்களின் வழியில் சிந்தித்து நாம் எதையும் பிரதிகூலமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இது பேச்சுவார்த்தைக்கு அனுசரணை மேற்கொள்ளுவோரையும் பேச்சுவார்த்தை மேசையையும் பொறுத்த விடயம்.

இந்நிபந்தனைகள் அவசியமானவையா, அவற்றைத் திருப்பிப் பெற முடியாதா, என்ன செய்யப்படலாம் என்று அனுசரணையாளரால் பரிசீலிக்கப்பட்டு மாற்றங்களுக்குள்ளாகக் கூடியவை.

ஜனாதிபதிகூட குண்டுத் தாக்குதலின் பின்னரும் முன்னைய நிலைப்பாடுகளிலிருந்து மிக முன்னே வந்து புலிகள் ஈழத்தைக் கைவிடத் தயாரானால் நான் பேசத் தயாரென அறிவித்திருந்தார்.

ஆகவே புலிகளும் அனுகூலமாக பதில்களைத் தரக்கூடும். சில வேளை துப்பாக்கி கொண்டு சண்டையிடும் யுத்தத்தில் வெற்றி சுலபமாயிருக்கக்கூடும். ஆனால் இதயங்களையும் சித்தங்களையும் வெல்லும் யுத்தமே கடினமானது.

**கேள்வி:** நீங்கள் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கும் இதேவேளை அக்கட்சிகளை பேச்சுவார்த்தைகளிலிருந்து விலக்கிவைக்க வேண்டுமெனப் புலிகள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறதே இதில் உங்கள் நிலை என்ன?

**பதில்:** இது தமிழ் சமுதாயத்திற்குள் நிகழும் மற்றொரு அதிகாரப் போட்டி. இவ் விடயம் தமிழ்ச் சமுதாயத்திற்குள்ளேயே தீர்க்கப்படவேண்டிய விடயம். எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாம் தமிழ் மக்களின் அனைத்துப் பிரதிநிதிகளுடனும் பேசுவதற்கே தீர்மானித்துள்ளோம்.

அவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் சமுதாயத்தின் குறித்த சில பகுதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இவர்களோடு மட்டுமன்றி நாம் இந்திய வம்சாவழித் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இ.தொ.காங்கிரசுடனும் பேசுகிறோம்.

**கேள்வி:** உங்கள் இனவிவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு இவ் இனப்பிரச்சினை தொடர்பாக ஆற்றும் பங்கு என்ன?

**பதில்:** இந்த அமைச்சு இனங்களுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புமுகமாக ஜனாதிபதியவர்களால் உருவாக்கப்பட்டது. இது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக முற்போக்கான செயற்பாடுகள் பலவற்றை மேற்கொண்டுள்ளது. நாம் இப்போது எமது தொலைநோக்கு, செயற்பணி பற்றிய வரைவுகளை தயாரித்து வருகிறோம்.

அவற்றினடிப்படையில் நாம் முழு அமைச்சையுமே, புதிய செயலாற்றலுடன் மறுசீரமைத்து வருகிறோம். இதனால் அமைச்சு ஆய்வுப்பகுதி, திட்டப் பகுதி, அமுலாக்கும் பகுதி போன்ற பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

இனவிவகார மையங்களை மாவட்டங்கள் தோறும் நிறுவும் திட்டம். கேகாலையில் தற்போது உள்ளது. இதுபோல் திருகோணமலை, மன்னார் போன்ற பல்லினங்கள் வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டு, இனவிவகார அமைச்சினால் அவ்வவ் மாவட்டச் செயலாளர், அல்லது அரசாங்க அதிபரால் நிர்வகிக்கப்படும்.

**கேள்வி:** இனங்களுக்கிடையே ஐக்கிய உணர்வைத் தோற்றுவிக்கும் வேலைத்திட்டங்களாக என்ன செய்கிறீர்கள்?

**பதில்:** தேசிய ஒருங்கிணைப்புத் திட்டங்கள் பல 'நிப்பு' அமைப்பின்கீழ் செயற்படுத்தப்படுகின்றன. அதிகாரப்பகிர்வு தொடர்பான செயற்திட்டங்கள், பயிற்சிகள், கலாசார செயற்பாடுகள் போன்ற பலவகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறு அமைச்சுகளில் சிறுபான்மையினருக்கு இருக்கக் கூடிய அதிருப்திகளைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமுகமான

மனம் நொந்து
தான் படைத்த சிற்பங்களை
அவன் உடைப்பதைக் கண்டேன்
அவள் முகத்தில்
நெருப்ப
கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது
கலையின் உன்னதங்கள்
சிதறுவதைக் கண்டு
மனம் நொந்து அழுதேன்
கனவு என்பதால்
எதுவும் செய்யக் கூடவில்லை
கண்விழித்த போது
சுற்றிவரச் சிற்பங்களின் நொறுங்கல்கள்
அவள் இருந்த இடத்தில்
நெருப்பு
கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது

- பசுவய்யா




போத்துக்கலில் 2000 ஜனவரி 1ம் திகதி இரவு 12 மணிக்கு சர்வாதிகாரத்தை அழிப்பதற்கான குறியீடாக சங்கிலியால் பிணைக்கப்பட்ட சுதந்திரதேவியின் சிலையை எரித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவிவகாரம் தொடர்பான பாராளுமன்ற கமிட்டியொன்றை அமைக்கும்படி நாம் ஜனாதிபதியிடம் ஆலோசனை சமர்ப்பித்துள்ளோம்.

**கேள்வி:** உங்கள் வேலைத் திட்டங்களுக்கு சகல சமூகங்களிடமிருந்தும் கிடைத்த பெறுபேறு என்ன?

**பதில்:** எமக்கு மிக நல்ல விளைவு கிடைத்தது. நாம் வடக்கு, கிழக்கு மக்களிடம் அதிக வேலைத்திட்டங்களைச் செய்ய முடியாத சூழ்நிலை இருந்தாலும் தென்பகுதி மக்களிடம் மிக அதிகளவிலான கலந்துரையாடல்களையும் நிகழ்ச்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தோம். அதற்கெல்லாம் சாதகமான பெறுபேறுகளை நாம் பெற்றுள்ளோம்.

**கேள்வி:** நீங்கள் இந்த இனப் பிரச்சினையை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:** இதனை வடக்குக் கிழக்குப் பிரச்சினையென்று சிலர் வரையறுத்தாலும்... அவ்வாறல்ல, உண்மையில் இது முழு நாட்டுக்குமான பிரச்சினை. இது வரலாற்றோடு விளைந்தது. 1948ல் எமக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கத்தின் கீழ்த்தான் இவ் அரசியல் யாப்புக்கள் செயற்படுத்தப்பட்டன. எந்த ஒரு முறையான தமிழ்ப் பிரதிநிதித்துவமும் இவ் அரசியல் சட்டங்களை புதிதாக வரைவதில் பங்குவகிக்கவில்லை.

இந்த உதாரணத்தைப் பாருங்கள். 1970ல் இருந்து கடந்த 30 வருடங்களாக இந்நாட்டின் அமைச்சரவை கூடி வருகிறது. இந்த அமைச்சரவையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு வடபகுதித் தமிழராவது பங்குபற்றினாராவென்றால் இல்லை.
செல்லையா குமாரசூரியர் தேர்தலால் தெரிவானவரல்ல. தேவநாயகம் வடபகுதியைச் சேர்ந்தவரல்ல. தமிழ்மக்களின் முறையான பிரதிநிதித்துவம் இந் நாட்டின் தீர்மானங்களில் பங்குவகிக்கவில்லையென்பதற்கு இது ஒரு சிறிய உதாரணம்.
அவர்களின் அபிப்பிராயங்கள் மத்திய அரசின் பல முக்கியமான விடயங்களில் கருத்துக்கெடுக்கப்படவில்லை.
ஆகவே நாம் நிச்சயம் அவர்களைத் தீர்மானங்களை எடுப்பதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ●

# UTHR(J)*

## தகவல் ஏடு

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் 22ஆவது தகவல் ஏடு அண்மையில் வெளிவந்தது.

'அபாயத்தின் வாசனை' (**THE SCENT OF DANGER**) என்ற தலைப்பைத் தாங்கிய இவ் ஏட்டில் அக்கறைக்குரிய பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் அரசியல் மற்றும் சமூக நலன் சார்ந்த தகவல்களும், யுத்த சூழ்நிலைக்குள் நிகழ்ந்தேறும் அறியப்படாத விடயங்களும் இவ்வேட்டில் வெளிவந்துள்ளன.

ஒருவகை மனோ பயத்தை விளைவித்து எமது வாழ்வைப் பலாத்காரப்படுத்துகின்ற தற்கொலைக் தாக்குதல் மரபு பற்றிய தெளிவுகளைத் தேடும் கட்டுரை இதில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.
"ஒருபுறத்தில் இது, புலிகளின் தலைவிதியாகிவிட்ட தற்கொலைப்போரொன்றில் முழு சமுதாயத்தையுமே தள்ளுகிறது. அதே வேளை அரசியல் தீர்வொன்றுக்கு முயலும் தமிழர்களைக் குறி வைக்கிறது. மறுபுறத்தில் தென்பகுதி சிங்களத் தலைவர்களைக் கொலை செய்து மனிதனின் மிருகத் தன்மையை வெளியே பீறிடச்செய்ய முற்பட்டு வருகிறது. அதன் இராணுவ மூலோபாயங்களை விட இந்த இரு செயற்பாடுகளாலும் புலிகளுக்கான அரசியல் அழுத்தம் உருவாக்கப்படுகிறது." என்று கூறுகிறது இக் கட்டுரை.

'ஒரு குரலின் மௌனிப்பு' என்ற மற்றொரு கட்டுரை குமார் பொன்னம்பலத்தின் படுகொலையை அவரது கடந்தகால அரசியல் செயற்பாடுகளோடு தொடர்புபடுத்தி, ஆராய்கிறது.

**ஜனாதிபதித் தேர்தல் பற்றிய குறிப்பு, வன்னியில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவு, மடு தேவாலயத்து அனர்த்தம், தள்ளாடி முகாம் தாக்குதல், யாழ்ப்பாணத்தில் புலிகளின் செயற்பாடு, புலிகளின் ஷெல் தாக்குதல்கள், வன்னி மக்களின் நிலைமை, வன்னியில் புலிகளின் ஆட்திரட்டலின் ஒரு நேரடி அனுபவம், தேசியவாதமும் அரசியல் சந்தர்ப்பவாதமும், அரசியல் படுகொலைகளும் தமிழ் துயர் கதையும், அரசும் தமிழ் மக்களும், அரசாங்கத்தின் முன் உள்ள சவால்களும் மக்களும் ஆகிய பல்வேறு விடயங்கள் இவ் அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளன.**

1988ம் ஆண்டுமுதல் இலங்கையில் மனித உரிமை மேம்பாட்டுக்காவும், மக்களின் அரசியல் உரிமைகளுடன் கூடிய நல்வாழ்வுக்காகவும் இந் நாட்டில் கோலோச்சும் யுத்தத்தில் பலியாகியுள்ள அனைத்து சமூகப் பெறுமானங்கள் பற்றிய அக்கறையோடு செயலாற்றிவரும் UTHR(J) என்ற மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தொடர்ச்சியாக ஆழமான ஆராய்வுடனும் பல்வேறு ஆதாரத் தகவல்களுடனும் தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் தமிழ், ஆங்கில அறிக்கைகள் மற்றும் நூல்களைப் பெற்றுக்கொள்வது உங்களுக்கு நடப்பு விடயங்கள் பற்றி அதிக வெளிச்சத்தைத் தர உதவும்.

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**
*P.O.Box : 1602,*
*Colombo.*



## காலந்தள்ளுதல்

- அஷ்ரஃப் சிஹாப்தீன்

நடந்துகொண்டுதானிருக்கிறோம்

கண்டால் கதைத்துக் கொள்கிறோம்
சிலபோது சிரித்துக் கொள்கிறோம்
எப்போதாவது எரிந்து விழுகிறோம்
சினந்தால் சண்டையிடுகிறோம்

பசித்தால் உண்டும்
தாகித்தால் குடித்தும்
மோகித்தால் புணர்ந்தும்
தீர்த்துக் கொண்டே
நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறோம்

எதையெதையோ யார் யாரையோ
திருப்திப்படுத்த
எதையெதையோ யார் யாரையோ
தேடித் தேடி

நீயறியாமல் நானும்
நானறியாமல் நீயும்
பாரச் சிலுவைகள் சுமந்தபடி

நடந்துகொண்டே தானிருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தைத் தின்போம்

**- சக்கரவர்த்தி**

01.05.1999ல் கனடாவில் திரைப் பாடலாசிரியர் வைரமுத்து தலைமை தாங்கிய கவியரங்கில், புகலிட இலக்கியப் படைப்பாளியும் கவிஞருமான சக்கரவர்த்தி பாடிய கவிதை இது.
யுத்தத்தை விற்றுப் பிழைப்பவர்களையும், மற்றவர்கள் குருதியில் பணம் சம்பாதிப்பவர்களையும் கேள்விக்குட்படுத்தி, பலநூறு கட்டுரைகளில் சொல்லப்பட வேண்டிய கருத்துக்களை 'நச்'சென்று முகத்திலடித்தாற் போல் சொல்லியிருக்கிறார் கவிஞர்.
அருவி வெளியீட்டகத்தின் 'யுத்தத்தைத் தின்போம்' தொகுதியிலிருந்து நன்றியோடு தருகிறோம்.

தண்ணீர் தேசத்தை மட்டும் கவிபாடிவிட்டு
எங்கள் கண்ணீர் தேசத்தை கை கழுவி விட்ட
வைரமுத்து ஐயா அவர்களுக்கும்
சகோதரிக்கும் உங்களுக்கும்
வணக்கம்.

அடையாளம் தெரியாது அகழ்ந்து
எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் ஆத்மாவுக்கு
என் அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு
ஆரம்பிக்கிறேன் என் கவிதையை.

சின்ன சின்ன ஆசை
சந்தத்திற்குள் அடங்குவதில்லை
எங்கள் வாழ்க்கை.

சிலுவைகள்தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன.
வேரறுந்த பனைமரங்கள்
துருவத்தில் உறைபனி முற்றத்தில்
வலி முனகலுடன் துளிர் விட்டன.

இலை உதிர்ந்து உடல் விறைத்த
மேப்பிள் மரத்தில்
ஒட்டு மாங்கன்றுகள்
கிளைவிட்டன.

சிலுவைகள் தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன.

சிலுவைகள் கிளை உடைய
சிறகுகள் இப்போது
சுமையாகிப் போகின.
நான் என் தேசம் மீளல் வேண்டும்.
தேசம் மீதான பசலை நோய்
தேகத்தில் படர
தேசம் பற்றிய கனவு
நமக்கிப்போது பிணியாகிப் போனது.


துப்பாக்கிகள் எப்போது துருப்பிடிப்பது,
நாம் எப்போது
நம் தேசம் மீள்வது?
நான்கு புறமும் அலைகள்
நடப்பதென்னவோ கொலைகள்.

புல்லின் நுனியில் ரத்தம்
மொட்டவிழ்ந்த மல்லிகை இதழில் ரத்தம்
தாமரை பூக்கும் குளங்களில் எல்லாம் ரத்தம்
குழந்தைகளின் தொட்டில்களில் எல்லாம் ரத்தம்
பாடும் மீன்களின் வாய்களில் எல்லாம்
மனிதத் தசைத் துண்டம்.

ராவணன் இறந்துவிட்டான்
அவன் வில்லனும் இறந்துவிட்டான்
இன்னமும் ஏன் எரிகிறது
இலங்கா புரி?

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
தனு அன்னை(?) இட்ட தீ ஸ்ரீபெரும் புதூரிலே
எந்தப் பாதகி இட்ட தீ
எங்கள் மாங்கொட்டைத் தீவிலே

அன்றோர் காலத்தில்
தென் பாரதக் கரையோரத்தில் நின்று
நாயனார் ஒருவர் பாடினார்
ஈழத் திசை பார்த்து,
"செத்தார் எலும்பு அணிவான்
திருக் கேதீச்சரத்தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மைதானங்கள் எல்லாம்
மையம் தாக்கும் மையமாகினவே
தோண்டத் தோண்ட
கறள் படிந்த கூடுகள்!
எங்கள் நிலமென்ன
எலும்புக் கூடுகள் விளைவிக்கும்
தொழிற்சாலையா?

எந்தக் கேதீச்சரத்தான்
அணிந்து அணிந்து
அழகு பார்க்க
இத்தனை ஆயிரம்
எலும்புக்கூடுகள்?

என் தேசம் எரிந்து எரிந்து
கருகிச் சாம்பலாக
எந்தப் பாதகி திருகி எறிந்தாள்
இடது முலை?
எரியும் நம் தேசத்தில்
இன்னும் இன்னும் - எண்ணையூற்றி
எண்ணையூற்றி ஊதி விடுவது யார்?

போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ - அவரே ஈழம் இன்னமும்
எரிந்து கொண்டு இருக்க
முதற்காரணி என்பேன் நான்.

போரின் பகைப்புலம் அறியாது
பரணிபாடும் பாட்டுக்காரர்களே
குழந்தையின் மரணத்தை நீங்கள்
குதூகலித்துக் கொண்டாடுகிறீர்களா?
ரத்தத்தையும் கண்ணீரையும்
ருசி தட்டிச் சுவைக்கின்றீர்களா?
ஒப்பாரி ஓசைக்கு மத்தியிலும்
உங்களுக்குத் தூக்கம் சொக்குமா?

ஆம் எனில் எழுதுங்கள்.
மனிதம் நசிய நசிய
குழந்தையின் இரத்தத்தை
பேனாவயிற்றில் நிரப்பி
எஞ்சிய மானுடம்
மரணிக்கும்வரை
எழுதியே அழியுங்கள்
தேசங்களை எல்லாம்.

மஞ்சள் நிற சீனர்
கருநீல ஆபிரிக்கர்
ரெண்டும் கெட்டான் தென்னமெரிக்கர்
பொது நிற ஹிந்தியர் மற்றும் செவ்விந்தியர்
மொத்த மொழி இந்நாட்டில் முப்பத்தி எட்டு.

ஒற்றை இனத்துடன்
ஒத்துப் போக முடியாது
ஓடி வந்த நம்மைச் சுற்றி
எத்தனை இனக்காரன்,
எத்தனை மொழிக்காரன்,
எத்தனை நிறக்காரன்.
ஆயினும் நாம் வாழ்கின்றோம், வாழ்வோம்.

எப்படி இது சாத்தியம்?
அந்நிய தேசத்தில் சாத்தியமாமெனில்
ஏன் நம் சொந்த தேசத்தில்
முடியாதிருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87 இல்
நம் சகோதரிகளை
விரட்டி விரட்டி
கற்பழித்த ஹிந்தியன்
இன்று நம் அயல் வீட்டுக்காரன்.

துரத்தி துரத்தி
முலைகடித்த சீக்கியன்
இன்று நம் எதிர்வீட்டுக்காரன்,
எதிரி எனப்பட்டவன்
எதிர்க்க இருந்தும்
இன்று நாம் அவனை
புன்முறுவலுடன் சிநேகிக்கவில்லையா?
என்ன ஆயிற்று நம் கோபம்
என்ன ஆயிற்று நம் மானம்?
எங்கே போயிற்று
தமிழ் மறவர் வீரம்?

வீரத்தின் அர்த்தம்
எனக்கின்னும் புரியவில்லை.
புலனுக்கு தெரிவது எல்லாம் ரத்தம் ரத்தம்
யுத்தத்தில் ரத்தத்தைத் தவிர
மிச்சம் என்ன உண்டு களத்திலே?

இனச் சுத்தம் இனச் சுத்தம்
எனச் சொல்லி
சோனகரை எல்லாம்
ஒற்றை நாள் இடைவெளியில்
நாட்டை விட்டு நாம் விரட்டியடித்தோம்.

நாமென்ன நாசிகளுக்கா பிறந்தோம்?
நம் பூர்வீகம் என்ன ஜேர்மனியா?

தூக்கிச் செல்ல மனச் சுமையும்
ஐந்நூறு ரூபாயையும் மட்டுமே
அனுமதித்த நாம் ஏன் மறந்தோம்,
பாட்டன் முப்பாட்டன் பரம்பரையாய்
சோனகரே ஆயினும்
அவனும் தமிழன் என்பதை ஏன் மறந்தோம்?

காலத்தின் கட்டாயத்தை
இப்போது இங்கு பாருங்கள்
இனச் சுத்தம் பேசும் நம் பரம்பரையின்
பிள்ளைகள் இன்று
கறுப்பின ஆபிரிக்கருடன் சல்லாபிக்கும்
காலத்தின் கட்டாயத்தைப் பாருங்கள்!

கறுப்பருடன் சல்லாபித்து விட்டு
வெள்ளைத் தோல் அமெரிக்கருக்கு
பிள்ளை பெற்றுக் கொள்ளும்
காலத்தின் தீர்ப்பை யார் மறுப்பார்!
காலப்பயணமேறி
பாண்டியர் காலம் போவோம்...
சிவந்து கிடக்கிறது மதுரை நகரம்.
ரத்தச் சாக்கடையில் நாறிக்கிடக்கிறது
தமிழர் தலைநகரம்.

ஐயாயிரம் சமணர்கள்....
அதிலும் மேலான வைணவர்கள், பௌத்தர்கள்
கழுவில் ஏற்றிக்
கொன்று குவிக்கிறான் பாண்டியன்.
மதச் சுத்தம் மதச் சுத்தம்
எனச் சொல்லி
மதம் கொண்டலைகிறான் பாண்டியன்.



அதற்கு அப்புறம் ஆனதென்ன?
தெலுங்கு நாயக்கர் வம்சம்
பாண்டியர் தேசத்து நாச்சியார் வயிற்றிலெல்லாம்
சூல் கொண்டதென்பதுதானே
சரித்திரம் சொல்லும் உண்மை.

மானுடம் தோற்கும் பொழுதொன்றில்
புனல் வாதம் நடக்கிறது.

சதியாலோ மதியாலோ
அல்லது மந்திரத்தாலோ
உண்மையிலேயே
சம்பந்தர் பாடிய
தேவாரத்தால் தானோ என்னவோ
சம்பந்தர் ஜெயிக்க
தோற்றது சமணர்.
அறிந்த புராணம்தான் இது.

அப்புறம் நடந்த கொடுமை
ஏன் வராமல் போனது வெளிச்சத்திற்கு?
புனல் செய்த கொடுமையால்
தோற்ற சமணர் இருநூறுபேர்
அத்தனை பேரும் -
சமயக் குரவர் ஞானப்பால் உண்ட
எங்கள் திருஞான சம்பந்தரால்
கழுவில் ஏற்றி கொல்லப்பட்ட கொடுமை
ஏன் வராமல் போனது வெளிச்சத்திற்கு?

சைவம் காக்க
சேக்கிழார் விட்ட பிழையா?
நம்பியாண்டார் நம்பி செய்த தவறா?
ராஜ ராஜ சோழன்தான் மறைத்தானா உண்மையை?
இல்லை கறையான்தான் அரித்ததா ஏட்டை?

போகட்டும் -
இவரில் எவர் அறிவார்
ஏகப்பட்ட மதத்தை உள்வாங்கி
சைவம் கலப்படமாகி
இன்று இந்து மதமாகி மருகி நிற்பதை
திருஞான சம்பந்தரோ இல்லை எவரோ
எவர் அறிவர்?

போர் ஓயும் பொழுதில்
முட்களும் மீனும் வரட்சியும் விளையும்
மன்னார் தேசத்தில்
[illegible] கோவில் சென்று பாருங்கள்...
எத்தனை ஆயிரம்
கிறிஸ்தவக் குழந்தைகளின் ரத்தம்
உங்கள் சங்கிலியனின்
கொடுவாளில் படிந்தது என்று
உங்களுக்குப் பட்டியல் போட்டுச் சொல்லும்
சைவமும் தமிழும்
கொலையும் கொடூரமும் தானா?
என்ன நம் சரித்திரம்
நரபலி கேட்கும் ரத்தக் காட்டேறியா?

பத்மாசூரன் கொடூரன்தான்
சிவன் நஞ்சுண்டு காத்த தேவரை எல்லாம்
அழித்தொழிக்கும் அசுரன்தான்
அவனை அழிக்க வேண்டியதும்
அவசியமே ஆகட்டும்.
அசுரனை அழிக்க நாம்
ஆயுதம் அணிவித்து அனுப்பியது யாரை,
பச்சைப் பாலகன் பால முருகனை அல்லவா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளின் பின்னணியில்
அரசியல் சூத்திரம் உண்டு
பால முருகன்கள் அரசியல் அறிவார்களா?

தமிழ் காக்கும் களங்களில் எல்லாம்
ஏன் நாம் பாலகரை பயன்படுத்துகிறோம்?

பாலகனின் ரத்தத்தில்
தாகம் தணிக்கும் என் தமிழ் அன்னையே!
நீ தாய் என்பதில்
எனக்குச் சந்தேகம் தட்டிவிட்டது.
எந்தத் தாய் தன் பிள்ளையின் ரத்தத்தில்
தன்னைப் புனிதப்படுத்திக் கொள்கின்றாள்?

தன் மடியை எந்தத் தாய்
குழந்தையின் கல்லறையாக்கிக் கொள்கின்றாள்?
மரணத்தை வீரம் என்று
எந்த அம்மாக்களும்
கொண்டாடிக் கொள்வதில்லை.

உயிர் மூச்சை நெரிக்கும்
போரின் பொத்திய கையுள் இருந்து
தப்பி வந்த நம்மையும்
போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணி பாடும் பாட்டுக்காரர்களையும் தவிர
எந்த அம்மாவும்
தன் குழந்தையின் மரணத்தை
வீரம் என்று கொண்டாடிக் கொள்வதில்லை.

இப்போதெல்லாம்
தமிழ் பேசும் பனிபடர் தேசம் எங்கும்
புதுவகை நோய் ஒன்று பரவுகின்றது
யுத்தத்தை வெறுப்போரெல்லாம்
ஈழத்தின் விரோதி என்கின்ற
புது வகை நோய் ஒன்று
தமிழ் பேசும் பனி படர் தேசம் எங்கும் பரவுகிறது.

சமாதானத்துக்கான பாடல்களும்
யுத்த எதிர்ப்பு கவிதைகளும்
குருதியில் தோய்த்து
அழித்தொழிக்கப்படுவது எந்த ஊர் நியாயம்?
உங்களில் யாருக்கேனும் ரத்தம் மீது பிரியமுண்டா?
கொலைகள் உங்களுக்கு சம்மதமா?
உங்களை மகிழ்விக்குமா குழந்தைகளின் மரணம்?

பாலமுருகன்கள் ஆயுதம் அணிந்து
அழித்து அழிவதில் உடன்பாடுண்டா?

இல்லையல்லவா
அப்படியாயின்
யுத்தத்தைத் தின்போம்!
யுத்தத்தைத் தின்போம்!!
கொடும் ரத்தத்தைச் சிந்தும்
இந்த யுத்தத்தைத் தின்போம்!!!

கெட்ட போரிடும் களத்தில் இருந்து
நசியும் மனிதத்தை காப்போம்!

குழந்தைகளின் மரணத்தில்
மகிழ்ந்திருப்போரை - இப் பூமியில் இல்லாது
துரத்தியடிப்போம்!

சிலுவைகள் தான் எங்களுக்கு
சிறகுகள் தந்தன

சிலுவைகள் கிளை உடைய
சிறகுகள் இப்போது சுமையாகிப் போயின...

துப்பாக்கிகள் எப்போது துருப்பிடிப்பது,
நாம் எப்போது நம் தேசம் மீள்வது?

ஐயாயிரம் மைல்களுக்கப்பால்
சிவனே என்றிருக்கும் நயாகராவைப் பாடும்
சிகரங்களைத் தொட்ட
எங்கள் வைரமுத்து ஐயா(?) அவர்கள்
கூப்பிடு தூரத்தில்
அழுகை ஒலி கேட்பதைப் பற்றி
அலட்டிக் கொள்வதில்லை?

வயகரா மீது இருக்கும் அக்கறை
அக்கறையில் இருக்கும்
ஈழத்தின் மீது ஏன் இல்லை?

போகட்டும்

வெல்லத்தானே வீரம்
கொல்வதற்கு இல்லை,
கவியரசு ஐயா!
நீங்கள் சொன்னதாகத் தான்
சொல்கிறது
பாட்டுப் பெட்டி.

யுத்தம் ஒன்றைத் தவிர
வேறொன்றும் தெரியாதென்னும்
என் தேசம் நோக்கி
கொல்லாமல் வெல்வது எப்படி
என்றாவது சொல்லுங்கள்....

- சக்கரவர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது 'ஒரு மாதிரி'யான பேட்டி

சி. கதிர்காமநாதன்

**அவரைப் பேட்டி காண்பதற்கு பல நாட்கள், பல மாதங்கள் தவம் கிடந்தேன். பலன் கிடைக்கவில்லை. அவருக்கு ஓய்வு என்பது இல்லாமையே காரணம். நானும் மனம் தளராமல் வேதாளத்தை விட்டுவிடாத அம்புலிமாமா விக்கிரமாதித்தன் போல் விடாமுயற்சியுடன் தொடர்ந்தேன்...**

அப்படிப்பட்ட பிசியான மனிதர் யா‌ராக இருக்கும்?

புகழ்பெற்ற எழுத்தாளரா? அரசியல்வாதியா? வெளிநாட்டுப் பிரமுகரா? அமுது வாசகர்கள் மூளையைக் மூளையைக் குழப்பி யோசனை செய்கிறீர்களா?
ஒன்றும் குழம்ப வேண்டாம் சொல்லி விடுகின்றேன். அவர் வேறு யாருமல்ல, பால் குடியிலிருந்து பல்லுப் போன கிழவன் வரை அனைவருக்கும் தெரிந்த....

திருவாளர், மதிப்புக்குரிய, மாண்புமிகு, அஞ்சாநெஞ்சன்... அட என்ன இது சும்மா நீண்டு கொண்டே போகின்றது.. (எல்லாம் அவர் மேலுள்ள பயம் காரணமாகத்தான்)

அவர் வேறு யாருமல்ல, யாவரும் நன்கறிந்த திருமிகு **AK 47** அவர்கள்தான். அவரைப் பேட்டி காணத்தான் இத்தனை ஆர்ப்பாட்டம். எனது நல்ல காலத்துக்கு சண்டை பிடிக்கும் இரு பகுதியினரும் "போர் நிறுத்தம்" செய்து இருப்பதனால் அந்த "பொன்னான" சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைப் பேட்டி காணப் புறப்பட்டேன்.

அந்த பங்களாவின் பாதுகாப்பு அதிகாரிகள் தூய வெண்ணிற ஆடைகளில் காட்சியளித்தனர். அதனைப் பார்ப்பதற்கு மனதுக்கு சந்தோஷமாக இருந்தது.

வாசலை அண்மித்தேன்.

**பாதுகாவலர்:** ஐயா, கொஞ்சம் நில்லுங்கள். தாங்கள் என்ன விடயமாக வந்திருக்கிறீர்கள்? ஐயாவை பேட்டி காணுவதற்கா? அப்படியாயின் அதற்கு நீங்கள் கொஞ்சம் காத்திருக்க வேண்டும். இப்போது அவர் உறங்கிக் கொண்டிருக்கிறார்.

**சமாதானம்:** நல்லது. நன்றாக உறங்கட்டும். நான் அவர் விழிக்கும் வரை காத்திருக்கிறேன். பாவம் எவ்வளவு காலம் உறக்கமில்லாமல் அவர் இருந்திருப்பார்... (கடவுளே நிரந்தரமாக 'அவர்' உறங்கிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்....)

**திருவாளர், மதிப்புக்குரிய, மாண்புமிகு, அஞ்சாநெஞ்சன்... அட, என்ன இது சும்மா நீண்டு கொண்டே போகின்றது... (எல்லாம் அவர் மேலுள்ள பயம் காரணமாகத்தான்)**

கொஞ்ச நேரத்தில் உள்ளிருந்து அழைப்பு வருகின்றது.

**பாதுகாவலர்:** "உங்களது நல்ல நேரம்...! எவ்வளவு காலத்திற்குப் பின், இதுவரை காலமும் உறங்கியிருந்த ஐயா விழித்துவிட்டார். உங்களை அழைக்கிறார். போய்ப் பாருங்கள்."

நான் உள்ளே சென்று இருக்கையில் அமருகின்றேன். சுவரில் பல படங்கள் தொங்குகின்றன. எல்லாமே "யுத்த பூமி" படங்கள்தான். கந்தசஷ்டி கவசம் பாடக் கேட்கிறது. **AK 47** அவர்களா பாடுகின்றார்?

"பொல்லாத வரை பொடி-பொடியாகக் கும்..."

எனக்குப் பயத்தில் தொண்டை அடைக்கின்றது. வியர் வையில் உடம்பு நனைகின்றது. சற்று நேரத்தில் தூய வெண்ணிற ஆடையில் திருநீற்றுப் பூச்சு, சந்தனப் பொட்டுடன் எனக்கு முன் ஒருவர் காட்சியளித்தார்.

I I 47 : வணக்கம் தம்பி, என்னைப் பார்க்க வந்த காரணம் யாதோ?

**சமாதானம்:** (கடவுளே இவர்தான் AK 47... படபடவென 'பொரிந்து' தள்ளுவார் என எதிர்பார்த்தேன். இப்படி ஒரு அமைதியா? இது புயலுக்கு முந்தைய அமைதியா?) ...ஐயா என் பெயர் சமாதானம். தங்களைப் பேட்டி காண வந்துள்ளேன். சற்று நேரத்தை பேட்டிக்கு எனக்கு ஒதுக்கித் தாருங்கள்.

I I 47 : அட சமாதானமா? நீர் இன்னமும் உயிரோடு இருக்கின்றீரா? மிகவும் நல்லது. பேட்டி தருகின்றேன். நானும் பேட்டியளித்து அதிக காலமாகிவிட்டது. சீக்கிரம் கேள்விகளை கேளுங்கள். நான் இப்படி ஓய்வாக இருப்பது ஏதோ கொஞ்ச நாட்களுக்குத் தானே. நாளை என்ன நடக்குமோ?

**சமாதானம்:** அப்படியெல்லாம் சலித்துப் பேச வேண்டாம். தாங்கள் இப்படி ஓய்வாக இருப்பதையே பலரும் விரும்புகின்றனர்.

I I 47: ஹ... ஹ... ஹா... (பலத்த சிரிப்பு) என்ன? என் கையிலா சமாதானம் இருக்கிறது. இறைவா நான் என்ன செய்வேன். என்னை சும்மா இருக்க யார் விடுகின்றார்கள். "தூக்கியல்லவா" பிடிக்கின்றார்கள்.


**சமாதானம்:** ஆம் ஐயா! உலகில் எந்த இடத்திலும் பிரச்சினைக்கு உங்களைத்தான் தூக்கிப் பிடிக்கிறார்கள். இப்படியான உங்கள் வளர்ச்சிக்கு யார் காரணம்?

I I 47: சற்று நேரம் யோசிக்கிறார்) இதெல்லாம் வளர்ச்சியா? என் வளர்ச்சியால் என்ன நன்மை உலகுக்கு வருகின்றது. என்னை மனிதர் தம் சுய லாபத்துக்காக வளர்த்துவிட்டார்கள். என்னால் எத்தனை அழிவுகள்... ஒன்றில் நான் அழிய வேண்டும். இல்லை, என்னை உருவாக்கிய மனிதர்கள் அழிய வேண்டும். ஆம், இவர்கள் அழியத்தான் வேண்டும். (இருக்கையிலிருந்து "ஷெல்" வெளியேறும் வேகத்தில் எழும்புகிறார்)



**1947ல் அஸோல்ட் கலாஸ்னிகோவ் எனப்படும் AK47 ஐக் கண்டுபிடித்த மிகையில் கலாஸ்னிகோவ், தனது 80வது பிறந்த நாளன்று நடைபெற்ற கண்காட்சியில், உலகுக்குத் தான் தந்த படைப்பைக் கையிலேந்தி பெருமிதத்தோடு சிரித்தபடி காணப்படுகிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கதை சொல்லும் சிலைகள்....**

இந்தி-பாகிஸ்தான் இடையே நடந்த கார்கில் சண்டையில் உயிர்நீத்த இந்திய வீரர்களுக்காக எழுப்பப்பட்டிருக்கும் நினைவுச் சிலை.

இந்த இடத்தோடு என்னைப் பிணைத்திருப்பவை
மயிர்க்கூச்செறியும் பேச்சுக்கள்
ஒரு இலட்சியம் ஒரு பேருரை
இந்த இலட்சியத்தை நேசிக்க வேண்டும்
என நான் போதிக்கப்பட்டேன்...

- மஹ்மூத் தார்வீஷ் கவிதையில்...

**சமாதானம்:** (அடடா கேள்வியை கேட்டு கோபத்தை உண்டாக்கி விட்டேனே) ஐயா... அமைதி... அமைதி... இப்போது போர் நிறுத்தம். அமைதியாக இருங்கள். ஐயா! மனிதர்கள் மேல் ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகின்றது. (கோபத்துடன் கண்களை உருட்டி என்னைப் பார்க்கின்றார்)

**AK 47 :** மனிதர்களா இவர்கள்? காட்டு மிராண்டிகள்! உலகத்தை ஏமாற்றுகின்றார்கள். தங்களை ஏமாற்றுகின்றார்கள். ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையில்லை. என்னையும் நிம்மதியாய் இருக்க விடுகிறார்களில்லை. இந்த மனிதர்கள் உலகில் இருந்து ஒரு பிரயோசனமுமில்லை. இவர்கள் அழிந்தால் மற்ற ஜீவராசிகளேனும் நிம்மதியாய் வாழும்.

**சமாதானம்:** என்னை மன்னிக்க வேண்டும். தங்கள் அமைதியைக் குழப்பிவிட்டேன். இந்த போர் நிறுத்த காலத்தில் தாங்கள் பொழுதை என்ன மாதிரி கழிக்கின்றீர்கள். போர்க்களத்தில் எப்போதும் "சட சட"வென பிஸியாக இருப்பீர்கள். இப்போது இப்படிச் "சும்மா" இருப்பது தங்களுக்கு போ(B)ராக இருக்குமே?

**AK 47 :** இப்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? நாள் முழுவதும் வெயில், மழை, பனி பாராது ஊண் உறக்கம், சுற்றம் மறந்து... சே... இதுவும் ஒரு வாழ்க்கையா? (சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் தொடர்ந்தார்) ம்..ம்...இந்த மனிதர்களை என்ன சொல்ல? இவர்கள் எடுத்த சில படங்கள் பார்த்தேன். அதிலும் என்னைத் தான் தூக்கிப் பிடிக்கின்றார்கள். பேப்பரை விரித்தால் களவு, மிரட்டல், கொள்ளை, துப்பாக்கிச் சூடு, கொலைகள்....கொலைகள்.... நான் என்ன பாவம் செய்தேன்? இவர்களது எல்லா மிலேச்சத்தனங்களுக்கும் நான்தான் உடனிருப்பு.... வெட்கப்பட்டுக் கொள்ள வேண்டிய இரத்த சாட்சி... நேற்றுத்தான் **டால்ஸ்டாயின்** "போரும் சமாதானமும்" வாசிக்கத் தொடங்கினேன். (சொல்லியபடி கொட்டாவி விடுகிறார்.)

**சமாதானம்:** தங்களுக்கு தூக்கம் வருகின்றது. தங்கள் தூக்கத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை. வேறு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**AK 47:** நான் ஒரு அப்பாவி. மனிதர்களிடம் என்னை விட்டுவிடச் சொல்லுங்கள். நாகரிகமடைந்து இத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் இரும்பில் என் போன்ற கொலைக் கருவிகளைத்தானா செய்துகொண்டிருப்பது...? 'கையால்' பேசாமல் இனி வாயால் பேசச் சொல்லுங்கள். (மறுபடி கொட்டாவி விடுகிறார்.)

**சமாதானம்:** ஐயா, இது வரையளித்த பேட்டிக்கு நன்றி. தாங்கள் எந்தவிதமான பிரச்சினையுமின்றி நித்திரை கொள்வதற்கு சமாதானத்தை விரும்பும் மக்கள் சார்பில் இறைவனை வேண்டிக் கொள்கிறேன். "இறைவா அவருக்கு உறக்கத்தையும் பூரண அமைதியையும் கொடு" (நான் இறைவனிடம் வேண்டுதல் முடிக்க AK 47 அவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது.)

**AK 47 :** ஹலோ... என்ன...? உடனேயே களத்துக்கு வர வேண்டுமா? ஐயோ நான் என்ன செய்வேன்? சரி சரி என் தலையெழுத்து. இதோ புறப்பட்டு வருகிறேன்.
(என்னை ஏளனமாகப் பார்க்கின்றார்)
என்ன சமாதானமே, என் உறக்கத்தை கெடுத்துவிட்டார்கள். எனக்கு அமைதி கிடையாது. நான் என்ன செய்ய? சரி அதற்காக தாங்களும் சோர்வடைந்து உறங்கிவிடாதீர்கள். விழித்திரும். விழித்திரும்.

**சமாதானம்:** என்னால் எப்படி ஐயா உறங்க முடியும். உலகம் உள்ள வரை உறங்க மாட்டேன். இது சத்தியம். போய் வெற்றியுடன்.... சே...சே... எதில் வெற்றி எதில் தோல்வி... எனக்கும் வர வர எல்லாம் குழம்பி விட்டது...



**மனிதர்களா இவர்கள்? காட்டு மிராண்டிகள்! உலகத்தை ஏமாற்றுகின்றார்கள். தங்களை ஏமாற்றுகின்றார்கள். ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையில்லை. என்னையும் நிம்மதியாய் இருக்க விடுகிறார்களில்லை. இந்த மனிதர்கள் உலகில் இருந்து ஒரு பிரயோசனமுமில்லை. இவர்கள் அழிந்தால் மற்ற ஜீவராசிகளேனும் நிம்மதியாய் வாழும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை ஆறு மணியிருக்கும். வெளியே பார்த்தபோது புள்ளி போல் தோன்றியது. சூரிய வெளிச்சம் புள்ளி மேல் பட்டு ஒளிர்விட்டது. நேரம் செல்லச் செல்ல புள்ளியின் அளவு பெருத்தது. இன்னும் சிறிது நேரத்தில் புள்ளிக்கும் அவனுக்குமிடையிலான இடைவெளி குறைந்துவிடும்.

நீண்ட பன்னிரண்டு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் அவன் திரும்புகிறான். விமானம் இன்னும் சிறிது நேரத்தில் தரையிறங்கிவிடும். நேற்றுப் போல் இருந்தது.

லண்டனில் எயார் லங்காவில் ஏறிய சிறிது நேரத்தில் பணிப்பெண்கள் விழுந்தடித்து உபசரித்தார்கள். பணிப்பெண் "ஐ போவன்".

அந்த மொழி... அந்தக் குரல் அருகில் கேட்டது. கருங்காலிக் கரம் ஒன்று குரல் வளை பற்றி உரக்கக் கத்தியது.

"ஏறடா..."

இன்னும் உரத்துக் கேட்டது காதில். காக்கிச் சட்டையின் காக்கிப் பச்சைக்கும்,



விமானப் பணிப்பெண்ணின் சேலைப் பச்சைக்கும் இடையில் எத்தனை வித்தியாசம்? பார்வையில் கூட... என்ன... இரண்டுக்கும் அடிமையாகி விடுகிறோம்... கொச்சைத் தமிழும்

**கால்கள் கனவில் செல்வது போல் தானாக இயங்கின. கழியலறைக் குள்ளும் காவல். ஏனோ நீண்ட நேரம் மூத்திரம் பெய்ய வேண்டும் போல் தோன்றியது.**

**-விநோதன்-**

'ஐ போவனும்' விமானத்துக்குள்ளேயே பழகியாகிவிட்டது.

அம்மா, அப்பா, அண்ணன் மனதிற்குள் ஒரு தடவை அவர்களது முகங்களை பதித்துக் கொண்டான். இறுதியாக கிடைத்த படங்களில் இருந்த முகங்களையும் ஞாபகப்படுத்திக் கொண்டான். புகை மண்டலத்தினுள் இருந்து வெளியே வருவது போல் நினைவுகளை மீட்க முயன்றபொழுது... கடைசியாக பார்த்ததற்கும், படத்தில் பார்த்ததற்கும் வித்தியாசங்கள். கறுத்துப் போய் உடல் மெலிந்து பரந்த பார்வை... போரும், வயதும் பிள்ளைகள் பற்றிய கவலையும் முகங்களையே மாற்றிவிட்டன.

அதற்குள் விமானம் தரையிறங்கிவிட்டது. முதலில் கண்ணில் பட்டது தென்னை மரம். அதற்குப் பக்கத்தில் பச்சைக் காக்கி - துவக்குடன் - காவல்.

எச்சில் தொண்டைக்குள் இறங்க மறுத்தது.



# விளிம்புநிலை நோக்கி

ஆசையுடன் ஓடி வரும் குழந்தை, தூக்க வருபவர் முகத்தைப் பார்த்தவுடன் மறுபக்கம் ஓடிச் செல்லும். அது போல் ஓர் உணர்வு. கால்கள் கனவில் செல்வது போல் தானாக இயங்கின. கழியலறைக்குள்ளும் காவல். ஏனோ நீண்ட நேரம் மூத்திரம் பெய்ய வேண்டும் போல் தோன்றியது.

தூரத்திலேயே சுருங்கிய முகம் கண்களைத் துளைத்தது. சுருக்கத்திலும் சுடர் விடும் ஒளி அது. கரு பதித்த நாளிலிருந்து கால் உதைத்து, தலை பிடித்து, கனவுகளை சுமந்து மனத்தில் தெம்புடன், 'வருவான்' எனக் காத்திருக்கும் தாய்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

கால்களில் உற்சாகம் தொற்றிக் கொண்டது. கண்களால் வரவேற்கும் தந்தை.

'தம்பி வா'

இது தாய். அவளால் அதற்கு மேல் பேச முடியாது. ஆனால் உள்ளத்தைத் தெளிவாக்கும். தோளில் தட்டி புன்னகைக்கும் அண்ணன். அமைதியைக் குலைக்க, 'கன நேரமா நிற்கிறியளோ'

இல்லை, இல்லை இப்ப வந்து ஒரு அரை மணித்தியாலம்தான்'

அடிக்கடி கண்களில் பட்டது காவல் அரண்களே. வேறெல்லாவற்றையும் விட அதுவே இயல்பாக அவன் கண்களை தொட்டது அதிகம்.

"தம்பி Police report எடுக்க வேணும். நீ ஒருக்கா passport ஐத் தா. நான் உங்களை இறக்கி விட்டிட்டு வெள்ளத்தை பொலிஸ் ஸ்டேஷனில எடுத்துக்கொண்டு வாறன்.

இங்குள்ள அனைவரும் ஏதோ ஒருவித காவலில் தான் உள்ளார்கள்.

வந்து இரண்டு நாட்களாகி விட்டது. வீடே அமர்க்களப்பட்டது. அம்மா குசினிக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். அவனுக்குச் சாப்பாடு சமைக்க வேணும். அதைச் சாப்பிடும்பொழுது அவள் பார்த்துக் கொண்டிருக்க வேணும்... இடைக்கிடை 'இப்படிச் சாப்பிட்டா எப்படி...'

'......'

'ஒழுங்காச் சாப்பிடு'

'.....'

'தம்பி உன்னோட வந்த தரகரை ஒருக்காப் போய் பார்ப்பமே'

அம்மாவின் கவலை அவளுக்கு. அப்பாவோ அதில் தீவிரமாய் இறங்கிவிட்டார். அவனுக்கோ அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

மனதிற்குள் மீண்டும் ஒரு தடவை பழைய ஞாபகங்களை கிளறிப் பார்த்தான். எதாலை ஓடினான்... காலி றோட்டாலை தெகிவளையையும் தாண்டி ஓடேக்கை தான் அது நடந்தது. ஓட்டமா அது... உயிரைக் கையிலை பிடித்துக் கொண்டு... தனது கால்களா! இன்றைக்கும் நம்பமுடியவில்லை. கால்களை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்திருக்கிறான் இதை நினைக்கும் போது... தலையில் பட்ட ஒரு அடியுடன் மயங்கிவிட்டான். நல்ல காலம் துரத்தியவர்களில் மற்றவர்கள் வேறு சிலரை குறி வைத்து துரத்த ஒருவன் மட்டும் ஓடிவந்தான். இப்பொழுதும் அந்தக் குரல்கள் காதுகளில் ரீங்காரமிட்டன.

அவன் எழுந்து பார்த்தபொழுது ஒரு குடிசைக்குள்.... அருகில் ஒரு இளம் பெண். அவள் அருகில் வயது வந்த மனிசி. காயத்துக்குக் கட்டுப் போட்டிருந்தார்கள். அடுத்து வந்த நாட்களில் அவர்கள், தங்களது வறுமையிலும் உபசரித்தார்கள்.

**தலைமையை விமர்சித்தபோது தலைக்கு வெடி என்றார்கள். தட்டுத் தடுமாறி, தமையன் கொடுத்தனுப்பிய காசில், ஏஜன்சி தலை வெட்டி, கடல் கடந்து, இப்போது மீண்டும் அந்த மண்ணில்.**

மீண்டும் காடையர்கள் கேள்விப்பட்டு வந்தபோது, முதலில் இங்கு ஒருவரும் இல்லையென்றனர். நம்ப மறுத்து உள்ளே வந்தபோது அவர் என் கணவர். சுகமில்லாமல் இருக்கிறார் என்று அடித்துக் கூறினாள்.

இருவருக்கும் தெரிந்த ஆங்கிலத்திலும் இவனது அரைகுறை சிங்களத்திலும் அவளது பெயர் சங்கமியென்றும், அவளது தந்தை ஒரு சிறு வியாபாரி, ஊர் ஊராகப் போய் பொருட்களை விற்பவர்... இடைக்கிடை வீட்டை வந்து போவார் என்றும் அறிந்து கொண்டான். அவர் திரும்பி வந்த பொழுது அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டாலும் கத்தவில்லை. ஒரு சில நாட்களில் நிலைமை சீரானபொழுது அவரே கப்பலில் ஏற்றிவிட்டார். வீட்டை விட்டு வெளியேறிய பொழுது, 'நான் உங்களை ஒருக்காலும் மறக்க மாட்டன். மீண்டும் ஒரு தடவை சந்திப்பேன். போயிட்டு வாறன்' கூறியது நினைவுக்கு வந்தது. அவர்களது கண்களிலும் கண்ணீர். ஒரு சில நாட்களில் ஏற்பட்ட உணர்வு. ஓராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தபோதும் ஏற்படவில்லையே. சங்கமியின் தாய் சோறு பரிமாறியபோது தாயின் நினைவே வந்தது. அவளை மீண்டும் ஒரு தடவை பார்க்க மாட்டோமா? மனம் பரிதவித்தது. புரிந்து கொண்டவள் போல் அவள் ஆறுதல் கூறுவாள். அந்தச் சில நாட்களில் பயங்கரத்தையும் மீறி ஆறுதல் வார்த்தைகள் மனதை அமைதிப்படுத்தின.

வீடு வந்து சேர்ந்த பொழுது அம்மாவே கூறினாள். 'அவர்கள் பெயருக்கு ஒரு அர்ச்சனை செய்ய வேணும்'...'நல்லாயிருக்க வேணும் அதுகள்' அவள் மனத்திற்குள் நேர்ந்து கொண்டாள். அவளால் ஆனது அது.

பக்கத்து வீட்டு ராசன், கல் வீட்டு கந்தப்பு அடுக்கிக் கொண்டே போகலாம் இழப்புக்களை. விரைவில் தொத்திக் கொண்டான். போராட்டப் பயிற்சி.... 'தாய்', 'வால் காவிலிருந்து கங்கை வரை' கரைத்துக் குடித்தான்.

ஊரில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இளைஞர்கள் வெளியேறினார்கள். அவனும் ஒரு நாள்...

தலைமையை விமர்சித்தபோது தலைக்கு வெடி என்றார்கள். தட்டுத் தடுமாறி, தமையன் கொடுத்தனுப்பிய காசில், ஏஜன்சி தலை வெட்டி, கடல் கடந்து. இப்போது மீண்டும் அந்த மண்ணில்.

எப்படியாவது அந்த வீட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாய்த்தான் இருக்கும். இல்லை அது... விசாரிக்கவும் பயமாக இருந்தது. கூட வந்த நண்பன் நீண்ட காலமாக கொழும்பில் வசிக்கிறான். சிங்களம் சரளமாகப் பேசத் தெரியும். அங்கிருந்த ஒருவரைக் கேட்டபோது ரணசிங்க... சங்கமி... அவர்கள் காட்டிய குடிசை... பதினாறு வருடங்களின் பின்னர், இன்னமும் அதே தோற்றத்துடன் காட்சியளித்தது அந்தக் குடிசை. குடிசைக் கதவைத் திறந்த பெண்.... அள்ளி முடித்த 'மயிர்' முகத்தில் வியர்வை. புகைக்குள் இருந்து வருவது போல் காட்சியளித்தாள். இவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"உள்ளே வரலாமா?'

பயந்தவள் உள்ளே பாய்ந்து சென்று தகப்பனை அழைத்து வந்தாள். அவர் இருவரையும் ஏற இறங்கப் பார்த்தார். நண்பன் விடயத்தைக் கூறியபோது இவனை உற்று நோக்கியவர் சிநேக பாவத்துடன் கைகளை நீட்டிக் குலுக்கினார். மகளை அழைத்து அறிமுகப்படுத்தினார். அனைவரும் அந்த சில நாட்களை நினைவுபடுத்திக் கொண்டனர். பரிசுப் பொருட்களை அவர்களிடம் கொடுத்துவிட்டு நிமிர்ந்தபொழுது தெரிந்தது




**கதை சொல்லும் சிலைகள்....**

தாய்லாந்திலுள்ள 'திகைப்பூட்டும் காதல்' என்ற பெயரிலான இந்தச் சிலையின் முன்னால், 1999 டிசம்பர் 31ம் திகதியன்று 2000 ஜோடிகளுக்கு மணமுடித்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமான ஆண் மகனின் படம் மாலையுடன். உற்று நோக்கிய போது அவர் கூறினார், 'சங்கமி யின் புருஷன்...'

கண்கள் ஒரு நிமிடம் கலங்க, முகத்தைக் குனிந்தவள் உள்ளே சென்றாள்.

'அவள் கணவன், யாழ்ப்பாணத் துக்கு ஆமியாய் போனவர். உட ம்பு மட்டும்தான் திரும்பி வந்தது'

'கலியாணம் கட்டி சில மாதங் களுக்குள்ளேயே இது நடந்தது'

'அதுக்குப் பிறகு இப்படியே காலம் கழியுது...!'

'எத்தனையோ தரம் அழுதவள் போக வேண்டாம் என்று. எங்க் டை வறுமையிலை எங்களாலை என்ன செய்ய முடியும்'

சங்கமியின் தாய் பேச்சை மாற்றி, அன்றைக்கு நாங்க செய்த உத வியை மறக்காமல் வீடு தேடி நீங்க வந்தது... என்ன செய்யிறது எண்டே தெரியயேல்ல எங்களுக்கு...'

வெளியே மழை பெய்யத் தொட ங்கிவிட்டது. யன்னல் அருகே நின்று சங்கமி மழையைப் பார்த் துக் கொண்டிருந்தாள். அவளது மனசிலும் தூவானம் அடித்தது. மழையை இரசித்துப் பார்க்கும் அவளே வெறுக்கத் தொடங்கினாள். யன்னலை அறைந்து சாத்தினாள். மனதை நிதானப்படுத்தி சிரித்த வாறே உள்ளே வந்து, 'நீங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேணும்'

அவர்களால் மறுக்க முடியவில் லை. அவள் சாப்பாடு பரிமாறும் போது ஒரு தடவை அவளை நிமிர்ந்து பார்த்தான். இன்னமும் அந்த குழந்தை முகம் அவளில் தெரிந்தது. அமைதியான புன்னகை. முகத்தை மீண்டும் ஒரு தடவை பார்த்துக் கொண்டான். இவளுக் கா இந்த இழப்பு...?

அவர்கள் வெளியே வந்தபோது மழை நின்று விட்டது. கூடுமான வரை மௌனமாகவே இருந்தான். விரைந்து செல்லும் வாகனங்கள். வீதியோரம் விளையாடும் சிறுவர் கள். மனம் அலை பாய்ந்தது.

நாடு (?) திரும்ப முன்னர் மீண் டும் ஒரு தடவை அவர்களைச் சென்று பார்த்தான்.

சங்கமியுடன் மனம் விட்டுக் கதைத்தான்.

'என்ன செய்வதாக உத்தேசம். என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ அதனைச் செய்கின்றேன். நாளை மறுநாள் ஊர் செல்கின் றேன். அங்கு சென்று தொடர்பு கொள்கிறேன்' எனக் கூறினான்.

சாதாரணமாக, உதவி செய்த வர்களுக்கு நன்றி கூறவே சென்ற வனை, அவன் கடந்து வந்த பாதை, அவர்களைப் பார்த்த பொழுது கேள்வி எழுப்பிவிட்டது?

தாய் எவ்வளவோ கேட்டும் திரு மணத்திற்கு மறுத்துவிட்டான். தந் தையார் ஒன்றுமே பேசவில்லை. மீண்டும் ஊர் திரும்பியபோது விமான நிலையத்தில் தாய் ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். அவ ளைத் தேற்றுவது கடினமாகவே இருந்தது. உறவுகள், அறுக்க முடியாத உறவுகள். அன்புதான் அவர்களை ஆட்டுகிறது. அம்மா வுக்குத் தன் பேச்சை மகன் தட்ட வில்லை எனப் பெருமை பேசும் அன்பு. அப்பாவுக்கு தான் சொல் லித் தட்டினால் தனக்கு அவமா னம் என நினைக்கும் அன்பு. தமை யனுக்கு மதிக்கமாட்டான் என்ற பெயர் வரும் எனப் பயத்துடன் கூடிய அன்பு. உறவுச் சங்கிலிக- ளில் சுயநலம் அதிகமாகவே இரு ந்தது.

வந்த ஒரு சில நாட்களிலேயே தீவிரமாக இறங்கிவிட்டான். நண் பர்கள் சிலர் அவனது முடிவைக் கேலி செய்தனர். சிலர் நீ முட் டாள் என்றனர்.

ஒரு நாள் மாலை ஒரு சில நண்பர்கள் அவனுடன் பழையபடி கொள்கை, போராட்டம், எங்களது இன்றைய நிலை... அவனது முடி வை விமர்சித்து விவாதமே நடத் தினார்கள். மறுநாள் காலை எழ, இருபத்திநாலு வெறும் பியர் போத் தல்களை குப்பைக்குள் போட் டான். இவர்கள் யாவரும் மறந்தது ஒன்று, மனிதாபிமானம். அதற்கு முன்னால் வேறு எந்தச் சுவர்க ளும் இருக்கக் கூடாது.

வெளியே பனி கொட்டிக் கொண் டிருந்தது. காலையில் தொடங்கி யது இன்னும் நிற்கவில்லை. பியர் கடைக்கு போட்டு வரவே ஒரு மணித்தியாலம் எடுத்திட்டுது. தூரத்தே வரும்பொழுது அவனது அப்பார்ட்மென்டில் ஒளி நிறைந்தி ருந்தது. நெருங்க நெருங்க ஒளி யின் வீச்சு அதிகரித்தது.

உள்ளே சத்தம். அந்த இனிய மாலைப் பொழுதை அவனது துணைவி தோழி சங்கமியும் நண் பர்களும் அவர்களது குடும்பத்தி னரும் கலகலப்பாக்கிக் கொண் டிருந்தார்கள். அவன் ஒளியை நெருங்கிக் கொண்டிருந்தான்.

- நன்றி : உயிர்நிழல்-6.

**"சாப்பாட்டில ஈ செத்துக் கிடக்குதே, கண்ணு தெரி யேல்லையாடா?**

**"அட ஈ என்னங்கையா பெரிய ஈ. ... ஒங்க பிளேட்டுலதா ஒரு பெரிய கோழியே செத்துக் கெடக்குதே, அது ஒங்க கண்ணுக்குத் தெரியேல்லைங்களா...?**

.... .... !...?



இன்று உலகில் எத்தனையோ மருத்துவ முறை கள் உண்டு. என்றபோதிலும், பெரிதும் வளர்ச் சியடைந்ததும் போற்றப்படுவதும் அலோபதி என்கிற ஆங்கில வைத்தியம்தான். எத்தனை மருத்துவ முறைகள் இருந்தாலும் எதையும் நாம் உயர்த்தியோ தாழ்த்தியோ பேச வேண்டி யது இல்லை. ஒவ்வொரு முறையிலும் நல்ல தும் தீயதும் இருக்கலாம்.

எல்லாமே ஏதோ ஒரு வகையில் குறையோடு தான் விளங்குகின்றன. பெரிதும் வளர்ச்சியடை ந்த அலோபதி மருத்துவத்தாலும் கூட தீர்க்க முடியாத பிரச்சினைகள் உண்டு! அலோபதி யால் முடியாமல் போனவற்றைத் தீர்க்கும் திறன் மற்றைய மருத்துவ முறைகளுக்கு இருக்கிறது என்பதையும் நாம் நடைமுறையில் காணக்கூடி யதாக இருக்கின்றது. மருத்துவ முறைகளுக் குள் போட்டி இருக்கலாம். ஆனால், ஒன்று மற்றவற்றை தரம் குறைத்து பேசலாகாது.

இன்று எமது மாற்று மருத்துவ முறைகளான ஆயுள்வேதம், சித்தா, யுனாணி போன்ற சுதேச மருத்துவங்களை கேள்வியுடன் பார்க்கும் பலர் இருக்கிறார்கள். சித்தா, ஆயுள்வேதம் போன்ற சுதேச மருவத்துவங்கள் விஞ்ஞானபூர்வமானதா எனக் கேள்வி கேட்பவர்கள் இங்கு நிறையவே இருக்கிறார்கள்.

ஒரு விபத்து நடந்து மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலைமையில் எந்த மருத்துவத்தை நாடுகின் றோம்? எந்த மருத்துவ நிலையத்துக்கு ஓடுகின் றோம்? படுகாயம் அடை ந்தவருக்கு மாற்று மரு த்துவ முறையில் சிகி ச்சை உண்டா? சித்தா, ஆயுள்வேத மருத்துவ முறையில் அறிவியல் அடிப்படை உண்டா? சும்மா ஏன் ஏமாற்றுகின் றீர்கள்? என்ற கேள்விக் கணைகள் சுதேச மரு த்துவர்களை நோக்கி ஏவப்படுகின்றன.



காளாஞ்சகப் படை நோய்

எமது தொன்மையான சித்த - ஆயுள்வேத மரு த்துவங்களுக்கு என்று ஒரு வரலாற்று பாரம்ப ரியம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.தர்மராஜா
திருகோணமலை

# சரித்திரம் சிதைத்த
# சுதேச வைத்தியம்

இன்றளவும் அது மக்கள் மத்தியில் பிரபல்யமாக உள்ளது. எமது மருத்துவ பொக்கிஷங்கள் முறையாக ஆராயப்படவில்லை.

எமது இந்தப் பொக்கிஷங்கள் தொன்மையான சமஸ்கிருத மொழியிலும் தமிழ் மொழியிலும்தான் உண்டு. ஆங்கிலத்தில் இல்லை. தஞ்சை சரஸ்வதி மகாலில் சரபோஜி மகாராஜா ஏராளமான சுவடிகளைச் சேகரித்து வைத்துள்ளார். சமஸ்கிருத சுவடிகள் எங்கெங்கோ எல்லாம் கறையான் தின்று அழிகின்றன. எமது யாழ்ப்பாண மகாராஜாக்களின் பேரிலும் வைத்திய சுவடிகள் உள்ளன. இதனை எல்லாம் நாம் பாதுகாக்கவில்லை.

ஆனால் எங்கிருந்தோ வந்த ஐரோப்பியர்கள், பாதிரிமார்கள் எமது சுவடிகளைத் தேடி எடுத்து அதன் பெறுமதியை உணர்ந்து மொழிபெயர்த்து, தக்க குறிப்புக்களுடன் தத்தம் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

அவர்கள் அனுப்பிய சுவடிகளும் குறிப்புகளும் ஜெர்மனியிலும், பிரான்சிலும், லண்டனிலும் அவர்களின் நூல்நிலையங்களில் தூசி பிடித்து கிடக்கின்றன. அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனால், நம்மவர்களோ தமிழ் மொழியில் ஆராய்ச்சி செய்ய லண்டனுக்குப் போகிறார்கள்.

சுதேச மருத்துவங்களின் நிலை என்ன? இன்றைய உலகம் போட்டி நிறைந்த உலகம். எல்லாம் வியாபார மயம். இதில் மருத்துவமும் விதிவிலக்கல்ல. மருத்துவர் - மருந்து உற்பத்தி செய்வோர் - மருந்து விநியோகிப்போர் எல்லோரும் வியாபாரத்துக்காக என்ன என்னவோ எல்லாம் செய்கின்றார்கள். மருத்துவ வளர்ச்சி என்பதும் இதில் அடக்கம்!

இன்றைக்கு நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு நிலவியது என்ன? அலோபதி என்னும் ஆங்கில மருத்துவம் திடீரென மந்திரஜாலத்தில் பெரும் நவீனத்துவ வளர்ச்சியடைந்ததா? இல்லை. காலத்தை ஒட்டி கால மாற்றங்களுக்கு ஏற்பவே வளர்ச்சியடைந்து வந்தது. நுண் உயிர் கொல்லிகள் கண்டுபிடிக்குமுன் அலோபதி மருத்துவம் என்ன நிலையில் இருந்தது?

எமது மருத்துவமுறைகளின் பின்னடைவுக்கு என்ன காரணம்?

எமது சித்த - ஆயுள்வேதம் - யுனானி மருத்துவ முறைகளைப் பொதுவாக நாம் இந்திய மருத்துவம் என்றே கூறுகின்றோம். இதற்கென ஒரு பாரம்பரிய வரலாறு உண்டு, ஒரு வரலாற்றுப் பின்னணியுண்டு. இவைகள் நூற்றாண்டு நூற்றாண்டு காலமாக பரிணாம வளர்ச்சி கண்டு வந்துள்ளன. அத்தோடு இன்றளவும் நிலைத்து நிற்கின்றன என்பதும் உண்மை.

ஆயுள்வேதம் இன்று மாற்று மருத்துவமாக உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுமுள்ளது.

அப்படிப்பட்ட நீண்ட கால வரலாற்றுப் பின்னணி கொண்ட இவற்றால் எந்த நோய்க்கும் ஏன் மருந்து கண்டுபிடிக்க முடியாது?

சமீபத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா சித்த - ஆயுள்வேத வைத்தியர்கள் குழு ஒன்று இந்தியா சென்று புதுடில்லி, லக்னோ, பெனாரிஸ் இந்து பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு விஜயம் செய்து, இந்திய மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிகள், வளர்ச்சிகள் பற்றி அறிந்து கொண்டு வந்தன. அக்குழுவில் நானும் சென்று வந்தேன். அதன் பயனாக சில உண்மைகளையும் விடயங்களையும் அறிய முடிந்தது.

சித்த மருத்துவம் காளாஞ்சகப் படைக்கு (*Psoriasis*) ஒரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. அது போல் ஆயுள்வேதம் பகந்திரம், மூலம் போன்ற*ANORECTAL DISEASES*க்கு ஆயுள்வேத தடுப்பு முறையில் அறுவை சிகிச்சையை அறிமுகப் படுத்தியுள்ளது. அதாவது பழைய ஸாரு சூத்திரம் என்னும் மருத்துவ நூல் அந் நாளில் கூறி, செய்த அறுவை சிகிச்சையை இன்றைய நிலைக்கு ஏற்ப நவீனப்படுத்தி செய்கின்றது. இதை செய்பவர்கள் ஆயுள்வேத நிபுணர்களாவார்கள். இன்னும் பஞ்சகர்ம சிகிச்சை முறை கேரள மாநிலத்தில் வளர்ச்சியடைந்ததைக் கண்டு அதையும் நவீனப்படுத்தி வளர்த்து எடுத்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல் மற்றைய துறைகளுக்கும் ஆராய்ச்சி வேலைகள் நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் இந்திய மருத்துவம் எய்ட்ஸ்'க்கு ஏன் மருந்து கண்டுபிடிக்க முடியாது?

எதையும் புதிதாகக் கண்டுபிடிக்க முடியாதென நாம் முடிவெடுத்துவிட முடியாது. பெருவெளியில் மறைந்து இருப்பவை, நமது புலனுக்கு எட்டாமல் இருப்பவற்றை அந்தந்தக் காலம் வரும்போது, சூழ்நிலை, மாற்றத்துக்கு ஏற்ப தெரியப்படுத்துகின்றோம். அதுதான் மனிதனின் வளர்ச்சி.

எமது நாடும் மக்களும் நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகள் மேலைத்தேயத்தவரால் அடிமையாக்கப்பட்டது, எமது வளர்ச்சிகள் பின்தள்ளப்பட்டது. நாம் அவர்களின் கீழ் வாழப் பழகிக்கொண்டோம். அவர்கள் கூறுவதே வேதவாக்கு என நம்பவும் பழகிவிட்டோம். மக்கள் மத்தியில் ஊடுருவுவதற்கு அவர்கள் பல்வேறு தந்திரங்களையும் கையாண்டனர். அதில் மருத்துவத் துறையும் ஒன்று.

மக்கள் மனதில், பண்பாட்டில் ஆங்கில மருத்துவ பண்பாடு வளர்க்கப்பட்டுவிட்டது. கிராம மக்கள் பயன்படுத்தி வந்த உள்ளூர் மருத்துவ முறைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கடிக்கப்பட்டு, எதற்கும் ஆங்கில மருந்துகளை நாடும் நிலை உண்டாக்கப்பட்டு உள்ளது.

இன்று எமது வேப்பமரம், மஞ்சள் போன்றவற்றுக்கு உரிமை கொண்டாடப் பார்க்கும் அமெரிக்கா, நாளை எமக்கு மாங்கொட்டைகளை அனுப்பும். நாமும் இதுவரை பாவித்து ருசித்துப் பழகிய எமது மாம்பழம் உண்மையான மாம்பழம் இல்லை. 'விஞ்ஞானபூர்வமான' மாம்பழம் இல்லை. அமெரிக்கா அனுப்பிய, விஞ்ஞான பூர்வமாக உருவாக்கப்பட்ட மாங்கொட்டையில் இருந்து முளைத்த மாமரத்தில் இருந்து விளைந்த மாம்பழம்தான் உண்மையான மாம்பழம் என்ற மயக்கத்திலிருப்போம்.

முனிவர்களாலும் சித்தர்களாலும் உருவாக்கப்பட்ட மருத்துவப் பண்பாடு அன்றைய ஆட்சியாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. பல இடங்களிலும் "ஆதுரசாலைகள்" எனும் வைத்திய சாலைகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு சிகிச்சை அளித்து வந்துள்ளன.

தக்ஷசீலா, நாளந்தா போன்ற பண்டைய சர்வகலாசாலைகளில் எமது மருத்துவம் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. புகழ்பெற்ற சுஸ்சுருதசம்கிதை எனும் நூல் அறுவை மருத்துவம் பற்றி பேசுகின்றது. இன்றைய பிளாஸ்ரிக் அறுவை மருத்துவத்திற்கு முன்னோடியான நூல் சுஸ்சுருதசம்கிதை என்று பல அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

இன்றும் சுஸ்சுருதசம்கிதை, சரகர் சம்கிதை என்பன மரியாதையுடன் நோக்கப்படுகின்றன.

அலோபதியால் தீர்க்கப்பட முடியாத நாள்பட்ட நோயாளிகள், மாற்றுமருத்துவத்தை அல்லது இந்திய மருத்துவத்தை ஏன் நாடுகின்றார்கள்? ஏதோ ஒரு நம்பிக்கைதானே

1930ம் ஆண்டில் இந்திய மருத்துவ கவுன்சில் உருவாக்கப்பட்டது. இதில் இந்திய மருத்துவ முறைகள் அங்கீகரிக்கப்படவில்லை. சுதந்திரத்தின் பின் பல தேசிய நலன்களைப் போலவே, இந்திய மருத்துவ முறைகளையும் புறக்கணித்துவிட்டனர்.



**எதையும் புதிதாகக் கண்டுபிடிக்க முடியாதென நாம் முடிவெடுத்துவிட முடியாது. பெருவெளியில் மறைந்து, நமது புலனுக்கு எட்டாமல் இருப்பவற்றை காலம் வரும்போது, சூழ்நிலை, மாற்றத்துக்கு ஏற்ப தெரியப்படுத்துகின்றோம்.**

**"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"**

என்ற குறளில் திருவள்ளுவர் மருத்துவத்தை விளக்கி உள்ளார்.

இப்படியிருக்க, காலனியாதிக்கவாதிகளாக இடையில் வந்த ஆங்கிலேயர் 'உங்களது ஆதுரசாலைகள் மூடநம்பிக்கைகளை போதிக்கின்றன. உங்கள் மருத்துவம் விஞ்ஞானபூர்வமானதில்லை. இழுத்துப் பூட்டுங்கள் எல்லாவற்றையும், அடித்து விரட்டுங்கள் உங்கள் மருத்துவர் எல்லாரையும்' என்றனர்.

இந்திய மருத்துவர் பயந்து நடுங்கினர். சுவடிகளையும் மருந்துகளையும் தூக்கிக் கொண்டு ஓடினர். ஓடி ஓடி ஒதுக்குப் புறக் குடிசைகளில் கூனிக் குறுகி இருட்டில் வாழ்ந்தனர்.

அவர்களின் அறிவின் ஒளி வீச்சும் மங்கிப் போயின. சுய கௌரவம், தன்னம்பிக்கை எல்லாம் செத்துப் போயின. வெறும் ஜடங்களாயினர்! அவர்களின் தலைமுறையினர் கிளிப்பிள்ளைகளைப் போல் சுவடிகளை பாடமாக்கி ஒப்புவித்தனர்.

மருத்துவம் என்றால் இனி ஆங்கில மருத்துவம்தான் என்ற பண்பாடு வளர்க்கப்பட்டது!

இந்திய மருத்துவ முறைகள் தலைநிமிர்ந்து நிற்பது என்றால் அது தனி நபர்களின் ஆர்வம் மிக்க தொண்டுகளாலும் சுதேச மருத்துவர்களின் தன்னலமற்ற நெஞ்சுறுதிகளினாலும், சேவையினாலும்தான்.

எந்த ஒரு திட்டமும், அரசின் பக்கபலமில்லாது தனி நபர்களாலோ, தன்னார்வ தொண்டு நிறுவனங்களாலோ வெற்றி பெற முடியாது என்பது யதார்த்தமான உண்மையாகும்.

சீனத்தைப் பாருங்கள்! இந்தியா விடுதலை அடைந்த போது தான் சீனமும் விடுதலையடைந்தது. எமக்கு முன்மாதிரியாகத் திகழ்வதுதான் சீனமும் சீன மருத்துவமும்.

சீனம் விடுதலை அடைந்ததும், சீன மருத்துவத்தை தேசிய மருத்துவத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. தாழ்வாரத்துக்கு ஒதுக்கப்பட்ட மருத்துவர்கள் கௌரவத்துடன் அழைக்கப்பட்டனர். விஞ்ஞானபூர்வமற்ற மருத்துவம் எனக் கேலி செய்யப்பட்டதெல்லாம் மறுக்கப்பட்டது.

திட்டங்களைத் தீட்டினர். பாரிய மருத்துவமனைகளை அமைத்தனர். ஆராய்ச்சி மையங்களை நிறுவி பாரிய பணிகளைத் தொடர்ந்தனர். பழைய பரம்பரை வைத்தியர்களை அழைத்து, புதிய இளம் மருத்துவர்களுக்கு பயிற்றுவித்தனர். நாடி பார்க்கப் பயிற்சி கொடுத்தனர். அழிந்து கொண்டிருந்த அக்குபஞ்சர் ஊசி வைத்தியத்திற்கு புத்துயிர் கொடுத்தனர். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புதிய இரத்தம் பாய்ச்சினர். சீன மருத்துவம் புத்துயிர் பெற்றது.

எமது யோகா, ஆழ்நிலை தியானம் ஆகியவற்றை எப்படி ஆராயப் போகிறோம்? நாம் எப்போது எமது மரபுகளையும் வேர்களையும் தேடுவது?

எமது ஆய்வுகள், பரிசோதனைகள் எமது விஞ்ஞானத்தை ஒட்டி வளர்ந்தவை. இவற்றை மேற்கின் விஞ்ஞானத்துடன் ஒப்பிடத் தேவையில்லை. இரண்டும் வேறு வேறானவை. நாம் எமது அறுபட்ட ஆணி வேர்களை தேடிச் செல்ல வேண்டும்.

இந்திய மருத்துவ முறைகளான சித்த - ஆயுள்வேதம் ஆராயக் கூடாதது அல்ல. ஆராய்ச்சி வேறு, மட்டந்தட்டுவது வேறு! உண்மையான ஆராய்ச்சியை எங்கிருந்து தொடங்க வேண்டும்? நமது வளர்ச்சிகள் வெகு காலத்துக்கு முன்பே தடைப்பட்டுவிட்டது. நம்முன் பல்வேறு தடைகள் உள்ளன. இவைகளைத் தாண்டி உண்மைகளை புட்டுக்காட்டத் துணியவேண்டும். தலைநிமிர்ந்து நிற்க பற்பல ஆராய்ச்சிகள் தேவை. ஆராய்ந்து உண்மைகளை நிறுவ பல்வேறுபட்ட நிபுணர்களின் உண்மையான, உளத் தூய்மையான உதவிகளும் சேவைகளும் தேவை. ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்


## உள்நாட்டு சந்தா
## (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

## வெளிநாட்டு சந்தா
## (அமெரிக்க டாலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.
**முகவரி:**
Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo,
Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இவர்கள் இந்திய டெஸ்ட் டியூப் குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொறு மொறு சிப்ஸ்





"மாட்டைப்போல் ஊதிப் பெருக்க முனைந்த தவளையின் கதை" எனும் 17ம் நூற்றாண்டுப் புனைகதை யொன்றை சித்தரிக்கும் காட்சி இது. இது எமக்கும் பரிச்சயமான கதையல்லவா. அதுசரி இதில் விசேடமென்னவென்றால் இந்த உருவங்களை முழுக்க முழுக்க எலும்பிச்சம் பழத்தாலும் தோடம் பழத்தாலுமே உருவாக்கியிருக்கிறார்கள். இது மென்டனில் பெப்ரவரி மாதம் நிகழ்ந்த 67வது எலும்பிச்சம்பழ விழாவில் காட்சிக்கு வைக்கப்பட்டது.



ஜேர்மனியைச் சேர்ந்த புகழ் பெற்ற இசைக் கலைஞர் ஜொஹான் சபஸ் என்பவரின் 250ம் ஆண்டு நினைவு தினத்துக்காக (ஜுலை 28), சில்வான்பயா என்னும் சுவிஸ் நாட்டுக் கலைஞரால் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான உருவப்படம் இது. இம் முகத்தோற்றம் பாரிய வலையொன்றில் 3000 பிளாஸ்டிக் துண்டுகளைப் பதித்து உருவாக்கப்பட்டுள்ளது!

இதோ, இந்தக் கொழுத்த சதைப் பிண்டம் என்னவென்று கண்டு பிடிக்க முடிகிறதா உங்களால்? இது ஒரு பிரமாண்டமான பன்றி! (அடிப்பகுதியில் முகம் புதையுண்டு போயுள்ளதைக் கவனியுங்கள்) தாய்வானின் நிகழும் அதி கொழுத்த பன்றிக்கான போட்டியில் இவ் வருடம் முதற் பரிசைப் பெற்ற இப் பன்றியின் நிறை எவ்வளவு தெரியுமா? 1914கிலோ! (2010றாத்தல்). நடக்க முடியாத இதனை லொறி ஒன்றில் ஏற்றி எடுத்துச் செல்கிறார்கள்.






புதிய மில்லேனியத்தைக் குறிக்கும் 2000 ஆண்டின் எழுத்துப் பொறிக்கப்ட்ட 'கெண்டாக்ட் லென்ஸ்' இது. ஒஸ்ரியாவின் கண்ணாடிக் கம்பனி ஒன்று தயாரித்துள்ள இவ் வில்லையின் விலை 130 அமெரிக்க டொலர்கள். இதைப் பொருத்திக்கொண்டால் நீங்கள் பிறரைப் பார்ப்பதிருக்க உங்கள் கண்ணைப் பிறர் பார்க்க வைக்கலாமல்லவா!



ஜப்பான் கண்டுபிடித்துள்ள கண்ணிவெடி அகற்றும் கருவி இது. சிலந்தி வடிவான இக் கருவியின் கால்களில் பெருத்தியுள்ள ஒரு காந்த சாதனத்தின் மூலம் இது கண்ணிவெடிகளை அறிந்து அகற்றுகிறது. தூர இருந்து ரிமோட் கொன்ரோலரால் இயக்கப் படக் கூடிய இந்தப் பயனுள்ள கருவி சிவா பல்கலைக் கழகத்தினால் இப்போது பரிசோதனைக்கு விடப்பட்டுள்ளது. என்ன, இப்படி ஒரு சில கருவிகளை வாங்கி எங்கள் நாட்டு யுத் தப்பகுதிகளில் நடமாட விட்டாலென்ன என்று தோன்றுகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்லாங்குழல் வாசிக்க....

வற்றிப் போன குளத்தினடியில்
விலாங்குகள் நெளிவதைப் போல்
என் செத்துப்போன மனத்தினிடை
உன் நினைவுகள் நெளியுதடி!

நம் கண்கள் செய்துகொண்ட
கலப்புத் திருமணத்தில்
அன்புக் குழந்தை
பிறக்குமென்றிருந்தேன்...
ஆனால்
அக்கினியல்லவா பிரசவித்தது.

பஞ்சென்று நம்பி உன் நெஞ்சில்
தஞ்சமடைந்த என்னுயிரை
முட்களல்லவா முட்டுகின்றன.

உன்
மூங்கிற் காட்டு மனத்தினிடை
புல்லாங்குழல் கேட்கப்
புகுந்து பார்த்தேன்.

நீ தீயைஅங்கு
பற்ற வைப்பாயென்று தெரியாது

கைகளை
புல்லாங்குழலாக்கி...
உயிரை
ஊதுபத்தியாக்கி
உன்னைப்
பூஜித்துக் கொண்டிருந்தேன்.

என் இதயத்தை உருக்கியே
இரும்புக் "கேற்" செய்வாயென்று
தெரியாது.

உன்னுள் எனக்காய்
சொற்கள் மறுத்ததால்
என்னில் தரிசாய்
புற்கள் முளைத்தது.

அதனுள்
பனித்துளியாய் இல்லாவிடினும்
பறித்துண்ணும்
பருவப் பூச்சியாகவேனும்
நீ வேண்டும் - நான் வாழ!

- புதுமை, சுண்டுக்குளி.

## ஆபாசம்

ஓ... மனமே...
ஏன்
ஆபாசமாகிப் போனாய்...?
குப்பையைக் கிளறும்
கோழியின் கால்களாக...
குண்டு மணிகள்
மிதந்து வந்தாலும்
புழுக்களைத்தானே
புசிக்கத் தேடுகிறாய்...!

- கிராஞ்சியூரான்.

## நட்சத்திரங்கள்

இறைவன் விரித்த யாசகத் துணியில்
எறியப்பட்ட சில்லறைக் காசுகள்....
நிலாப் பெண் ஏற்றி ரசிக்கின்ற
கார்த்திகை தீபங்கள்....
ஓயாமல் கண்ணடித்து பூமிக்கண்ணனை
மயக்கும் ஒய்யார அழகிகள்....
சோதிடருக்குச் சோறுபோடும்
மூலதனத் திரவியங்கள்....
இருளுலகை நோட்டம் விட
நிறுத்தப்பட்ட, இறைவனின் ஒற்றர் படை....
களைந்துவிட்டு குளிக்கச்சென்ற
விண்ணுலகமங்கையரின்அழகுநகைகள்....
என் மனம் கவர்ந்த கள்ளியின்
முகத்தில் மின்னுகின்ற பருக்கள்....
விஞ்ஞானியும், கவிஞனும் வேரோடித்
தோண்டுகின்ற பிரபஞ்சத்தின்
பேரதிசயப் புதையல்கள்....

- பாரதிப் பிரியன், விருதோடை.



## இழக்கப்படும்

கொடிய மழையினாலும்
கடும் புயல் சூறாவளியினாலும்
சிறுகுடில் தன்னையே
இழக்கின்றது...

பெரும் அணை உடைப்பாலும்
பொங்கி வரும் வெள்ளத்தாலும்
முற்றிய வயல் தன்
மணிகளை இழக்கின்றது..

படிப்பின்றி தூங்கும் சோம்பேறி
இப்பாரில் சுமையொடு
தன் வாழ்வையே இழக்கின்றான்...

அதிகார வெறியில் சிக்கிய
அப்பாவி
நிம்மதியை இழக்கின்றான்...

வாழ்வின் அர்த்தம்
தேடாத மானிடன்
வாழும் தகுதி
முழுவதுமே இழக்கின்றான்...

-வ.சிவக்குமார், சுன்னாகம் தெற்கு.

## மழைத்துளி

எப்போதோ வந்து
என் தேகத்தில்
துள்ளிய சின்னச்
சின்ன சிங்காரி
இப்போதுமென்
மேனி தடவி
பாதம் கழுவிச்
செல்கின்றாள்..!

முகிலாய் அலைந்து
நிலவுக்கு முகம் கழுவி
வந்தவள் - இன்று
பன்னீர் தெளிக்க
மண்ணிறங்கி
வந்துள்ளாள்!

விண்ணில் இருந்து
மண்ணுக்கு வந்த
காதல் தூதாக...
சமாதானக் கம்பியாய்...
மூன்றாம் தரப்பாக...!

முத்த வெளியில்
நீயும் நானும்
அண்ணாந்து
அரவணைப்போம்
முத்து முத்து
மழைத்துளிகளை!

- எம். சுயர்சன்,
கோண்டாவில்.

## நியாயத்தின் ஏக்கம்

பனையின் கீழமர்ந்து
பருகியது பாலென்றால்
பார்ப்போர் நம்பாததனால்
பாலும் கள்ளாகுமா?

எழுதியவை ஏராளம்,
எவருமே படிக்கவில்லை,
என்பதனால்
பாவியற்ற முடியாதா?

நீருக்குள் கற்களுமுண்டு
கல்லுக்குள்ளும் ஈரமுண்டு!
சிப்பிக்குள் முத்து
குப்பைக்குள் வைரம்!

உள்ளாடை ஊத்தை
யார் கண்டார்கள் உள்ளத்தை!
கந்தல் கதர் சட்டையது
காதலுக்குத் தடைச் சட்டையா?

இரப்பது சுனம்தான்
இருப்போர் இரப்பாரோ?
இருந்தாலும்
இல்லார்க்கும் நல்லிதயம்
அதிலன்பு இருக்காதா?

- றஸ்ஸாக், ஏறாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகால் புரியாத தலையலங்காரம்



**நாகரிகம் நாளுக்கு நாள் முளைவிட்டு, துளிர்விட்டு, செடியாகி, மரமாகிக், கிளைவிட்டு வனமாகிச் செல்கிற போக்கில், நாம் எதையெதையெல்லாம் எம் பெருமைக்கும், அடையாளத்துக்கும், திரும்பிப் பார்க்க வைக்கும் கவர்ச்சிக்கும் கைப்பொருளாகப் பாவிக்கலாம் என்பதற்கு எல்லையே இல்லாமல் போய்க் கொண்டிருப்பது உண்மைதான்.**

இதற்காக இப்போதெல்லாம் எம் வனிதையரும் காளையரும் கடைப்பிடிக்கும் உபாயங்கள் சிலவேளைகளில் மலைக்க வைக்கின்றன. திகைக்க வைக்கின்றன. நவநாகரிக உடைகளை விதம் விதமாக உடுத்து அலுத்தபின் உடைக் குறைப்பில் புகுந்தனர்.

உடலை மறைப்பதாக அல்லாமல் வெளிப்படுத்தவே உடை என்ற புதுமைப் பிரகடனத்துடன் வலம் வந்தனர். அதிலும் அதிருப்தி கண்டபின் இறுதியில் உடையே அற்று வெறும் வர்ணங்களால் உடலை மறைத்துத் திகிலுற வைக்க முயன்றனர். எல்லாவற்றையுமே பழமையாக்கிச் செல்லும் காலத்தின் ஓட்டத்தை முந்தும் விதத்தில் அடுத்து, அடுத்து என உந்தும் அவாவில் தலை மீதும் கைவைத்து விட்டனர். தலையலங்காரம் இங்கே எப்படித் தலைசுற்றித் தடுமாறிப் போயுள்ளது பார்த்தீர்களா?

இப்படியொரு பெண்ணைத் தெருவில் பார்த்தால் திரும்பிப் பார்க்காமல் செல்வீர்களா?

இந்த விந்தைத் தலையலங்காரத்தில் வசதி என்ன தெரியுமா? தலையில் முடி இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

நீங்கள் வருடா வருடமாக எண்ணை பூசி, நீவி வருடி நீளமுடி வளர்க்க வேண்டுமென்ற அவசியமில்லை.

தலையில் தொப்பி அணிவதைப்போல இந்தச் சோடனைப் பந்தலைச் சூடிக்கொண்டு மிக உல்லாசமாக உலாவர வேண்டியதுதான்.

இவை தலைமுடிபோல்தான் தோற்றமளிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு அலங்காரப் பந்தலாக அமைந்திருக்கலாம். அல்லது சப்பரம் போல, குருவிக் கூடு போல, முள்ளுக்கம்பிப்பந்துபோல, மரம்போல, பறவை போல, பறவைக் காவடி போல, பேய்போல....

எதுவாக இருந்தாலும் தெருவில் போகும் எவரையும் 'அட இது என்ன கோமாளிக் கூத்து' என்றாவதுவியந்துபார்க்கவைத்து விட்டால் அதுவே போதும். வெற்றி உங்களுக்கே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தனை பெரும் எடுப்பெடுத்து, கம்பிகளையும், துணிகளையும், பிசின்களையும் இட்டுப் பின்னி, தலை கனக்கச் சுமந்து திரிவதில் என்ன அலாதியான சுகம் இருக்கப்போகிறது? இப்படியெல்லாம் அலங்கோலம் பண்ணித்தான் எம்மைப் பிறர் திரும்பிப் பார்க்கவேண்டுமென எண்ணுகிறீர்களா? தவறு! உங்கள் கண்களில் தவறு.

கோலம் எது அலங்கோலம் எது என வேறுபிரித்துக் காணு



வது கண்ணல்ல, மனம் தான். மனதுக்குப் பிடித்துக் கெண்டால் எதுவும் அழகுதான்.

இந்தத் தலையலங்காரங்களை எம்மவர் இப்போதுதான் காண்கிறார்களா? இல்லையே, முன்னர் எம் மன்னர் பெருமக்களெல்லாம் தலை கனக்கப் பெரும் கிரீடங்களை அணிந்துகொண்டு ஆயுள் பரியந்தம் இருந்து ஆட்சி செலுத்தினார்களே, அப்போது நாம், ஏனையா உமக்கிந்தச் சோதனையென்று எள்ளி நகைக்கவில்லையே!

இப்போதும்கூட அந்த மன்னராட்சிகளை நம்மில் பலர் பெருமையுடனல்லவா நினைவு கூருகிறோம்?

இன்றும் நாம் மணமகளுக்கு சடைநாகம் என்று பெரும் பூப்பந்தலைத் தலைமுடியில் கட்டி விடுவதில்லையா?

மணமகனுக்கும் தலைப்பாகை கட்டி அழகு பார்ப்பதில்லையா? சீக்கியர் தலைப்பாகை அணிவதையும், முஸ்லிம்கள் குல்லாய் அணிவதையும் நாம் வித்தியாசமாகக் கருதுவதில்லை தானே.

ஆகவே இத் தலையலங்காரக் கோலங்களில் நாம் விசனிக்க எதுவுமில்லை. அவரவர் கற்பனைத் திறனைத் தம் தலைக்குமேல் சிருஷ்டிக்கிறார்கள். ரசிக மனதோடு அவற்றை வேடிக்கை பார்க்கலாம்.

முடிந்தால் நீங்களும் இப்படி ஒன்றைக் கட்டிக்கொண்டு வீதியால் வாருங்கள். கூட்டம் சேருகிறதா இல்லையா பாருங்கள்.

இத்தகைய தலையலங்காரங்கள் மேலை நாடுகளில் ஒரு களியாட்ட விழாபோல் ஆகிவிட்டது. இவற்றுக்கு இன்று ஏற்பட்டு வரும் மவுசைக் கண்டு வியாபார மூளைகள் சும்மா இருக்குமா? அழகு நங்கைகளை, மாடல் மாதர்களை அமர்த்தி, இத் தலையலங்காரச் சோடனைகளால் அலங்கரித்து தமது விற்பனைப் பொருட்களை அவர்கள் மூலம் விளம்பரப்படுத்துகிறார்கள்.

இதில் பெண்கள் தாமே விளம்பரப் பொருளாகி நின்று ஏனைய பொருட்களை விளம்பரம் செய்யும் விதி விசனிக்கத் தக்கதுதான். ஆனால் அவர்களுக்கு இது வினையாக அன்றி விளையாட்டாகவல்லவா தெரிகிறது. அதுவும் பெரும் பண வருவாய் தேடித் தரும் விளையாட்டாக. விளையாட்டோடு பணமும் கொட்டினால் விளம்பரப் பெருளாய் நிற்பதில் என்ன வில்லங்கம் என்பதுதான் இவர்களின் நியாயம்.

தங்கள் அழகு விளம்பரமாவதை அசிங்கமான வியாபாரமாகக் கரு



தாமல் பெருமிதமாகக் கருதிக் களிபேருவகை கொள்ளும் இந்த



மாதர்களையிட்டு எம் பெண்ணிலைவாதிகள் கவலைப்படுவதில் அர்த்தமிருக்கிறாதா என்ற கேள்வி எழவில்லையா? ●

**சற்றே சரிந்த**
**தனமே புரளத்**
**தரள வடம்**
**துற்றே அசையக்**
**குழையூசலாடத்**
**துவர்கொள் செவ்வாய்**
**கற்றே னொழுக**
**நடன சிங்கார**
**நடையழகின்**
**பொற்றேரிருக்கத்**
**தலையலங்காரம்**
**புறப்பட்டதே!**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைத் தேடி...

# என் வேரைத் தேடி...

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்." இது பழயை பாடல் வரி. ஆனால் மனிதனின் பூர்வீகத்தைத் தேடி ஆராய்ந்த விஞ்ஞானிகளால் இவ்வளவு இலகுவாகக் கூறிவிட முடியவில்லை.

குரங்கு....! அது ஏறத்தாழ எம்மைப்போலத்தான்.(சேஷ்டைகள் கூட அப்படியே எம்மிடமும் - அதுவேறுவிடயம்) மனிதக் குரங்கு - அதுவோ அச்சொட்டாக எம்மையே போலத்தான். வாலும் இல்லை. இரண்டு காலில் நடக்கிறது. சைக்கிள் ஓடப் பழக்கிவிட்டால் ஓடுகிறது. அறிவு தான் இல்லையென்று பார்த்தால் இப்போது சில ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன.

அதற்குஎமதுபாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு உள்ளதைவிட எண்களைக் கணக்கு வைத்துக்கொள்ளும் திறமை அதிகமாம்! வாழைக்குலையை எட்டாத உயரத்தில் கட்டி, ஒரு தடியையும் ஸ்டூலையும் வைக்க, சிம்பன்சி முதலில் தொங்கிப் பார்த்து, பின் தடியால் எட்டிப்பார்த்து, கடைசியாக ஸ்டூலை வைத்து ஏறி தடியால் அடித்து வாழைப்பழத்தை வீழ்த்தி உண்ட பரிசோதனை நாம் முன்னர் கேள்விப்பட்டதுதான்.

இருந்தும், குரங்கு, அல்லது மனிதக் குரங்கு மனிதனானதை மதவாதிகள் மட்டுமல்ல விஞ்ஞானிகளும் எழுந்தமானமாக ஏற்றுக் கொள்ளவில்லை.


குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையில் வேறு ஒரு விலங்கு அல்லது விலங்குகள் இருந்திருக்க வேண்டும் என்பதே விஞ்ஞானிகளின் கணிப்பு.

குரங்கு ஒரு தாவர போசிணி. மனிதனோ மாமிசம், தாவரம் இரண்டும் உண்பவன். குரங்கிலிருந்து மனிதன் தோன்றியிருந்தால் ஆட்சியுள்ள மனித இனம் நிலைபெற்று குரங்கு இனம் அழிந்திருக்க வேண்டும் என்பது மற்றொரு வாதம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிம்பன்சி குரங்கின் என்புக்கூடு
கை நீளம் கால் குட்டை
மூளை சிறிது



ஒஸ்ட். அ∴பரின்சிஸின் என்புக்கூடு
கை குட்டை கால் நீளம்
மூளை சிறிது



ஒஸ்ட். அ∴ப்ரிகானஸின் என்புக்கூடு
கை நீளம் கால் குட்டை
மூளை சற்றுப் பெரிது



மனிதனின் என்புக்கூடு
கை குட்டை கால் நீளம்
மூளை பெரிது

எவ்வாறானாலும் மனிதனைத் தோற்றுவித்த அந்த இடையினம் இன்று இல்லை. அதனால் மனிதனின் பரிணாம வளர்ச்சியை குரங்குடனேயே அதிகம் ஒப்பிடக் கூடியதாயுள்ளது. குரங்கைவிட மனிதனின் மூளை பெரியது. அதனால் நெற்றி உண்டு.

அத்தோடு குரங்கிலிருந்து ஏற்பட்ட பெரிய மாற்றம் மனிதனின் கை. பெருவிரல் ஏனைய நான்கு விரல்களுக்கும் செங்குத்தாக அசையக் கூடியதாக மாறியதானது மிக நுண்ணிய வேலைகளையும் செய்யக்கூடிய ஆற்றலைக் கொடுத்தது (ஊசியில் நூலைக் கோர்ப்பதுபோல).

மனிதக் குரங்குக்கு கை நீளம், கால் கட்டை. ஆனால் மனிதனுக்கோ கால் நீளம் கை கட்டை.

இதுவரை விஞ்ஞானிகள் தேடிக் கண்டுபிடித்த தடயங்கள் மனிதனின் பிறப்பைப் பற்றிய சில எண்ணக் கருக்களைத் தந்திருந்தன.

1925ல் கிழக்காபிரிக்காவில் தோண்டியெடுக்கப்பட்ட ஒரு எலும்புக்கூடு சர்வதேசப் பத்திரிகைத் தலையங்கமாகியது. அது மனிதனின் மூதாதையரை அடையாளம் காட்டிய எலும்புக்கூடு.

அதற்கு 'லக்கி' (அதிர்ஷ்டம்) என்று பெயரிட்டனர். மனிதனை ஒத்த ஆனால் ஒருசில வேறுபாடுகளுடனான அந்த விலங்கினம் ஒஸ்ட்ரலொபிதிகஸ் அ∴பரின்சிஸ் (*Australopithecus afarensis*) என்றழைக்கப்பட்டது. இவை 40 லட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவை என மதிப்பிடப்படுகிறது.) மனித உருவம் கொண்ட அதன் தலை தட்டையாகக் காணப்பட்டது. இரு கால்களால் நடந்து திரிந்த விலங்காகத் தெரிந்தது.

அகழ்வாராய்ச்சிகள் இவ்வித மேலும் பல என்புத் தடயங்களை தந்தன. மேலும் ஆராய்ந்து செல்கையில் மற்றொருவகை விலங்கையும் கண்டனர். அது முன்னையதைவிட விருத்தியடைந்த மூளைப் பகுதியைக் கொண்டிருந்தது. இதற்கு ஒஸ்ட்ரலொபிதிகஸ் அ∴ப்ரிகானஸ் (*Australopithecus africanus*) எனப் பெயரிட்டனர்.

ஆதி விலங்கொன்றிலிருந்து ஒஸ்ட்ரலொபிதிகஸ் அ∴பரின்சிஸ் உருவாகி அதிலிருந்து அ∴ப்ரிகானஸ் உருவாகி பின்னர் மனிதன் உருவானான் என்பதுதான் விஞ்ஞானிகளின் கருத்தாயிருந்தது. (25 லட்சம் வருடங்களுக்கு முன்னரே மனிதனது ஹோமோ வகைகள் தோன்றின - ஹோமோ ஸப்பியன்ஸ்.) ஆனால் அண்மைய சில கண்டுபிடிப்புகள் புதியதொரு கேள்வியைத் தோற்றுவித்துள்ளன.

**உண்மையில் மனிதனைத் தோற்றுவித்தது லக்கியின் இளைய சகோதரரான அ∴ப்ரிகானஸ் என்றே பேகர் அனுமானிக்கிறார். ஆகையால் 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்று நாம் பாடுவது அவ்வளவு சரியில்லை.**



பேராசிரியர் லீ பேகர் என்பவர் அண்மையில் இந்த அ∴ப்ரிகானஸ் விலங்குகளின் உயிர்ச் சுவடுகளை வைத்துக்கொண்டு செய்த ஆராய்ச்சி ஆச்சரியகரமான ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

அதாவது அவற்றுக்கு நீளக் கைகளும் கட்டைக் கால்களும் காணப்பட்டன. இது சிம்பன்சியை ஒத்த இயல்பு. மனிதனுக்கு அண்மித்த இயல்பல்ல. ஆனால் இதற்கு முந்திய விலங்காக எண்ணப்பட்ட அ∴பரின்சிஸ் இவற்றைவிட குட்டைக் கைகளையும் நீளக் கால்களையும் கொண்டிருந்து மனிதனுக்கு நெருக்கமான இயல்பை வெளிக்காட்டின.

இது எப்படி ஏற்பட்டது என்பதே கேள்வியாக எழுந்தது. மனிதப் பரிமாண வளர்ச்சிப் பாதையில் அ∴பரின்சிஸிலிருந்து அ∴ப்ரிகானஸ் தோன்றியிருந்திருந்தால் அதற்கு கைகள் மேலும் குள்ளமாகி கால்கள் மேலும் நீளமாகியல்லவா செல்ல வேண்டும்?

எனவே இதுவரை எண்ணியிருந்த பரிணாமப் பாதையில் எங்கோ உதைக்கிறது.

பேகர் கூறும் அனுமானம் சற்று வேறுவிதமாக உள்ளது. விலங்குலகில் மனிதனைத் தோற்றுவிக்கும் எத்தனம் ஒரு தடவையில் நடந்ததல்ல. அது குறைந்தது இருதடவைகள் நடந்திருக்கிறது. ஏதோ ஒரு மூதாதையிலிருந்து முதலில் அ∴பரின்சிஸ் தோன்றி மனிதனாகப் பரிணாமமடைய முயன்றிருக்கிறது. ஆனால் அது தப்பி இறுதியில் அப் பரிணாமப் பாதை மொட்டை முனையாக அடங்கி விட்டது. பின்னர் திரும்பவும் ஒரு எத்தனமாக அ∴ப்ரிகானஸ் தோன்றியுள்ளது. அதனாலேயே அது அ∴பரின்சிஸிலிருந்து கூர்ப்படைந்ததாக அல்லாமல் நீண்ட கைகளையும் குட்டைக் கால்களையும் கொண்டிருந்திருக்கிறது. ஆனால் அ∴பரின்சிஸை விட விருத்தியடைந்த மூளையை அ∴ப்ரிகானஸ் பெற்றிருக்கிறது. பின்னர் அதுதான் மனிதனாகப் பரிணமமடைந்திருக்கிறது.

ஆகவே மனிதனை நோக்கிய பரிணாமத்தில் ஒன்றிலிருந்து ஒன்றாக அல்லாமல் ஒரு பொது மூதாதையிலிருந்து தோன்றிய இரு சகோதரர்கள்தான் இவையிரண்டுமென பேகர் கருதுகிறார். அதனால் 'லக்கி' மனிதனைத் தோற்றுவித்த அதிர்ஷ்டத்தை (உண்மையில் துரதிர்ஷ்டத்தை) இழந்துவிட்டது. உண்மையில் மனிதனைத் தோற்றுவித்தது லக்கியின் இளைய சகோதரரான அ∴ப்ரிகானஸ் என்றே பேகர் அனுமானிக்கிறார்.

எது எப்படியானாலும் 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்று நாம் பாடுவது அவ்வளவு சரியில்லை. ஏனெனில் இடையில் இத்தனை பேர் மனிதனென்ற அந்த மகத்தான பிறவியைத் தோற்றுவிக்க பாடுபட்டிருக்கிறார்கள்.

ஆனாலொன்று. இந்த இடை விலங்குகள் யாவற்றுக்கும் முன்னர் தோன்றிய குரங்குகளோ, அவை மனிதனைத் தோற்றுவித்துவிட்டு அழிந்துபோன பரிதாபத்தைக் கண்டு "நல்லவேளை நான் அந்தப் பாவ காரியத்தைச் செய்யவில்லை" என்று நிம்மதியடைந்திருக்கும். அதனால்தான் இன்னும் அது வாழ்கிறது! •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி உருவானோம்?


டார்வின்

**"எல்லாம் எப்படித் தோன்றின?" பூமியைப் பார்த்த மனிதன் காலாகாலமாக யோசித்த கேள்வி இது. விடை தெரியாத வேளைகளில் அவன் கடவுளிடம் தஞ்சமடைந்தான்.**

எல்லா மதங்களும் இன்றுள்ள எல்லா உயிர்களும் அந்தந்தப் படியே ஆண்டவனால் சிருஷ்டிக் கப்பட்டனவென்றே சொல்லி வந் திருக்க, அதற்கு மாறாக உரைப் பது யாவும் தெய்வ நிந்தையென் றிருக்க, விஞ்ஞானிகள் வேறு பக் கமாகச் சிந்தித்தார்கள்.

உலகில் உதிரியாகக் கண்டெ டுக்கப்பட்ட உயிர்ச்சுவடுகளிடம் ஏதோ சொல்ல முடியாத கதை ஒளிந்திருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

என்றோ தோன்றிய என்றோ அழிந்துபோன விலங்குகளின் விதி பற்றி வேதம் சொல்லாத வரலாற் றைத் தேடிப் பார்த்தார்கள். எல்லா விலங்குகளிடையேயும் எல்லாத் தாவரங்களிடையேயும் பொதுவான அம்சங்கள் இருப்பதைக் கண்டு, அவை படிப்படியாக ஏதோ ஒரு ஒழுங்கில் மாறிவருவதைக் கண்டு அப் படைப்பின் இரகசியங்களைத் தேடத் தொடங்கினர். இத் தேடலில் பிறந்ததுதான் கூர்ப்புக்கொள்கை!

**எல்லா விலங்கு களிடையேயும் எல்லாத் தாவரங்களிடையேயும் பொதுவான அம்சங்கள் இருப்பதைக் கண்டு, அவை படிப்படியாக ஏதோ ஒரு ஒழுங்கில் மாறிவருவதைக் கண்டு அப் படைப்பின் இரக சியங்களைத் தேடத் தொடங்கினர். இத் தேடலில் பிறந்ததுதான் கூர்ப்புக் கொள்கை!**

### டார்வினின் இயற்கைத் தேர்வுக் கொள்கை

கூர்ப்புக் கொள்கையை முதன் முதல் முன்வைத்த விஞ்ஞானி சார்ள்ஸ் டார்வின் (1809-1882). மத நிறுவனங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த அக் காலத்தில் மதக் கோட்பாடுகளை மறுதலிக் கும் இக் கொள்கை பேரெதிர்ப்பு க்கு உள்ளானது. எனினும் அதில் உள்ளுறைந்திருந்த தர்க்கரீதி யான உண்மையின் பலத்தால் இக் கொள்கை அங்கீகாரம் பெற்றது.

"தக்கன பிழைக்கும் தகாதன மடியும்" இதுவே அவரது இயற் கைத் தேர்வு எனும் கூர்ப்புக் கொள்கை வாதம். மாறிச் செல் லும் இயற்கைக்குத் தகுந்தாற் போல் அமைந்துள்ள உயிரினங் கள் இயற்கையால் தேர்ந்தெடுக் கப்பட, தகாத இயல்புடையவை அழிந்துவிடும் என்பதே இவர் சுட்டிக்காட்டிய நியதி.

இந்தக் கொள்கையை விளங் கப்படுத்த அவர் எடுத்துக்கொண்ட ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து நீண்டதற்கான அவரது விளக்கம் சுவையானது.

ஒட்டகச் சிவிங்கிக்கு ஆரம்பத் தில் ஆட்டைப்போல குட்டைக் கழுத்தாகவே இருந்திருக்கும். அவை வாழ்ந்த வனாந் தரத்தில் உள்ள இலை களை உண்ண நீளக் கழுத்துடையவற்றுக் கே முடிந்திருக்கும். எனவே நீளக் கழு த்துடையவை இய ற்கையால் தேர் ந்தெடுக்கப்பட குட்டைக் கழு த்துடையவை மடிந்திருக்கும். பின் இந்த நீள்கழுத்து ள்ளவற்றின் சந்ததியில் அதி கூடிய நீளக்கழுத் துடையவை இயற் கையால் தெரிந்தெடுக் கப்பட்டிருக்கும். இப்படி யிப்படியே மறுபடி மறுபடி நிக ழ்ந்து இன்றைய அதிசயக் கழுத்துடைய ஒட்டகச் சிவிங் கிகள் உருவாகியிருக்கும்.


கழுத்து நீண்டது எப்படி?

### லாமார்க்கின் பாவனைக் கொள்கை

இந்த விளக்கம் முழுமையான திருப்தியளிக்காததால் லாமார்க் என்ற மற்றொரு விஞ்ஞானி தனது 'பாவனைக் கொள்கையால்' இத ற்கு விளக்கமளிக்க முன்வந்தார். பாவனைக் கொள்கையின்படி, பாவிக்கப் பாவிக்க ஒரு இயல்பு விருத்தியடைகிறது. பாவிக்காது விட அற்றுப் போகிறது. தேவை களும் தேவையின்மைகளும் அவ யவங்களின் விருத்தியை அல்லது தேய்வைத் தீர்மானிக்கின்றன.

லாமார்க்கின் வாதத்துக்கு ஆபி ரிக்கக் காடுகளில் இருண்ட குகை க்குள் வாழ்ந்த ஒருவகைத் தேரை கள் நல்ல உதாரணமாக அமைந் தன. அவற்றுக்குக் கண்கள் இல் லை. தோலில் நிறமில்லை. தோலு க்கடியிலான உணர்ச்சி நரம்புகள் நன்கு விருத்தியடைந்திருந்தன.

இருண்ட குகைக்குள் பாவிக் கத் தேவைப்படாது விட்ட கண் ணும் தோலின் நிறமும் அற்றுப் போக, எதிரிகளின் நடமாட்டத்தை தரையின் அதிர்வுகளிலிருந்து அறிய அதிகம் பயன்படுத்தப்பட்ட உணர்ச்சி நரம்புகள் விருத்திய டைந்திருக்கின்றன.

இக் கொள்கையைக் கொண்டு லாமார்க் ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து நீண்டதற்குக் கூறிய விளக்கம் யாதென்றால், ஒட்டகச் சிவிங்கி வனாந்தரங்களில் உயரே இருந்த இலைகளை எட்டி உண்ண கழுத்தை நீட்டி நீட்டி முயன்ற தால் அதன் கழுத்து நீண்டது என்பதே.

நமக்கும் பாவிக்காத உறுப்புக் களான, வாலென்பு, குடல்வளரி, காது வெளிச் சோணை ஆகியவை பதாங்க உறுப்புகளாக- அதாவது செயற்பாடற்ற தேய்வுற்ற உறுப் புகளாக- மாறியிருப்பதைக் காண லாம். (கவனம், உங்கள் மூளை யையும் எப்போதாவது பாவித்துக் கொள்ளுங்கள். இல்லையேல் அதுவும் பதாங்கமாகிவிடும்.)

இக் கொள்கையும் பல இடங்க ளில் உதைத்தது. வலக்கையை அதிகம் உபயோகித்து வரும் கொல்லனின் வலக்கரம் வலிமை பெறுவதுண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவனது பிள்ளைக்கோ சந்ததிக்கோ அப்படி இருப்பதில்லை. இதற்காகச் செய்யப்பட்ட ஒரு பரிசோதனையில் பல சந்ததிகளாக எலிவாலை அறுத்துக்கொண்டே வந்தார்கள். ஆனால் அதற்குப் பின்னரும் எலிகள் வாலுடனேயே தோன்றின.

### மெண்டலின் பரம்பரைக் கொள்கை

கிறகர் மெண்டல் எனும் பாதிரியார், அவரைத் தாவரங்களில் நடத்திய பரிசோதனை மூலம் உயிரினங்களின் இயல்புகளைத் தீர்மானிக்கும் பரம்பரைக் காரணி ஒன்று உண்டெனத் தெரிவித்தார்.

இக் காரணிகள் எமது கலங்களிலுள்ள நிறமூர்த்தங்களில் காணப்படும் 'ஜீன்ஸ்' எனப்படும் பரம்பரை அலகுகளே எனப் பின்னர் அறியப்பட்டது. இவை மூலமாகவே பெற்றோரின் இயல்புகள் சந்ததிகளுக்குக் கடத்தப்படுகின்றனவெனவும் தெரிய வந்தது. இதிலிருந்து பிறப்புரிமையியல் எனப்படும் அறிவியல் துறை உதயமானது.

ஒரு உயிரினம் பெற்றுக்கொண்ட ஓர் இயல்பு அதன் பரம்பரை அலகில் பதியப்படாதவிடத்து அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படாது. அதனாலேயே எலியின் வால் அற்றுப் போகவில்லை. கொல்லனின் பிள்ளைக்கு வலக் கரம் வலிமையானதாக மாறவில்லை.

### விகாரக் கொள்கை

பரம்பரை அலகுபற்றிய அறிவு கூர்ப்பினை விளக்குகின்ற 'விகாரக் கொள்கைக்கு' வழி வகுத்தது.

இனப் பெருக்கத்தின்போது இனப்பெருக்கக் கலங்களிலுள்ள நிறமூர்த்தங்கள் சேர்க்கையுற்று பரம்பரை அலகுகள் புதிய சந்ததியில் மறு ஒழுங்கு செய்யப்படுவதாலேயே புதிய இயல்புகள் தோன்றுகின்றன. இதன்போது சிலவேளை திடீரென எதிர்பாராத ஒரு இயல்பு தோன்றிவிடுகிறது. இதையே 'விகாரம்' என்கிறோம்.

விகாரங்கள் அனேகமாகப் பாதகமானவை. பாதகமானால் அவ் உயிரினம் அழிந்துவிடும். சிலவேளை சாதகமான இயல்பாக இருந்தால் அவ்வியல்பைக் கொண்ட புதிய உயிரினம் இயற்கைத் தேர்வுப் போட்டியில் ஏனயவற்றை வென்று நிலைபெறுகின்றன.

ஒட்டகச் சிவிங்கிக்கு கழுத்து படிப்படியாக நீண்டு வரவில்லை. திடீரென ஏற்பட்ட ஓர் விகாரத்தால் மிக நீண்ட கழுத்துள்ள ஒட்டகச்சிவிங்கி தோன்றியுள்ளது. இவ்வியல்பு அதன் பரம்பரை அலகில் ஏற்பட்ட மாற்றத்தால் உருவானதால் அதன் சந்ததிகளுக்கும் கடத்தப்பட்டது. இந்த நீண்ட கழுத்து, உயரிய மரங்களிலுள்ள இலைகளை உண்ணக்கூடிய அனுகூலத்தைக் கொடுத்ததால் அதன் முன்னைய விலங்குகளை இயற்கைத் தேர்வில் வென்று நிலைபெற்றுக் கொண்டது. இதுவே தற்போதைய விகாரக் கொள்கையால் வளப்படுத்தப்பட்ட கூர்ப்புக் கொள்கை பற்றிய விளக்கமாகும். ●

# குளோனிங்

## டோலி பிறந்த கதை!

முளையத்தைப் புகுத்தி வளர்க்க... டோலி பிறந்தது! டோலி... அச்சொட்டாக முலையிலிருந்து கலத்தைத் தந்த அதே செம்மறி ஆட்டை ஒத்திருந்தது!

கடந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உச்ச விஞ்ஞான சாதனைகளில் ஒன்றாக அதிசயிக்கப்படுவது (அஞ்சப்படுவதும் தான்...) குளோனிங்.

இது மனிதன் நெறிப்படுத்தும் செயற்கைக் கூர்ப்பின் புதிய பாய்ச்சல். ஏற்கெனவே பிறப்புரிமையியல் அறிவைக் கொண்டு பல்வேறு இனக்கலப்புகளின் மூலம் தான் விரும்பிய தினுசில் தாவரங்களையும் விலங்குகளையும் உற்பத்தி செய்து விளைச்சலைப் பெருக்கிக் கொண்டதுடன் செல்லப் பிராணிகளையும் விதவிதமாகச் செய்து மகிழ்ந்தான்.

ரோஜாச் செடியிலிருந்து கிளையொன்றை வெட்டி பதிய முறையில் புதிய செடியை உற்பத்தி செய்வதைப் போலவே, விலங்கின் கலமொன்றிலிருந்து இனக் கலப்பில்லாமலே புதிய விலங்கொன்றை உற்பத்தி செய்யும் அதிசய முறையைத்தான் குளோனிங் என்று அழைக்கிறார்கள்.

இது எப்படி...?

சாதாரணமாக எந்த ஒரு கலத்திலும் முழு விலங்காக உருவாகுவதற்கான சகல அம்சங்களும் உள்ளது. ஆனால் அவ் அம்சங்கள் யாவும் தடைசெய்யப்பட்டு அக்கலம் எந்த உறுப்புக்குரியதோ அவ்வியல்பு மட்டும் வெளிக்காட்டப்படுகிறது. அதனால்தான் மூக்கின் கலம் மூக்காகவும் நாக்கின் கலம் நாக்காகவும் வளருகிறது.

இவ்வாறு நெறிப்படுத்தப்பட்ட கலங்களை கலங்களை *Memmary cells* என்கிறார்கள்.

அவற்றின் புறோகிறாம் தன்மையைக் குலைத்துவிட்டால் எந்தவொரு கலத்தையும் புதிய விலங்காக உருவாகிக்கிவிடலாம்.

இதைச் செய்வது எப்படி?

கெயித் காம்பெல் என்னும் விஞ்ஞானி இம் முடிச்சை அவிழ்த்தார். ஒரு கலத்தை பட்டினி கிடக்கச் செய்து ஊட்டச்சத்துக்களைக் கட்டுப்படுத்தினால் அக்கலம் செயற்பாடற்றுப் போகும் ஒரு நிலையில் இந்த புறோகிறாம் உடையும் என்பதைக் கண்டுபிடித்ததே குளோனிங் நுட்பத்தின் திறவுகோல். அத்தகைய கலம் *Quiscent Cell* எனப்படும். இதன்பின் புதிய கட்டளைகளை அக் கலத்தின் நிறமூர்த்தங்கள் ஏற்றுச் செயற்படும்.


புதிய கட்டளைகளைப் பிறப்பிப்பது யார்?

ஒரு விலங்கின் முட்டையிலுள்ள கருவைச் சூழவுள்ள பகுதி அக் கரு வளர்வதற்கான கட்டளைகளைப் பிறப்பிப்பதாகக் காம்பெல் கண்டார்.

ஒரு பெண்விலங்கின் கருக்கட்டாத முட்டையொன்றை எடுத்து அதன் கருவை அகற்றிவிட்டு, பதிலாக செயற்பாடற்றதாக்கப்பட்ட கலத்தை உள்ளே புகுத்திவிட்டால் அக் கலம் முளையமாக விருத்தியடைவதற்கான கட்டளைகளைப் பெற்று புதிய விலங்கு இனக்கலப்பின்றியே பூமியில் ஜனிக்கலாம்.

ஆம் ஜனித்தது! டோலி என்ற செம்மறி ஆட்டுக்குட்டி தான் முதன்முதலில் இனக்கலப்பின்றி மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட அதிசயப் பிறவி.

ஒரு பெண் செம்மறி ஆடென்றின் முலையிலிருந்து எடுக்கப்பட்ட கலமொன்றுக்கான ஊட்டச்சத்தை 20ல் ஒரு பங்காகக் குறைத்து 5 நாட்களின்பின், அக்கலம் செயற்பாடற்ற நிலையை எய்தியது. அதனை மற்றோர் பெண் ஆட்டின், கரு பிரிக்கப்பட்ட முட்டைக்குள் செலுத்த, முளையமாக வளர்ந்தது. பின்னர் வேறோர் பெண் ஆட்டின் கருப்பையில அம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

மூலம் : டினோ

பிரெஞ்சிலிருந்து தமிழில் :
க. கலாமோகன்

நீண்ட காலமாக விமெர் கற்றில் உள்ள தனது நாட்டுப்புறத்து வீட்டில் வாழும் எண்பத்தாறு வயதான பிரபல ஓவியர் லூசியோ பிறெடொன்ஸானி ஓர் காலையில் எழுந்து தனக்கு ஒவ்வொரு நாளும் வருகின்ற தினப்பத்திரிகையைத் திறந்தபோது பிரமித்துப் போய் விட்டார். காரணம் மூன்றாம் பக்கத்தின் கீழ் வலது பக்கத்திலே கண்ட பின்வரும் தலைப்பால்தான்.

**இத்தாலியக் கலை உலகம் கவலையில்... ஓவியர் பிறேடொன்ஸானி காலமாகிவிட்டார்.**

தலைப்பின் கீழ் பின்வரும் குறிப்புகள் இருந்தன:

21 பெப்ரவரி, விமெர்கற். மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத ஓர் குறுகியகால் நோயால் ஓவியர் பிறெடொன்ஸானி இரண்டு தினங்களின் முன்னே காலமானார். தனது மரணக்கிரியைகளுக்குப் பின்னரே தனது மரணம் பற்றி அறிவிக்கப்பட வேண்டும் எனத் தனது விருப்பத்தைக் காலமானவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஒரு பந்தியிலே காலமானவரின் மகிமை, பெருமை இவைகளைப் புகழ்ந்துரைக்கும் கலை விமர்சகர் ஸ்தெபானியின் பெயரில் வெளிவந்திருந்தது. இதே வேளையில் இருபது வருடங்களுக்கு முந்திய படமொன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பிரமித்துப் போய் தனது விழிகளையும் நம்பாமல் நோயாளியைப் போல மிகவும் மனவேதனையுடன் தனது அவதியையும் மீறி புகழாரக் கட்டுரையில் விழிகளைப் போடுகின்றார். புகழார வரிகளுக்கு மத்தியிலே மறுக்கப்பட முடியாத ராஜதந்திரத்துடன் கூடிய சில விஷ வரிகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

மூச்சுத் திணறலில் இருந்து தப்பிய பிறெடொன்ஸானி "மதில்ட்! மதில்ட்!" எனத் தனது மனைவியை அழைக்கிறார்.

பக்கத்து அறையில் இருந்த அவரது மனைவி "என்ன நடந்துவிட்டது?" எனக் கேட்கின்றாள்.

"விரைவாக வா! மதில்ட்! விரைவாக வா" எனக் கெஞ்சி அழைக்கின்றார்.

"ஒரு கணம் இரு. நான் உடைகளுக்கு அழுத்தம் போட்டுக் கொண்டிருக்கிறேன்."

"உடனடியாக வாவென்று நான் உனக்குச் சொல்கின்றேன்."

அவரது குரல் மிகவும் கலக்கமாக இருந்ததால் அயன்பொக்ஸைக் கீழே வைத்துவிட்டு மதில்ட் ஓடி வருகின்றாள்.

"பிடி! இதனை வாசி!" ஓவியர் பெருமூச்சோடு பத்திரிகையை அவளிடம் நீட்டுகின்றார்.

பத்திரிகையை அவள் பெறுகின்றாள். முகம் வெளிறுகின்றது. பெண்களுக்கேயுரிய அற்புதமான ஞாயமின்மையோடு தனது நம்பிக்கையீனத்தை வெளிக்காட்டுகின்றாள்.

"ஓ! எனது லூசியோ! எனது பரிதாபத்திற்குரிய லூசியோ! எனது புதையலே!" எனும்போது கண்ணீர் கொட்டுகின்றது.

இந்தக் காட்சி ஓவியருக்குச் சினத்தையூட்டுகிறது.

"மதில்ட், உனக்கு என்ன விசரா? நான் உயிரோடு இருப்பது உனக்குத் தெரியவில்லையா? இது ஓர் தவறு என்று, நினைத்துப்பார்க்க முடியாத தவறு என்று உனக்கு விளங்கவில்லையா?"

உடனடியாகவே மதில்ட் தனது அழுகையை நிறுத்திவிட்டு, கணவனைப் பார்க்கின்றாள். அவரது முகம் சாந்தியடைகின்றது. சில கணங்களின் முன்னர் தன்னை விதவையாக உணர்ந்துகொண்ட அவளும் நிலைமையின் ஹாஸ்யப் போக்கால் ஓர் மகிழ்ச்சி விபத்துக்குள்ளாகின்றாள்.

"ஓ! எனது கடவுளே! இது எவ்வளவு முசுப்பாத்தியானது. ஓ! ஓ! எத்தகைய கதை! என்னை மன்னித்துவிடு. லூசியோ, உனக்குத் தெரியுமா கலையுலகின் கவலையை... நீயோ இங்கு விறைத்தும் மென்சிவப்பாகியும்..." கீச்சுக் குரலில் கெக்கணம் கட்டிச் சிரித்தாள்.

"உனது நடிப்பை நிறுத்து. நடந்தது என்னவென்று உனக்கு விளங்குகின்றதா? இது மோசமானது. மிகவும் மோசமானது. பத்திரிகைப் பணிப்பாளருக்கு நான் யாரென்பதைக் கட்டாயம் காட்டுவேன். இந்த முசுப்பாத்திக்காக அவர் நிச்சயம் நிறையக் கட்ட வேண்டிவரும்."

பிறெடொன்ஸானி விரைந்து நகருக்குச் செல்கின்றார். உடனடியாகவே பத்திரிகா அலுவலகத்தை நோக்கி விரைகின்றார். மிகவும் நாகரிகமாக பணிப்பாளர் அவரை வரவேற்கின்றார்.

"குருவானவரே! உட்காருங்கள் எனத் தயவு செய்து உங்களை நான் கேட்கின்றேன். அதில் உட்காரவேண்டாம். இது வசதியானது. இதில் உட்காருங்கள். ஒரு சிகரெட்? இந்த லைட்டர்கள் ஒருபோதுமே ஒழுங்காக வேலை செய்வதில்லை. இது சினத்தையூட்டுவது. இதோ! சாம்பல் தட்டு. இப்போது நீங்கள் சொல்வதை நான் கேட்பேன். எந்த நல்காற்று உங்களை இங்கே அழைத்து வந்தது?"

தனது பத்திரிகை பிரசுரித்ததையிட்டு நடிக்கின்றாரா? அல்லது நக்கலடிக்கின்றாரா? பிறடொன்ஸானி இளைத்துப் போய்விட்டார்.

"உங்களது இன்றைய பத்திரிகையிலே... மூன்றாவது பக்கத்திலே... எனது மரணத்தை அறிவிக்கும் செய்தியொன்று..."

"என்ன உங்களது மரணத்தை அறிவிக்கும் செய்தியா?"

மேசையிலே மடிக்கப்பட்டுக் கிடந்த பத்திரிகையொன்றை எடுத்துப் பணிப்பாளர் விரிக்கின்றார். பார்க்கின்றார். விளங்கிக் கொள்கின்றார். (அல்லது விளங்கிக் கொண்டதைப் போல காட்டுகின்றார்.) ஓர் சங்கட கணத்தை வாழ்ந்தது போல "ஓ!" என்கின்றார். ஓர் கணத்தின் முறிவில் தன்னை நன்கு சுதாரித்துக் கொண்டவரைப் போல இருமுகின்றார்.

"உண்மையிலேயே ஓர் சிறு தவறு நடந்துவிட்டது. ஓர் மெல்லிய விபரீதம் நடந்துவிட்டது.."

பிறெடொன்ஸானி தனது பொறுமையை இழக்கின்றார்.

"விபரீதமா? நீங்கள் என்னைக் கொன்றுவிட்டீர்கள். நீங்கள் செய்தது இதுதான். இது அரக்கத்தனமானது" என்று கத்துகின்றார்.

"ஆம், ஆம்" சாந்தமாகச் சொல்கின்றார் பணிப்பாளர். "நான் என்ன சொல்லுகிறேன் எனில்... ஹூம்... ம்.. ஓர் செய்தி பற்றிய பார்வையில்... ஹூம்... ஹூம்.. எங்களது நோக்கத்தைச் சற்றே கடந்துவிட்டது. இன்னொரு வகையிலே பார்த்தால் எங்களது பத்திரிகை உங்களது கலைக்குச் செய்த

**"குருவானவரே! உட்காருங்கள் எனத் தயவு செய்து உங்களை நான் கேட்கின்றேன். அதில் உட்காரவேண்டாம். இது வசதியானது. இதில் உட்காருங்கள். ஒரு சிகரெட்? இந்த லைட்டர்கள் ஒருபோதும் ஒழுங்காக வேலை செய்வதில்லை. இது சினத்தையூட்டுவது. இதோ! சாம்பல் தட்டு. இப்போது நீங்கள் சொல்வதை நான் கேட்பேன்.**



**"அது எப்படியாம். நானோ உயிரோடு இருக்கின்றேன். நீங்களோ நான் இறந்துவிட்டேன் என எழுதியிருக்கின்றீர்கள். இதற்கு மெல்லிய தவறு என நீங்கள் பெயரிடுகின்றீர்களா? மிகவும் சாதாரணமாகப் பைத்தியமாவதற்கு இதைவிட வேறெதுவும் தேவையில்லையல்லவோ?**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காணிக்கையின் உண்மையான பெறுமானத்திற்கு மதிப்பளித்திருப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்..."

"என்ன காணிக்கை! நீங்கள் என்னை அழித்துவிட்டீர்கள்"

"ஹும்... ஓர் மெல்லிய தவறு நடந்துவிட்டது என்பதை நான்...."

"அது எப்படியாம். நானோ உயிரோடு இருக்கின்றேன். நீங்களோ நான் இறந்துவிட்டேன் என எழுதியிருக்கின்றீர்கள். இதற்கு மெல்லிய தவறு என நீங்கள் பெயரிடுகிறீர்களா? மிகவும் சாதாரணமாகப் பைத்தியமாவதற்கு இதைவிட வேறெதுவும் தேவையில்லையல்லவோ? இந்தக் கட்டுரை வந்த இடத்தில் ஓர் திருத்தம் முறைப்படி போடப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன். இதே வேளையில் மான நஷ்டம் கேட்டு வழக்குத் தொடரும் உரிமையையும் நான் எடுத்துக் கொள்கின்றேன்."

"மான நஷ்டமா? வேண்டாம் எனது திருவாளரே"

"குருவானவர்" என்ற நிலையில் இருந்து உடனடியாகவே ஓர் சாதாரணர் நிலைக்கு அவர் போய்விட்டார்.

"உங்களை வந்து சேர்ந்திருக்கும் அசாதாரணமான அதிர்ஷ்டத்தைப் பற்றி ஒரு தடவை யோசித்துப் பார்க்க முடியுமா? எந்த ஒரு ஓவியரும் இப்படியொரு சந்தர்ப்பத்தைக் கண்டால் துள்ளிக் குதித்துவிடுவார்..."

"என்ன! அதிர்ஷ்டமா?"

"ஆம். அதிர்ஷ்டம். எப்படி! ஓர் கலைஞன் இறக்கும்போது அவனது படைப்புக்களின் விலை குறிப்பிடத்தக்க விதத்தில் உயர்ந்து விடுகின்றது. நீங்கள் அதைத் தேடவில்லை. நிச்சயமாக அது எங்களுக்குத் தெரியும். ஆனால், விலைமதிக்க முடியாத சேவையொன்றை நாங்கள் உங்களுக்குச் செய்துள்ளோம் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியும்."

"இதற்காக நான் இறந்து போக வேண்டுமா? ஆவியாகிப் போய் விடுவதா?

நிச்சயமாக. இந்த உணர்வுமயமான சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டுமா? இதனை நீங்கள் இழக்கத் தயாரில்லையா? கொஞ்சம் சிந்தியுங்கள். மரணத்திற்குப் பின்னான ஓர் ஓவியக் கண்காட்சி, இதனை அட்டகாசமாகச் செய்தல் எங்கள் பொறுப்பு. எனது குருவானவரே! பல லட்சங்களை அள்ளித் தரும் ஓர் விஷயம் இது."



# தவறு

"நீங்கள் இதைச் செய்யும் போது நான் என்னவாகுவேன்? வெளியுலகத்திலிருந்து நான் காணாமல் போக வேண்டும் அல்லவா?"

"சொல்லுங்கள், அசந்தர்ப்பவசத்தால் சகோதரர் யாரும் உங்களுக்கு உள்ளனரா?"

"ஆம். இது எதற்கு? அவர் தென்னாபிரிக்காவில் வாழ்கின்றார்."

"அற்புதம். அவர் உங்களை ஒத்திருக்கின்றாரா?"

"ஆம். கிட்டத்தட்ட. ஆனால் அவருக்குத் தாடியுள்ளது."

"அற்புதம். உங்களது தாடியையும் வளர விடுங்கள். உங்களது சகோதரர் நீங்களே எனச் சொல்லுங்கள். தபால் ஆபீஸிற்கு ஒரு கடிதம் அனுப்புவதைப் போல எல்லாம் நடக்கும். என் மீது நம்பிக்கை வையுங்கள். விஷயங்கள் எந்த வழியில் போகின்றனவோ அந்த வழியில் போக விடவேண்டும். என்னை விளங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வது போல ஒரு திருத்தம் போட்டால் அதனால் என்ன பயன் கிடைக்கப் போகின்றது. நான் இப்படித் தனிப்பட்ட ரீதியாகச் சொல்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்கவும். திருத்தம் போட்டால் கேலிக்குரியவராகவே பலர் முன்னேயும் நீங்கள் தோற்றம் அளிப்பீர்கள். மறுபிறப்புக்கள் ஒருபோதுமே இரக்கத்துக்குரியன வல்ல என்பதை மறுத்துச் சொல்வதில் எந்த அர்த்தமுமே இல்லை. கலையுலகில் விஷயங்கள் எப்படி நடக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும்தானே. உங்கள் மீதான பல புகழாரங்களின் பின்னர் உங்களது மறுபிறப்பை அறிவித்தால் அது உங்கள் மீதான மோசமான படம் ஒன்றையே காட்டும். அத்தோடு உங்கள்மீது பலருக்கு சந்தேகத்தையும் ஏற்படுத்தும்."

அவருக்கு இல்லை என்று சொல்லத் தெரியாது போய்விட்டது. தனது நாட்டுப்புறத்து வீட்டுக்குச் சென்று ஒரு அறைக்குள் பதுங்கிக் கொள்கின்றார். தனது தாடியை வளர விடுகின்றார். அவரது மனைவியோ கவலையில் மூழ்குகின்றாள். நண்பர்கள் கவலை தெரிவிக்க அவளிடம் வருகின்றனர். குறிப்பாக ஒஸ்கார் பிறெடலி, அவர்கூட ஓர் ஓவியர், எப்போதுமே பிறெடொன்ஸானியின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிழலாக இருந்தவர். பின்னர் ஓவிய ரசிகர்கள் வரத் தொடங்குகின்றனர். அதன்பின் வணிகர்கள், ஓவியம் சேகரிப்போர், வியாபாரத்துக்கான நல்ல வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்பதை முகர்ந்து கொண்டோர். முன்னர் மிகவும் சிரமத்துடன் 40 ஆயிரம், 50 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட ஓவியங்கள் இப்போதோ பிரச்சினையில்லாமல் 200 ஆயிரத்தைத் தொட்டன.

இதேவேளையில் பிறெடொன்ஸானி தனது பதுங்கு குழியில் இருந்து புதிய படங்களைக் கீறி அவைக்குப் பழைய திகதிகளைப் போட்டுக்கொண்டிருந்தார்.

ஒரு மாதத்தின் பின்னர் அவரது தாடி உண்மையிலேயே நீண்டு வளர்ந்து விட்டது.

பின்னர் தென்னாபிரிக்காவில் உள்ள தனது சகோதரர் வந்து விட்டார் என்று மற்றவர்களை நம்பவைக்க தனது பதுங்கு குழியைவிட்டு வெளியேறுகின்றார். கண்ணாடி போட்டிருந்தார். தனது உச்சரிப்பையும் வெய்யில்தேச உச்சரிப்பைப் போல மாற்றிக் கொண்டார். "அவரைப் போலவே இவரும் இருக்கின்றார்" எனப் பலரும் வியந்து கொண்டனர்.

தனது மறைவு வாழ்க்கையின் பின்னர், ஓர் ஆவல் உந்தித் தள்ளியதால் மேற்கொண்ட உலாவொன்றின்போது மயானத்தை நோக்கிச் செல்கின்றார். தனது குடும்பத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலவறைக்குள், ஓர் பளிங்குக் கற்பலகையில், சிற்பி ஒருவர் தனது பெயரையும் தான் பிறந்த இறந்த திகதிகளையும் செதுக்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறார்.

காலமானவரின் சகோதரன் எனத் தன்னைச் சிற்பிக்கு அறிமுகம் செய்து கொள்கின்றார். பின்னர் வெண்கலக் கதவைத் திறந்து தனது பெற்றோர்களினது சவப்பெட்டிகள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோவிற் கீழறைக்குச் செல்கின்றார். ஆ! எவ்வளவு பெரிய குடும்பம்! ஒரேயொரு பெட்டி மட்டும் புத்தம் புதியதாகவும் அழகியதாகவும் இருந்தது. அதன் மீதுள்ள பித்தளைத் தகட்டில் "லூசியோ பிறடொன்ஸானி" என எழுதப்பட்டிருப்பதை வாசிக்கின்றார். பெட்டியின் மூடி ஆணிகளால் இறுக்கப்பட்டிருந்தது. இனம் புரியாத ஒரு பயத்துடன் பெட்டியின் மூலையில் தட்டிப்பார்க்கின்றார். சந்தோஷம் தருவது போல சவப்பெட்டியில் இருந்து வெறுமையான சத்தம் ஒன்று வந்தது.


பரிஸில் மில்லேனிய கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மெர்க்குரி சிலை

ஆகாயம் கைப்படவே
கற்பனைப் புரவியொன்று
வலம் வரும் மனசில்
கவிதைகள் சிறகடிக்கும்...

- பிரியரேகா

எதையும் எதிர்கொள்
முகந் திருப்பாதே
மனஞ் சலிக்காதே...
ஆகாயம் மேவிய பாய்ச்சலில்
தடைகள் வெறுந் தோற்றம்

- சு. வில்வரத்தினம்

ஆச்சரியம், ஆனால் மெல்ல மெல்லமாக விமர்சகர் ஒஸ்கார் பிறடெலியின் வரவுகள் அதிகரிக்கத் தொடங்கின. மதில்ட் மகிழ்ச்சி கொண்டவளாகவும், புத்திளமை கொண்டவளாகவும் தோன்றினாள். சந்தோஷமும் ரசனையும் கலந்த உணர்வோடு பிறடொன்ஸானி தனது உரு மாற்றத்தை அவதானித்தார்.

எனது தனிமையை நினைத்து ஆறுதல் சொல்ல வந்து போகும் அவனை நீ சந்தேகிக்கின்றாய். உனக்கு வெட்கமாக இல்லையா?"

0 0 0 0

இதே வேளையில் மரணத்துக்குப் பிந்திய ஓவியக் கண்காட்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டு

**அவரது கால்கள் உடனடியாகவே வாசலை நோக்கிச் சென்றன. பின்னர் மிகவும் மெதுவாக வெளியேறி மயானத்தை நோக்கி நடக்கின்றார்.**

**அது ஓர் மழைக்கான இனிய மாலையாக இருந்தது.**

ஓர் மாலை நேரத்தில், பல ஆண்டுகளாக வராத விருப்பம் தனக்கு வந்ததைப் போலவும், தான் அவளை விரும்புவதாகவும் ஓர் விழிப்பு அவருக்குள் வந்தது. தனது விதவையை அவர் விரும்பினார்.

ஆனால், பிறடெலியின் ஒழுங்கான வரவுகள் நேர ஒழுங்குகளையும் கடக்காதிருந்தன எனச் சொல்ல முடியுமா? இதனை பிறடொன்ஸானி மதில்ட்டிற்குச் சுட்டிக்காட்டியபோது அவள் இப்படிச் சீற்றமடைந்து கொண்டாள்:

"உனக்கு என்ன நடந்துவிட்டது? ஒஸ்கார் பாவம்! உன் உண்மையான ஒரேயொரு நண்பன். உனக்காக இரங்கும் ஒரேயொரு நண்பன்.

அது பெரிய வெற்றியைக் காண்கின்றது. முழுச் செலவையும் தள்ளி லாபமாக மட்டும் ஐந்தரை மில்லியன் கிடைக்கின்றது. பின்னர் குறிப்பிடத்தக்க ஒரு வேகத்தில் பிறடொன்ஸானியாவும் அவரது படைப்புக்களும் மறையத் தொடங்குகின்றன. கலைச் சஞ்சிகைகளில் அவரைப் பற்றிய சேதிகளுக்கு சிறிய இடங்களே கிடைக்கின்றன. விரைவில், அவர் துண்டாகவே மறைந்து போய்விடுகின்றார்.

கவலை தரும் ஒருவித பயத்தோடு, லூசியா பிறடொன்ஸானி இல்லாமலேயே உலகம் - முன்பு போல சுற்றிக் கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். சூரியன் முன்பு போல உதித்தும் மறைந்து கொண்டுமிருந்தது. பணிப்பெண்கள் முன்பு போலவே காலையில் கம்பளங்களைத் தட்டித் துடைத்துக் கொண்டிருந்தனர். ரயில்கள் புகையால் கறுத்துக் கொண்டிருந்தன. சனங்கள் சாப்பிட்டனர். சந்தோஷம் செய்தனர். பூங்காவின் இரும்பு வேலிக்கு முன்னால் நின்றபடி பையன்களும் பெட்டைகளும் இருட்டில் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் நாட்டுப்புற உலாவொன்றிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும்போது, முகப்பறையில் தனது இனிய நண்பன் ஒஸ்கார் பிறடெலியின் மழைக்கோட் தூக்கப்பட்டுக் கிடப்பதை அடையாளம் கண்டுகொள்கிறார். வீடு அமைதியாகவும், ஓர் விநோதமான அந்தரங்கத்திலும், அழைப்புக்கரம் நீட்டுவதைப் போலவும் இருந்தது. அத்தோடு கீழ்க்குரலில் பேசும் சத்தமும், முணுமுணுப்புக்களும், மிருதுவான பெருமூச்சுக்களும் கேட்டன.

அவரது கால்கள் உடனடியாகவே வாசலை நோக்கிச் சென்றன. பின்னர் மிகவும் மெதுவாக வெளியேறி மயானத்தை நோக்கி நடக்கின்றார். அது ஓர் மழைக்கான இனிய மாலையாக இருந்தது.

தனது குடும்பத்துக்குரிய மயான கோவிலுக்கு வந்தவுடன் தன்னைச் சுற்றி ஒரு தடவை பார்க்கின்றார். வாழும் உயிர்கள் என்று எதுவுமில்லை. எனவே வெண்கலக் கதவைத் திறக்கின்றார்.

அவசரப்படாமல் ஒரு சின்னக் கத்தியின் உதவியுடன் புத்தம் புதிய சவப்பெட்டியை மூடியிருந்த ஆணிகளைக் கழற்றுகின்றார். அவரது சவப்பெட்டி, அதாவது லூசியா பிறடொன்ஸானியின் சவப்பெட்டி. மிகவும் அமைதியாக பெட்டியைத் திறக்கின்றார். இறந்தவர்களுக்கான அமர நித்திரைக்குத் தோதாக எப்படிக் கிடந்தால் நல்லது என யோசித்து முதுகை நீட்டி அதற்குள் கிடந்து பார்க்கின்றார். தான் கிடந்த விதம் தோதானது என அவருக்குப் படுகின்றது.

எந்தப் பதட்டமும் இல்லாமல் சவப்பெட்டியின் மூடியைத் தனக்கு மேல் கொண்டு வருகின்றார். அது மூடப்படுவதற்கு சிறு வெளி மட்டுமே தெரியும்போது - யாரும் தன்னை அழைக்கிறார்களா என்பதை அறிய சில கணங்கள் தனது காதுகளை கூர்மையாக்குகின்றார்... எவருமே அவரை அழைக்கவில்லை.

எனவே பெட்டியை முழுமையாக விழவிடுகின்றார். ●

நன்றி: இருள்வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவியம் வரையாத தூரிகை!

அனார்

பிரிவு நொறுக்கிப் போட்ட
இதயத்தை,
தனிமை - பொறுக்கித் தின்னும்

மௌன முகாரியுள்
தோல்வியின் பாடலது
கரைந்துருகும்!
அது-
விதியைப் பழிவாங்க நடந்த
விபத்து,
நிழல்கள் கறையென்று
வெளிச்சம் வழக்குரைக்க
வாழ்க்கை வளையுமின்னும்!

சுகமெல்லாவற்றையும்
துன்பம் -
பறித்துத் தின்ற பின் -
கொறித்துப் பார்க்கக்கூட
ஒரு சந்தோசமில்லாத
வாழ்வாகிற்று!

நான் ஒரு
ஓவியம் வரையாத... தூரிகை!
படுகுழிக்குள் போட்டு
எனக்கான பரவசங்களை
மூடிவிட்டனர்.

பொறுமையின்
பெருஞ்சுவர்களும்...
இடித்து நொறுக்கப்பட்ட பிறகு,
எதைக் கட்டுவது
இதயத்தின் மீது...?

காய்ந்து விழ்ந்த
மனச் செடியில்
மலர்களை எதிர்பாராதீர்கள்!
கூச்சலிட முடியாமல்....
அடித்துக் கதறவும் விடாமல்
ஜீவன் -
ஊமையாக்கப்பட்டிருக்கிறது.

சாபங்கள் - என் பூமியில்...
கொட்டும் மழை!!
சோகங்கள் - என் வானில்...
பரவும் வெயில்!!

புதிய கனவுகளும்
புத்தாடைகளும்
அலங்காரமாய் புறப்படும்
ஊர்கோலத்தின் மத்தியில்

கிழிந்த ஆசைகளோடு...
கீறல் விழுந்த காயங்களோடு...
நானும் திரிவேன்!

## மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்

சமூகத்தில் பெண்ணின் இடம் எது? இக்கேள்விக்கு ஆண்கள் கூறும் பதில்கள் பொருட்படுத் தப்படவேண்டிவை அல்ல. பாரதி முதல் ஜெயகாந்தன் வரை எத்தனையோ பேர்கள் பெண் ணுக்காகப் பேசியிருக்கிறார்கள். ஆயினும் ஒரு பெண்ணே தன் னைப் பற்றி கூறுவது போல் ஆகாது. மிகச் சிலரின் உயர்ந்த லட்சியங்களை ஒதுக்கிவிட்டு நோக்கினால் ஆண் வர்க்கத் தின் பதில் ஒன்றுதான்.

"பெண்களுக்கான இடம் சமை யலறை மற்றும் படுக்கையறை" என்பதுதான் அந்த பதில்.

காலங் காலமாய் வள்ளுவர் தொட்டே வழங்கி வரும் மரபு இது. வாசுகி, சீதா, மகாலட்சுமி, பூமாதேவி, அன்னை போன்ற சொற்களின் பின்னே பெண்ணடி மைத்தனத்தின் வரலாறு பதுங் கியுள்ளதை எவர் மறுக்க முடி யும்?

சமூகத்தில் பெருகிவரும் பாலி யல் வன்முறைகள், குடும்ப அடக் குமுறைகளால் பெண்கள் இழிவு படுத்தப்படுவதும், உத்தரவாத மற்ற வாழ்வை பெரும் சுமை யுடன் சுமப்பதையும் பிரக்ஞை கொண்ட யாரும் காண முடியும்.

அவளைப் பூட்டிய விலங்கு எது?
அவளை மயக்கிய மாயை எது?
அவளுடைய விடுதலை எது?

பெண்ணைப் பூட்டிய முதல் விலங்கு கற்பு என்பதை காலந் தோறும் நாம் படிக்கிறோம். தாசி வீட்டிற்கு கணவனைக் கூடையில் சுமந்து சென்றவள் பெண். தன் கற்புக்கு இழுக்கு வந்தபோது அக்னியில் குளித்த வள் பெண்.

கற்பு நெறி தவறிய கணவனுக் காக ஊரையே எரித்த கற்புக் கரசிகள் பிறந்த பூமி இது. ஐவ ருக்கும் ஒருத்தி பத்தினியாக இருக்கக் கூடும். (ஆறாவதாக ஒருவனை அவள் மானசீகமாக காதலித்தாள் என்பது தனிக் கதை) கற்பு நெறி தவறியதால் ஒருத்தி கல்லாக சபிக்கப்பட்டாள். ஒருத்தியை ஊரே கல்லடித்துக் கொன்றது. உடன்கட்டை ஏறி னாள் ஒரு கற்புக்கரசி. பதிவிர தைகளும், தாசிகளும் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூகம் இது. தன்னை ஒருவன் முறைத்துப் பார்த்தாலே காறித் துப்பும் பெண்ணையும், பணம் கொடுத்தால் எவன் படுக்கைக்கும் போகக் கூடிய பெண்ணையும் ஒரே ஊரில் காண முடியும்.
ஒழுக்கம் என்பதும் பாலியல் ஒழுங்கு என்பதும் பெண்ணுக்கான நுகத்தடி என்பதை பெண்ணே உணரத் தொடங்கியதன் அடையாளம்தான் அம்பையின் கதைகள்.

எத்தனை காலம்தான் "தூய்மை" வேடத்தை பெண்களால் சுமக்க இயலும்? ஓர் ஆணின் சுண்டுவிரல் கூட சீண்டாத ஒரு பெண் இவ்வுலகில் இருக்கிறாளா? தந்தை மகளுக்குத் தரும் முத்தத்தில் பாலுணர்வு இல்லையா?
ஆண்களும் பெண்களும் நெருக்கமாக வாழ விதிக்கப்பட்ட உலகில் ஒழுக்கம் என்பது மனம் சம்பந்தப்பட்ட விஷயமாகிவிட்டது. "தவறு செய்யாதவன் வாய்ப்புக் கிடைக்காதவன்' என்றும் ஒரு கூற்று உள்ளது. பேருந்தில் உரசுபவன், வளையல் போட கையைப் பிடிப்பவன், உடை தைக்க அளவுகள் எடுப்பவன், நோய் பிரசவம் முதலிய காலங்களில் பெண்ணின் உடலைக் கையாளுகிற ஆண் மருத்துவர்கள், அவரது உதவியாளர்கள், தொட்டுப் பேசும் உறவினர், கைகுலுக்கும் ஆண் நண்பர்கள் என எத்தனையோ வகைகளில் எத்தனையோ ஆண்கள் பெண்களின் உடல்களுடன் உறவு கொண்டிருக்கும் காலம் இது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் ரீதியான நெருக்கத்தை உருவாக்கி அதேசமயம் மனத்தால் விலகலை விதிக்கின்றது நமது கலாசாரம்.
ஈவ் டீசிங் கடுமையான சட்டத்தின் வசப்பட்டுவிட்டது. தற்செயலாகக் கூட ஒரு பெண் மீது கைபட்டுவிட்டால் அந்தப் பெண் அவனை இழிவுபடுத்தி விடுவாள். ஒரு பெண்ணை நட்புடன் தொட முடியாது. அன்புப் பெருக்குடன் அவளை அணைக்க முடியாது. நிறைய வீடுகளில் பெண்களுடன் பேசவே முடியாது.

'ஒரு கட்டுக்கதை'- ஒரு பன்றியின் கதை! சம்பாஷிக்கும் பன்றி அது. மௌனமாகவும் பேசத் தெரியும் அதற்கு. "சாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்" என்று கேட்டால் "அது ஒரு பெரிய கழி" என்கிறது அது. ஆம்! பன்றிகளுக்கு சாவு ஒரு கழி தான்! கழியால் அடித்துதானே பன்றியைக் கொல்லுகிறார்கள் இந்த மனிதர்கள். மரணம் வலுக் கட்டாயம்தான். சாவைப் பற்றி ஒரு விசாரிப்பும், தத்துவார்த்தத் தேடலும் இக்கதையினூடே தொக்கித் தெரிகிறது...

**'சமையலறைகளும் படுக்கையறைகளும்' என்ற தலைப்பில் செந்தூரம் ஜெகதீஷ் அம்பையின் கதைகள் குறித்து எழுதிய மதிப்பீட்டிலிருந்து ஒரு பகுதி....**

அருகே தொடர்வது அம்பையின் சிறுகதை 'ஒரு கட்டுக்கதை'.




**கதை சொல்லும் சிலைகள்....**

ரோமாபுரியில் பத்து லட்சம் மக்கள் போப் தலைமையில் மில்லேனிய வழிபாடு செய்த இடத்தில் இருந்த தேவதை சிலை.

# ஒரு

பன்றி என்னுடன் சம்பாஷிக்க வந்தபோது மாலை ஆறரை மணி இருக்கும். ஒரு பதினைந்து இருபது குட்டிகளாவது இருக்கும் தொளதொளத்துத் தொங்கிய வயிற்றில். சாக்கடையில் புரண்டுவிட்டு வந்திருந்தது. மேல் உடம்பு கன்னங்கரேல் என்று சாக்கடைத் தண்ணீரில் பளபளத்தது. கீழே வயிறு சதையின் நிறத்தில் கட்டி கட்டியாய்த் தொங்கியது.

"இதோ பார், எனக்குப் பேச வேண்டும்" என்றது.

"என்னை எப்படித் தேர்ந்தெடுத்தாய்?" என்றேன்.

"உன் புத்திசாலித்தனமான, தீட்சண்யமான கண்களைக் கண்டு உன்னைத் தேர்ந்தெடுத்தேன் என்றெல்லாம் சொல்வேன் என்று எதிர்பார்க்காதே. பார்க்கப் போனால் அப்படி ஒரு ஒளியும் எனக்கும் தெரியவில்லை. பார், நான் ஒரு பன்றி. எனக்குப் பேச வாய்ப்புக் கொடு. பொழுது போகாமல் திண்டாடும் பன்றி நான்'' என்றது.

அப்படிப் புகழ்ச்சியில் மயங்கும் நபர் இல்லை நான். இருந்தாலும் இது கொஞ்சம் அத்து மீறிய ஆணவமாய்ப் பட்டது.

"இதோ பார், எனக்கு நேரம் இல்லை" என்று சூடாகச் சொல்வதற்குள் குட்டிகள் தொங்கும் பகுதியைப் பக்கவாட்டில் தழையவிட்டு அமர்ந்துவிட்டது பன்றி.

"சரி பேசு" என்றேன்.

"பேசிக்கொண்டுதான் இருக்கிறேன்" என்றது, பெருத்த தலையைக் கீழே சாய்த்தபடி.

"என் காதில் விழவில்லை"
"மௌனமாய்ப் பேசுகிறேன்" என்றது.

ஆணவப் பன்றிகளுக்கு அடுத்தபடி என்னால் பொறுக்க முடியாதது வேதாந்தப் பன்றிகள். அசுவாரஸ்யமாய்த் தலையைத் திருப்பிக் கொண்டேன் எதிர்ப்பக்கம்.

"சும்மா தமாஷ். ஜனங்கள் மிருகங்களின் வாயிலிருந்து ஞானம் சொட்டும் சொற்கள் வரும் என்று நினைக்கிறார்கள். நீதிக் கதைகளில் ஓட விடுகிறார்கள். 'சீ, சீ இந்தப் பழம் புளிக்கும்' போன்ற நீதியை உதிர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். குப்பையில் அளைந்து, சோர்ந்து, சலித்துப்போன பன்றி நான். ஞான சம்பந்தமான விஷயங்களில் எனக்கு ஈடுபாடில்லை'' என்றது.

"எதைப் பற்றித்தான் பேச விரும்புகிறாய்?"
"உங்கள் கட்டடத்தின் வாயிற்கதவு பற்றி"

மாடியும் கீழுமாய் ஆறு கட்டடம் கொண்ட பகுதி அது. அடுத்தாற்போல், முள் வேலியால் இரு பக்கமும் அடைக்கப்பட்ட வெற்று மனை. வெற்று மனை என்று சொன்னது பேச்சுக்காகத்தான். குடிசை ஜனங்களின் கட்டணம் இல்லாத கழிப்பிடம் அது. பன்றிகளின் வாசஸ்தலம். மத்தியான வேளைகளில் ஜன்னல் அருகே ட்ரியோ என்ற கூச்சல் கேட்கும். பன்றிகள் ஓடும். சில சமயம் தெரு ஆரம்பத்திலுள்ள சந்தில் நுழையும்போது க்ஹே க்ஹே என்று மூச்சு சீறும் கதறல் கேட்கும். நின்றால், "போயிட்டேயிருங்க. பன்னி அடிக்கிறாங்க" என்று தள்ளி விடுவார்கள்.

"எதுக்கு, எதுக்குப்பா அடிக்கிறாங்க?"
"எதுக்கு அடிப்பாங்க? சாப்பிடத் தான். நவந்துகிட்டே இருங்க"

கட்டடத்தின் வாயிற்கதவில் ஒரு நாய் நுழையும் சதுர அளவு இடம் இருந்தது. பலமுறை, துரத்தப்பட்ட பன்றிகள் அதில் நுழைந்து ஓடும், அதை மூடிவிடும் யோசனை இருந்தது.
"அந்த நுழைவாயில் எனக்குப் பிடிக்கிறது. அதில் நான் ஆனந்தமாய் நுழைய முடிகிறது. நாலு பக்கமும் முள் வேலி இருக்க, நுழைவதற்கான வாகான இடம். பரபரவென்று நான் ஓடும்போது சுவர்க்கக் கதவு மாதிரி எனக்குத் திறந்து வழி விடுகிறது. அதைப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுக் கதை

- அம்பை -

பற்றி பேச எனக்குப் பிடிக்கிறது. ஒரு பன்றிக்குத் தேவை, நுழையக்கூடிய கதவுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.''

வோட் ஹவுஸ் புத்தகங்களின் செல்லப் பன்றி நினைவுக்கு வந்தது. பிரபுவின் கொழுத்த ரோஜா வண்ணப் பன்றி. போட்டிகளில் பரிசு பெறும் பன்றி.

அதைப் பற்றிச் சொன்னேன்.

அமெரிக்கப் பன்றிப் பண்ணைகளில் கொழுக்க வைக்கப்பட்டு, வலியில்லாமல் இறக்கும் பன்றிகள் பற்றிச் சொன்னேன். வலியில்லாமல் இறப்பது ஒரு பெரிய சலுகைதான் என்றது. நிறம்பற்றி அவ்வளவு சுவாரஸ்யம் காட்டவில்லை. சாகப்போகிற பன்றி கறுப்பானால் என்ன, ரோஜா வண்ணமானால் என்ன என்றது. மற்றவர்கள் சாப்பிடுவதற்காக இறப்பது பற்றி ஒரு ஆட்சேபணையும் காட்டவில்லை. அது பற்றிக் கேட்டபோது ஆட்சேபணை காட்டக்கூடிய அதிகாரம் உள்ள நிலையில் தான் இல்லை என்று பேச மறுத்துவிட்டது. சிறிது நேரம் மௌனத்தில் கழிந்தது.

''சாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்றேன்.

''அது ஒரு பெரிய கழி'' என்றது. ''நீளமாய், உருண்டையாய் இருப்பது. இரும்பாலோ, மரத்தாலோ ஆனது. இரும்பானால் ஆசனத்திலிருந்து வாய் வரை செருகப்படும் சாவு. மரமானால் அடிச்சாவு.''

''எப்படி அலட்டிக் கொள்ளாமல் சொல்கிறாய்?''

''அலட்டிக்கொண்டு ஒன்றும் ஆகப் போவதில்லை. செருகுச் சாவு, அடிச்சாடி, இயந்திரச் சாவு என்று பிரித்துத் தேர்ந்தெடுக்கும் சலுகை வேண்டும் என்று போராடலாம். பன்றிகளிடம் ஒற்றுமை இல்லை.

''இயற்கையான சாவு பற்றிச் சொல்ல மாட்டேன் என்கிறாயே?''

''சாவில் என்ன இயற்கை இருக்கிறது? வலுக்கட்டாயம்தான்''

''இல்லையில்லை. மரத்திலிருந்து இலை உதிர்வது மாதிரி மெல்ல இயற்கையோடு கலப்பது...''

''எனக்கு ஒரு உபகாரம் செய்...''

''என்ன?''

''தயவு செய்து இதில் கவிதையைக் கொண்டு வராதே. என் வாழ்க்கை ஏற்கனவே கெட்டுக் கிடக்கிறது. கவிதையை வேறு என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.''

''நான் சொன்னதில் என்ன கவிதைத்தனம் இருக்கிறது?''

''நீ சாவிலிருந்து ரத்தத்தைப் பிரிக்கிறாய். ரத்தம் சிந்தாத அழகான இலையுதிர்ச் சாவு பற்றிச் சொல்கிறாய். ஆனால் ரத்தம் சேர்ந்தது சாவு. வெளியில் கொட்டினாலும் உள்ளே உறைந்து போனாலும் ரத்தமில்லாமல் சாவு இல்லை. நீ சாவை அழகாக்கப் பார்க்கிறாய்''

குற்றச்சாட்டு.

சாவைப் பற்றி முதலில் எண்ணியது பன்னிரண்டு வயதில். கால்கள் அந்தரத்தில் மிதக்க, ஒரு பந்தை எம்பிப் பிடித்துக் கொண்டிருந்தபோது, தலையை மேலே வீசிப் பந்தைப் பார்த்த கணத்தில், வலியுடன் கூடிய மின்னலாய் அந்த எண்ணம் தாக்கியது. நாம் சாகிறோம். உள்ளே ஓடி வந்து முட்டியில் முகம் கவித்துப் பயந்தேன். கை, கால், முகம், உடம்பு எல்லாம் அந்நியமாகப் பட்டது. மாட்டிவிட்ட ஒன்றாய்த் தோன்றியது. இதனுள்ளே நான், நான், நான் என்று புகுந்து பார்த்தேன். பீதி கவ்வியது. செவிக் குழியிலா, கண்ணினுள்ளா, பல்லிடுக்கிலா, அக்குள் பள்ளத்திலா எதில் நான் இருக்கிறேன் என்று தேடினேன். பயத்தில் வியர்த்துப் போனேன்.

அதன்பின் சில சலுகைகளை நானே எனக்குத் தந்து கொண்டேன். சில வகைகளில் நான் சாக விரும்பவில்லை. விபத்தில் சாக விரும்பவில்லை. உடல் சிதைய, திடீர்த் தாக்குதலில் சாவு, விபத்துச் சாவு- எனக்கு வேண்டாம். வலியுடன் துடித்துச் சாவு - அதுவும் வேண்டாம். உலகப் போர் பற்றிப் படித்த பின் யூதர்களைப் போல் விஷப் புகைக் கூண்டுகளில் சாக நான் விரும்பவில்லை அணு ஆயுதத்தால் ஆன ஹிரோஷிமாச் சாவும் வேண்டாம். வியட்நாமிற்குப் பின் நேபாம் போன்ற ரசாயனக் குண்டுகளால் ஆன சாவையும் ஒதுக்கினேன். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களைக் கண்டு கொண்ட பின், பஞ்சச் சாவு, வெள்ளச் சாவு, பூகம்பச் சாவு, சிறையில் சாவு, தூக்குக் கயிற்றுச் சாவு, துப்பாக்கிச் சாவு என்று ஒவ்வொன்றாய் விலக்கிக்கொண்டே வந்தேன். எஞ்சியது அழகுச் சாவு. வெளியுடன் கலக்கும் கவிதைச் சாவு. வலியில்லை. ரணமில்லை. குருதியில்லை.



பன்றியின் கோபம் எனக்குப் புரிந்தது.

பன்றி எழுந்தது. குட்டியுடன் தொங்கிய உடம்மை அசைத்துக் கொண்டு போய்விட்டது.

சில நாட்களுக்குப் பின் ஒரு விடியற்காலைப் பொழுது, க்ஹரே... என்று அலறல் கேட்டது. நாலு பேர் கழியுடன் பன்றியைத் துரத்தினார்கள். அது விரைந்து வாயிற் கதவு நோக்கி ஓடியது. அதன் உடம்பு இன்னமும் பெருத்துவிட்டதை அது மறந்துவிட்டது. அந்தச் சதுர இடைவெளியில் சிக்கிக் கொண்டது. நான் ஓடி வருமுன் ரத்தம் பீறிட்டு, பொம்மைகள் மாதிரிப் பன்றிக் குட்டிகள் வெளியில் விழுந்தன. அருகில் போனதும் பன்றி என்னை அடையாளம் கண்டுகொண்டது. சிவப்பேறிய கண்களைத் திறந்து சொல்லியது:

''தயவு செய்து சாவைப் பற்றி ஏதாவது அரிய உண்மையைச் சொல்லிவிட்டுப் போவேன் என்று எதிர்பார்க்காதே. ஒன்றுதான் என்னால் சொல்ல முடியும். நாம் சாகிறோம்.

நீண்ட கழிகள் நெருங்கி வந்தன. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை எமக்குப் பகை...




Photo: Ravindra Senevirathne

பலரும் தெரிந்து செய்யும் ஒரு கெட்ட பழக்கம்... நாளுக்கு நாள் அதன் விபரீதம் பற்றி அறிவுறுத்தப்பட்டும் விடுபட முடியாத பழக்கம்... பாவிக்கும் பெட்டியில் 'இது உடலுக்கு உகந்ததல்ல' என்று எழுதப்பட்டிருந்தும் கூட அதைப் பார்த்துவிட்டு திரும்பத் திரும்ப தொடரும் பழக்கம்...

இப்பழக்கம் இன்று நேற்று வந்ததொன்றல்ல... பன்னெடுங்காலமாக மனிதர்கள் பாவித்து, இன்று உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் புகுந்துவிட்ட நாகரிகம் என்று கூட சொல்லலாம்.

ஏன்? எதற்காக? எந்த நேரத்தில் என்ற வரையறையின்றி சங்கிலித் தொடர் போல முழு நாளுமே எங்கோ மூலையில் ஒரு முனையில் வாயும் மறுமுனையில் நெருப்பையும் வைத்துக் கொண்டு தமது வாழ்வையே கொஞ்சம் கொஞ்சமாய் இந்த பயங்கர நஞ்சுக்கு அர்ப்பணிக்கின்றனர் பலர்.




சிறியோர் முதல் பெரியோர் வரை வயது வித்தியாசமின்றிப் புகை பிடிப்பதற்கு, தானாக பழகுவது குறைவு. புறச்சூழல்தான் அவர்களைப் புகையின் பால் இழுக்கிறது.

"சிறு வயதில் எனது மாமனார் சிகரெட் குடிப்பதைப் பார்த்த எனக்கும் குடிக்க வேண்டும் போல் இருந்தது. திருட்டுத்தனமாக தாள் சுருட்டிக் குடித்தேன். பின் கட்டிலிலுள்ள தும்பை வைத்துத் தாளில் சுருட்டிக் குடித்தேன். பிறகு வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து முழுமையாக ஒன்றை வாங்கிக் குடித்தேன்....

இது படிப்படியாக வளர்ந்து சுருட்டு, பீடி, சிகரட் போன்றவற்றை அடித்துப் பார்த்து இறுதியில் *Benson & Hedges* பாவிப்பதில் வந்து நின்று... சங்கிலித் தொடர் புகைப்பாளனாக மாறிவிட்டேன்..."

இப்படிக் கூறியவர் எமது நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு வடிவமைப்பாளர்.

இதனைப் பாவிப்பதால் என்ன சுகம் கிடைக்கிறது என்று நான் கேட்டேன். அவர் சொன்னார்:

"உண்மையில் இதில் ஒன்றுமில்லை. முதலாவது முறை பாவிக்கும் போது ஒரு 'கிக்' இருந்தது. ஆனால் இப்பொழுதெல்லாம் எந்த ருசியோ, ரசனையோ இல்லை"

அப்படியானால் இந்தப் பழக்கத்தை விட்டுவிடலாமே? இதனால் எவ்வளவோ பணம் மீதமாகுமே என்றேன்.

"என்ன செய்ய, நான் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31ம் திகதி விட்டுவிடுவது என்று நினைத்து, விடுவேன்... ஆனால் திரும்பவும் அதைத் தொடர்வேன், அடுத்த டிசம்பருக்கு விடுவதற்காக" என்றார் அவர்.

பொழுது போக்கில், விருந்துபசாரத்தில், நண்பர்கள் ஒன்று கூடுவதில், சினிமா தியேட்டருக்குச் சென்று படம் பார்ப்பதில் முகமனாகவும் முடிவுரையாகவும் அமைவது இந்த சிகரெட் தான்.

புகையிலையில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மையின் விபரீதங்களை அறியாமல் இன்று எத்தனையோ பேர் புகை பிடிக்கின்றனர். உலகளாவிய மட்டத்தில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 110 கோடியாகும். இதில் 90 கோடி ஆண்களும் 20 கோடி பெண்களும் அடங்குவர்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 70 வீதத்தினர் புகை பிடிப்பதில் ஈடுபட, முன்னேற்றமடைந்த நாடுகள் இவற்றிலிருந்து மெல்ல மெல்ல விடைபெற்று வருகின்றன.



**பலரும் தெரிந்து தெரிந்து செய்யும் ஒரு கெட்ட பழக்கம்... நாளுக்கு நாள் அதன் விபரீதம் பற்றி அறிவுறுத்தப்பட்டும் விடுபட முடியாத பழக்கம்... பெட்டியில் இது உடலுக்கு உகந்ததல்ல என்று எழுதப்பட்டிருந்தும் கூட அதைப் பார்த்துவிட்டு திரும்பத் திரும்ப தொடரும் பழக்கம்...**

புகை பிடிப்பதில் இள வயதினரே அதிகமாக ஆர்வம் காட்டுகின்றனர். வளர்ந்தவர்கள் புதிதாக ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

புகையிலையில் காணப்படும் நிக்கோட்டின் அதிக நச்சுத்தன்மை வாய்ந்தது. ஒரு சில நிமிடங்களில் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி நிக்கோட்டினுக்கு உண்டு. ஆனால் நாம் பிடிக்கும் புகையிலையில் இது சிறிதளவே இருப்பதால் ஒரேயடியாக மரணப் பாதைக்கு இட்டுச் செல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக அழைத்துச் செல்கிறது.

நிகோட்டினைத் தவிர, காபன் மொனொக்ஸைட், தார், நைட்ரஜன் ஒக்ஸைட், ஹைட்ரஜன் சயனைட், சல்பர் போன்ற நச்சுப் பொருட்களும் சிகரெட் புகையிலையில் காணப்படுகின்றன. இவற்றில் காபன் மொனொக்சைட், தார், நிகோடின் போன்றவை புற்றுநோயை உண்டு பண்ணக்கூடிய காரணிகளாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி புகை பிடிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் ஏற்படும் நோயினால் உலகில் நாளொன்றுக்கு சுமார் 8,000 பேர் இறக்கின்றனர். ஒரு வருடத்தில் 10 லட்சம் பேர் மடிகின்றனர். இதில் 85 வீதமானவர்கள் ஆண்கள்.

இந்நிலை நீடித்துச் சென்றால் 2020 இல் புகை பிடிப்பதால் ஏற்படும் மரணமே அதிக எண்ணிக்கையிலாகும் என அஞ்சப்படுகிறது.

இரண்டு வகையான புகைபிடிப்பவர்கள் உள்ளனர். ஒரு வகையினர் புகையை வாய்க்குள் மாத்திரம் இழுத்து விட்டுவிடுவார்கள். மற்ற வகையினர் அப்புகையை சுவாசப்பைக்குள் செலுத்தி மூக்கு வழியாக புகையை விடுவார்கள். இரண்டாவது வகையே உடலுக்கு விரைவாக பாதிப்பை ஏற்பத்தும்.

புகை சுவாசப்பைக்குள் சென்று 7 நிமிடங்களில் நிக்கொட்டின் நச்சுப் பதார்த்தத்தம் மூளையை சென்றடைகிறது. இதனால் சிறிது காலத்தில் உடல் சமநிலை குழம்பி, உடலுக்குள் நிக்கொடின் சென்றால்தான் செயற்பட முடியுமென்றளவுக்கு மாற்றி விடுகிறது.

புகை பிடிப்பவரை விட அருகிலிருப்பவருக்குத் தாக்கம் அதிகம். ஏனென்றால் அவர் வெளியிடும் புகையில் 2/3 பங்கை அருகிலிருப்பவர் நிர்ப்பந்தமாக உள்ளிழுக்க வேண்டும். இந்நிலையில் புகை பிடிப்பவர் தன்னை மட்டுமல்ல தன் அருகிலுள்ள பெற்றோர், மனைவி, பிள்ளைகளையும் கூட பலியாக்குகின்றார்.

**உலகளாவிய மட்டத்தில் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 110 கோடியாகும். இதில் 90 கோடி ஆண்களும் 20 கோடி பெண்களும் அடங்குவர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 70 வீதத்தினர் புகை பிடிக்கின்றனர்.**

தான் மட்டுமல்லாது தன்னைச் சார்ந்தோரையும் மரணத்தின் விளிம்புக்கு இட்டுச் செல்லும் இச்செயல் கொடுமையானது என்ற போதிலும் எந்த நாட்டிலும் இது சட்ட விரோதமாக்கப்படவில்லை.

தலைவலி, கண் சிவத்தல், மூக்கு அல்லது தொண்டை சொறிதல், மூச்செடுக்கக் கஷ்டமாதல், தலைச் சுற்று போன்ற நோய்களையும் ஏற்படுத்துகிறது புகையிலை.

எமது நாட்டில் புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களில் 94%மானோர் புகைத்தலால் நோய் ஏற்பட்டோர் என்று மஹரகம தேசிய வைத்தியசாலை கூறுகிறது. ஒரு நோயாளிக்கு ஒரு கிழமைக்கான சிகிச்சைக்காக 50,000 ரூபா செலவழிக்கப்படுகிறது. இது புகை பிடிப்பதனாலேயே ஏற்பட்டது.

இந்நிலைக்கு புகையிலை நிறுவனங்களும் பொறுப்புச் சொல்ல வேண்டியிருந்தாலும், அவர்கள் சொல்வது, "நாம் அரசுக்கு வரியாக அதிக தொகையை வழங்குகிறோம். சுமார் 3 இலட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பை வழங்கியுள்ளோம்" என்பதுதான்.

இக்கட்டுரையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போதே 8 நிமிடத்துக்கு ஒரு முறை ஒருவர் மரணமாகிக் கொண்டிருக்கின்றார்.

இலங்கை டுபாக்கோ நிறுவனத்துக்கு வருட வருமானமாக 736 மில்லியன் ரூபா கிடைக்கிறது. இது நம் நாட்டு மக்களின் பணம். இதில் சிறிதளவை அரசுக்கு வரியாகச் செலுத்திவிட்டு மீதியை சிகரெட் கம்பனியின் உரிமையாளர்கள் இலாபமாக உழைத்துக் கொள்கிறார்கள். John plyer, Metahon, Bristol, Capston, Benson & Hedges போன்ற பல பெயர்களில் சிகரட்டுக்கள் எமது நாட்டில் இருந்தாலும் அவற்றின் ஏகபோக உரிமையாளர்கள் அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும்தான் இருக்கிறார்கள். BAT என்ற நிறுவனமே இவை எல்லாவற்றையும் உற்பத்தி செய்யும் மூல நிறுவனம். ஆகவே இந்தச் சிகரெட்டுக்களால் எமது நாட்டுப் பணம் முழுக்க முழுக்க பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவுக்குமே செல்கிறது.



இங்கே 60 சதவீதமானோர் ஒவ்வொரு சிகரெட்டாகவே வாங்குகின்றனர். இதிலிருந்து வாங்குபவர்கள் ஏழை மக்கள் என்பது புலப்படுகிறது. சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்காக அரசாங்கம் 800 கோடியைச் செலவழிக்கிறது. ஆனால் இந்த ஏழைமக்கள் புகைத்தலுக்காக 1825 கோடியைச் செலவழிக்கின்றனர்.

இத்தொகை மீதப்படுத்தப்பட்டால் எத்தனையோ அபிவிருத்தி வேலைகளைத் தொடர முடியும்.

நம் நாட்டில் ஒரு நாளைக்கு சுமார் 50 பேர் புகை பிடிப்பதனால் இறக்கின்றனர். இத்தொகை யுத்தத்தினால் ஏற்படும் மரணத்தை விட அதிகம்.






கலைஞர்கள், விளையாட்டு வீரர்களைப் பயன்படுத்தி பத்திரிகை விளம்பரங்களுக்கு சிகரட் நிறுவனங்கள் பணத்தைச் வாரி இறைத்து விளம்பரம் செய்வதால் புகை பிடிப்பவர்களின் வீதமும், நாட்டமும் அதிகரித்தே செல்கிறது.

சிகரட் நிறுவனங்கள் சில விளம்பர உத்திகளைக் கையாண்டு விற்பனையைப் பெருக்க முற்படுவதை பொதுமக்கள் அறியமாட்டார்கள். தொலைக்காட்சியில் சிகரெட் அதிகமாகப் பிடிக்கப்படும் படங்களை தெரிவு செய்து அதற்கு அனுசரணை வழங்குவது, பாடசாலைப் பிள்ளைகளிடம் அப்படத்தில் ஒரு கேள்வியைக் கேட்டு அதற்கு விடையளிப்பவர்களுக்குப் பரிசளிப்பது, புகை பிடிப்பவர்களுக்கு மாத்திரம் கலந்துகொள்ள முடியுமான போட்டிகளை நடத்தி மேலும் மேலும் ஊக்குவித்துக் கொண்டே இருப்பது....




வயது வந்தவர்கள் சிறுவர்களுக்கு முன்னே புகை பிடிப்பதால் பாடசாலைப் பிள்ளைகளும் இதைப் பழகிக் கொள்கின்றனர். இதனாலேயே புகைபிடிப்போர் தொகை இன்னும் இன்னும் அதிகரித்துச் செல்கிறது என்பதாக புகை பிடிப்பதைத் தடுப்பதற்காக பிரசாரம் செய்யும் இயக்கங்கள் கூறுகின்றன.

எமது நாட்டிலும் புகை பிடிப்பதற்கெதிரான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அரசு சாராத நிறுவனங்கான NDD, செப்தா, Life, மெல்மெதுர, ADIC போன்றவையும் புகைபிடித்தலுக்கெதிரான பிரசாரங்களைச் செய்து வருகின்றன.

புதிதாக ஒருவர் புகை பிடிக்கப் பழகிவிடாமல் இருக்கச் செய்வதே இவற்றின் பிரதான நோக்கமாம். அத்தோடு பாடசாலைப் பிள்ளைகள் இவற்றின் பக்கம் நாடாதிருக்க பாடசாலை மட்டத்தில் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

எமது நாட்டில் அரச ஊடகங்களில் சிகரட், மதுவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதை ஜனாதிபதி தடை செய்திருக்கின்றார். இது தனியார் துறையினருக்கும் சட்டமாக்கப்பட வேண்டும், அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

சிகரட் பாவிப்பவர்களும் இதன் விபரீதங்களை இன்றோடு இதை நிறுத்திவிட வேண்டுமென உறுதி பூண வேண்டும். இந்த உறுதி சிகரட் புகையைப் போல காற்றில் கரைந்துவிடக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாய் மரணப் பாதைக்கு இட்டுச் செல்லும் புகைப் பழக்கத்திலிருந்து எம்மையும், எமது சூழலையும் பாதுகாப்போம்.

**- எஸ். எப். ஷாமிலா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொல்லும் கரங்கள் பத்து

**சீ**னர்களின் றொபின் ஹூட் என்று வர்ணிக்கப்படுபவர் **வொங் ஃபீ ஹொங்**. சீனாவின் கன்டன் மாகாணத்தில் 1847ல் பிறந்த இவர் ஹூங் கா குங் ஃபூ பாணியின் மூலகுரு எனப் போற்றப்படுகிறார். (ஹூங் கா என்றால் புலியும் கொக்கும் என்று அர்த்தப்படும்).

மருத்துவராகவும் தற்காப்புக் கலை ஆசானாகவும் விளங்கிய இவர் நலிந்தோரின் பாதுகாவலராகக் கருதப்பட்டார். 1924ல் தனது 77வயதில் இவர் இறந்தார்.

வொங்கின் கதை சீனாவின் கன்டனீஸ்களது விழாக்களில் மகிழ்ச்சியூட்டும் வீரகாவியமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் அது பூஜிங் நாடகங்களாக, கூத்துக்களாக நிகழ்த்தப்பட்டு பிற்காலத்தில் சினிமாவாலும் கவரப்பட்டுவிட்டது.

எமது குங் ஃபூ பள்ளியில் நானும் இவரது பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளேன். ஹொங் கொங்கில் 99 அங்கங்களைக் கெண்ட வொங் ஃபீ ஹொங் பற்றிய கறுப்பு வெள்ளைத் திரைப் படத் தொடரொன்று 1949 முதல் 1970 வரை நீடித்தது.

அதன் பல குங் ஃபூ நடிகர்கள் அடுத்த தலைமுறை நடிகர்களுக்குப் பயிற்றுவித்தபடி இது தொடர்ந்தது. அந்தளவு பிரபல்யம் மிக்க வீரராக வொங் விளங்கினார்.

1990களில் சுயீ ஹார்க் என்னும் திரைப்படத் தயாரிப்பாளர் *once upon a time in China* என்ற பிரபல திரைப்படத் தொடரை ஜெட் லீயை வொங் பாத்திரமாக் கொண்டு தயாரித்தார். ஜக்கி சானும் வொங்கின் பாணியில் 1970ல் *Drunken Master*என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார்.

வொங் ஃபீ ஹொங் தனது 5 வயதிலேயே தற்காப்புக் கலையில் பயிற்சிபெற ஆரம்பித்துவிட்டார். இவரது தந்தை வொங் காய் யிங்கே இவரின் ஆரம்ப குருவாக விளங்கினார்.

ஆனால் வொங் புகழ்பெற்ற குருவான ட்டிட் கியூ சம் என்பவரைச் சந்தித்த பின்னர்தான் இன்று *Hung Kurn* (ஹூங் கூண்) என்று அறியப்படும் குங் ஃபூ முறையை செப்பஞ்செய்து மறுவடிவாக்கம் செய்தார். இரு பெரும் ஆசான்களும் தமது நுட்பங்களையும் அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக் கொண்டார்கள்.

பின்னர் அவர்கள் நன் சுயு லெம் (*Nan Siu Lam*) என்னும் மேற்கு சோலின் டெம்பிள் குங் ஃபூ கலையின் குருவாக விளங்கிய கோக் யுவென் (*Gok yuen* ) என்ற குருவை அணுகி அக் கலையின் நுட்பங்களை அராய்ந்தனர்.

இந்த ஆராய்ச்சிகளாலும் பரிமாற்றங்களாலும் திரட்டிக்கொண்ட அறிவின் அடிப்படையில் வொங் வடிவமைத்த பிரபலமான குங் ஃபூ வடிவம்தான் ஃபூ ஹொக் கேண் யிங் கூண் (*Fu Hok Cern Ying Kuen*) என்னும் புலியும் கொக்கும் கலந்த இரட்டை வடிவ முஷ்டிப் பிரயோகப் பாணி. இப் பாணி ஹூங் கா குங் ஃபூ முறையின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது.

இந்தப் பாணிதான் வொங் ஃபீ ஹொங்கை சீனாவின் மிகப் பிரபலமான தென் சோலின் குங் ஃபூ ஆசானாக ஆக்கியது.

ஃபூ ஹொக் கேண் யிங் கூண் பாணியிலிருந்துதான் சப் ஜீட் சாவோ *Sub Juet Sao* (அதாவது *Ten Killing Hands*) என்னும் பத்து வகை கொலைக் கர நுட்பங்களை அவர் வகுத்தார். இவை பத்து வகை அடிப்படைக் கொள்கைகளைக்கொண்டவை.

இவற்றையே ஹூங் கேண் குங் ஃபூ வகையிலுள்ள மிக வினைத்திறன் மிக்க கொல்லும் முறைகளாக வொங் கருதினார்.

இந்த நுட்பத்தின் அதிதிறமையின் காராணமாகவே வொங் ஃபீ ஹொங் சீனாவின் மகாவீரராகப் புகழ் பெற்றார். அவர் எந்த ஒரு சண்டையிலும் தோற்கடிக்கப் படவேயில்லை.

இந்தக் கொல்லும் கர நுட்பத்திலுள்ள பிரதானமான அடிப்படைக் கொள்கைகள் இவை:-

1) கண்களைத் தாக்குதல்
2) மூச்சை நிறுத்துதல்
3) முகத்தை உடைத்தல்
4) செவிப்பறையை வெடிக்கவைத்தல்
5) விதையை நெரித்தல்
6) தசைநார்களை முறுக்குதல்
7) விரல்களை முறித்தல்
8) மூட்டுக்களை கழற்றுதல்
9) முழங்காலை முறித்தல்
10) நரம்பு மையங்களைத் தாக்குதல் (*Dim mak* - டிம் மக்)

இந்த அடிப்படைகளை மையமாக வைத்து வடிவமைக்கப்பட்ட பத்து வித தாக்குதல் முறைகளில் பல்வேறு விலங்குகளின் தாக்கும் நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. பிரதானமாக புலி, சிறுத்தை, கொக்கு, குரங்கு போன்ற விலங்குகளின் உத்திகளை இங்கே இவர் புகுத்தியுள்ளார்.

இவை மேலுடம்பு தாக்குதல் முறைகளாகும்.

இப் பத்து கொலைக் கரப் பிரயோகங்களையும் அவற்றுக்கான ஒவ்வொரு உதாரணங்களையும் இங்கே தருகிறேன்.



Tiger Leopard Fist



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**போ பாய் சாவ் Po Pai Sao (Side Tiger Claw)**
**பக்கவாட்டான புலி நகம்.**
புலி நக முறையில் தொண்டையை மடக்கி, நெரித்தல். இது எதிரியின் சுவாசத்தைத் நிறுத்தும். கண்ணுட் குத்துதல் - இது குருடாக்கும்

**கேர்ண் குவா சோய் ஃபா Cern Gwa Choy Fat**
**(Double Back Fist) இரட்டைப் பின் முஷ்டி**
பின்புறமாக முஷ்டியால் முகத்தில் தாக்குதல். இது கன்ன என்பு, மூக்குத் தொடுப்பு, கட் குழி ஆகியவற்றில் பலவகை உடைவுகளை விளைவிக்கும்.





**ட்டொங் ட்டின் கூண் ஃபா Tong Tin Kurn Faht**
**(Heaven Piercing Fist) துளைக்கும் முஷ்டி**
மார்புக் காம்பிற்கு இரண்டு அங்குலம் கீழ், மிதக்கும் விலா என்பில் முழுச் சக்தியுடன் தாக்குதல். இது மூச்சை நிறுத்தும்.

**ங்வெள ஃபூ கம் யங் Ngaw Fu Cum Yang**
**(Hungry Tiger Catch the Lamb)**
**ஆட்டுக்குட்டி மீதான பசித்த புலியின் பிடி**
இத் தாக்குதலில், புலி நக வடிவான விரல் நுனி முகத்தின் குறித்த சில அக்கூபஞ்சர் புள்ளிகளில் தாக்கும்போது, மூளைக்கான, இரத்தச் சுற்றோட்டமும் உடலின் உட்சக்தியான 'சீ'யும் தடுக்கப்பட்டு சிதைவுறுவதுடன் கண்ணும் பாரதூரமாகச் சிதைவுறும்.





**சன் பன் டன் குவாட் San Ban Dan Gwai**
**(Take the Horse Back to the Stable)**
**குதிரையைப் பின்புறமாக வளைத்துப் பிடித்தல்**
இந் நுட்பத்தில் கழுத்தை நெரிப்பதன் மூலம் மூளைக்கான இரத்த ஓட்டம் நிறுத்தப்படும்.

**குவா செங்**
**(Reincarnation of the Fulfilled Crane)**
**முழு நிறைவுற்ற கொக்கின் மறுபிறப்பு**
இந் நுட்பத்தில் கொக்குச் சொண்டால் கண்ணுக்குக் குறிவைத்து தாக்கப்படும். கொத்தும் அதிவேக அசைவால் தாக்கும் சொண்டுமுனைக் குவி கரம் கட்குழியைத் துளைத்து கண்ணை நிர்மூலமாக்கும்.





**ஹாவ் கீ ட்டா ட்டோயே Hau Gi Tao Toe**
**(Monkey Steals the Peach) கனியைத் திருடும் குரங்கு**
இந் நுட்பத்தில் தசை நார்கள் முறுக்கப்பட்டு, என்புகளை உடைக்கப்படும். (வழமையாக விரல் என்புகளும் கழுத்தென்புகளுமே முறிக்கப்படும்)

**கேர்ண் ஃபீ வூ டிப் Cern Fei Wu Dip**
**(Double Fling butterfly)**
இந் நுட்பத்தால் வாலென்பு சிதைவுற்று இடம்பெயரச் செய்யப்படுகிறது. தாக்குதலின்போது கைகளும் கால்களும் திறந்த நிலையில் இருக்கும் வடிவம் இரட்டை வண்ணத்துப் பூச்சிகள் பறப்பதைப்போல் இருக்கும்.



Photos by Saman Sri Wedage



**ஃபூ பாஓ கேர்ண் கூண் Fu Pao Cern Kuen**
**(Tiger Lepard Fist) புலி, சிறுத்தை முஷ்டி**
ஒரு கை புலிக் கையாகவும் மறுகை சிறுத்தைக் கையாகவும் அமைந்து இருபுறக் காதுகள்மீதும் பலமாகத் தாக்குதல். செவிப்பறைகளினுள் பலமாகக் காற்று உட்சென்று செவிப்பறை மென்சவ்வு வெடிக்கும். எதிரி சமநிலை இழந்து நிலைகுலைவான்.

**மாண் ஃபூ ஹா சன் Man Fu Ha San**
**(Angry Tiger Desends the Mountain)**
புரட்டி வீழ்த்தும் இந்நுட்பத்தில் புலி நக வடிவ விரலால் எதிரியின் முழங்கால் பிணைப்பில் அழுத்தத்துடன் அமுக்கிப் பூட்டுப்போட்டு எதிரி வீழ்த்தப்படுவார். இதன்போது முழங்கால் நிரந்தரமாகக் கழன்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபார்வை முதல் ஹே ராம் வரையாக....


ஷாருக்கான்

**கமல்ஹாசன்...**

தமிழ் சினிமாவை உலக சினிமாவின் உயரத்திற்கு எடுத்துச் செல்லப் போகிறவர்.

சினிமா என்பதை வெறும் தொழிலாக இல்லாமல் அறிவார்த்த வேட்கையாகக் கொண்டிருப்பவர்.

இன்றைய தமிழ் சினிமாப் பார்வையாளர் கலாசாரத்தில் ஓர் அவசியமான இடையூறை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்.

நடிப்பில் சிவாஜி கணேசன் அவர்களது தொடர்ச்சியாகவும், நவீன தொழில்நுட்பங்களை வரவேற்று உலகத் தரத்தோடு இணையும் முயற்சியிலுள்ள நம்பிக்கைப் புள்ளியாகவும்.... தொடர்பு சாதனங்களால் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் ஓர் ஆளுமையாக - அசாதாரணக் கலைஞராக இன்று அறிந்து கொள்ளப்படுபவர்.

# கமல்


சிவாஜி கணேசனுக்கு சினிமாத் துறையினர் எடுத்த பாராட்டு விழாவில், அவரது கலை வாரிசாக மாலையணிவிக்கும் தகுதி கமல்ஹாசனுக்கே இருப்பதாக, தமிழகத்தையே ஆளக் கூடிய செல்வாக்கு இருப்பதாகக் கருதப்படும் இவரது சக நடிகர் 'சூப்பர் ஸ்டார்' ரஜனிகாந்த் மேடையில் சொன்னதைப் புளகாங்கிதத்தோடு பத்தி பத்தியாக எழுதிப் பரப்புகின்றன பத்திரிகைகள்.

"கமலை நான் அறிமுகப்படுத்தினேன் என்பது ஒரு தற்செயல் தான். என்றோ ஒரு நாள் உலக அளவில் அவர் பேர் பெற்று விடுவார்..." என்று பாலச்சந்தர் சொன்னதாகவும் எழுதுகின்றன.

"கமல் ஒரு ஜீனியஸ், வரலாறு படைக்கப் போகும் புத்திசாலிக் கலைஞன்" என்று பாரதிராஜா பாராட்டியதைக் குறிப்பிடுகின்றன.

எம். ஜி. ஆரை, ரஜினியை மக்கள் மோகிக்கும் கவர்ச்சிகர ஆளுமைகளாக உருவாக்குவதில் பத்திரிகைகள் எப்படி பங்காற்றி வந்தனவோ, அதே போன்று, கமலை ஒரு தேடல் மிக்க அறிவு ஜீவிக் கலைஞனாகக் காட்டுவதில் பலப்பலரது கருத்துக்களையும், தகவல்களையும் தொடர்ச்சியாகத் தந்து வந்துள்ளன.

தனி மனித ஆளுமைகளை ஊதிப் பெரிதாக்குவதில், தொடர்பு சாதனங்களின் சாகசம் நாமறிந்ததே. மக்கள் ஒருவரிடம் ஈடுபாடு



## தரத்தையும் சனங்களையும் இணைக்கும் சினிமாவைக் கட்டியெழுப்ப...


வசுந்தரா

கொள்ள ஆரம்பிக்கின்றார்கள் என்றால், அவர் பாவிக்கும் பற்பொடியிலிருந்து அவர் படித்த பள்ளிக்கூடப் பெருமை வரை புகழ்பாடி முடித்துவிடுவார்கள்.

எம். ஜி. ஆரின் கால் பட்ட மண்ணை எடுத்து விவசாயிகள் தங்கள் வயல்களில் தூவுகிறார்கள் என்பதிலிருந்து ரஜனிகாந்த் சிமென்ட் தரையில் கைகளைத் தலைக்கு வைத்துக்கொண்டு தூங்குகிறார் என்பது வரை மக்களைக் கவர்ந்த நாயகர்களது செல்வாக்கும் குணாதிசயங்களும் மேலும் மேலும் எழுதி எழுதிப் பெருப்பிக்கப்படுகிறது.

அந்த வகையில் இன்று நடிகர் கமல்ஹாசனிடம் மக்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியிருக்கும் பாரிய எதிர்பார்ப்புக்களில் பத்திரிகைகளின் பங்கும் பெருமளவுக்கு உண்டு. அவர்தான் தமிழ் சினிமாவின் மீது உலகின் கவனத்தை ஈர்க்கும் சாதனையைப் புரியப் போகிறார் என்பதாக ஒரு எண்ணம் வளர்த்துவிடப்பட்டிருக்கிறது.

அரங்கேற்றத்தில் ஆரம்பித்து ஹேராம் வரை வந்திருக்கும் கமல்...

ராஜபார்வையிலிருந்து, நாளை தமிழ் சினிமாவின் மைல் கல்லாக அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பை ஊட்டியிருக்கும் மருதநாயகத்தைத் தரப்போகும் கமல்...

தன்னுடைய ஆளுமைகளாக இயல்புகளாக அவரே வெளியிட்டுக்கொள்ளும் கருத்துக்கள் அவரை ஏனைய தமிழ் நடிகர்களிடமிருந்து வேறுபடுத்திவிடுகிறது.

திரையுலகில் தனக்கு உண்டாகும் இமேஜை எல்லாம் திருப்பிப் போட்டு உடைக்க வேண்டும் என்பதில் தான் கவனமாயிருந்ததாகச் சொல்கிறார்.

சொல்லத்தான் நினைக்கிறேன், சட்டம் என் கையில், அந்தரங்கம் என்று தொடர்ச்சியாக ஆரம்பகாலப் படங்களில் காதல் இளவரசனாகக் காட்டப்பட்டு வந்ததை உடைக்க பதினாறு வயதினிலேயில் சப்பாணியாகிறார். குணாவில் முகத்தை அசிங்கப்படுத்திக் கொண்டு மனநோயாளராகத் தோன்றுகிறார்.

"ஒரு பிரபலமான குடும்பத்துப் பையன் உட்படுத்தப்படக் கூடிய எந்தச் சடங்கையும் நான் ஏற்கவில்லை" என்று கூறும் கமல், பழைமைவாத மரபு சார்ந்த சமூகப் பழக்கங்களில் நம்பிக்கையற்றவராகத் தன்னைச் சொல்லிக் கொள்கிறார்.

இவரைத் திராவிடக் கட்சிக்காரர் என்று அடையாளப்படுத்துகிறார் அசோகமித்திரன் தனது விமர்சனத்தில். மகாநதியிலே "நீ என்ன நாத்திகனா?" என்ற கேள்விக்கு "நான் என்னவாயிருந்தா சௌகரியமாயிருக்கும் என்று சொல்லுங்கோ இருந்திட்டுப் போறேன்" என்பார் கமல். அதையே தன்னுடைய உண்மையான இயல்பும் பழக்கமும் என்கிறார்.

"எனக்கு எந்த மூட நம்பிக்கையும் கிடையாது. கடவுளை நம்புவதில்லை. ஆனால் விதண்டாவாதமாக நடந்துகொள்வதிலும் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தேங்காய் உடைச்சால்தான் ஷூட்டிங் நல்லபடியா நடக்கும் என்பார்கள். அவர்கள் நம்பிக்கையைக் காயப்படுத்தாமல் உடைக்க விட்டுவிடலாம் என்றே நினைப்பேன்... என் சுய சந்தோஷத்துக்காகத்தான் நான் சினிமாவில் இருக்கிறேன். அதிலிருந்து லாபமடையப் பார்க்கிறேன்..." என்று வாக்குமூலம் தருகிறார்.

வறுமையின் நிறம் சிவப்பிலே ஒரு கட்டத்தில் "நீ யார்?" என்ற கேள்விக்குப் பதிலாக, "தமிழ் பேசும் இந்தியன்" என்று சொல்கிறார். அதையே தன் உண்மையான அடையாளமும் என்று காட்டிக் கொள்கிறார்.

கமலின் குடும்பமே கலை ஈடுபாடுள்ள குடும்பம்தான். அண்ணன்கள் சாருஹாசன், சந்திரஹாசன், மனைவி சரிகா, பெறாமகள்கள் சுஹாசினி, நந்தினி (இந்திரா)....

தந்தை சீனுவாசன்தான் தன்னைக் கலைத்துறையில் ஈடுபடுத்தியவர் என்கிறார். 4, 5 வயதிலேயே தந்தை இவரைப் பரதநாட்டியம் பயில அனுப்பி வைத்திருக்கிறார். பிறகு டி. கே. சண்முகம் நாடகக் கம்பனியில் குருகுலவாசம் இருந்திருக்கிறார். அப்போதுதான் ஏ. வி. எம். மின் களத்தூர் கண்ணம்மாவில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார்.

வளர்ந்த இளைஞனாக அரங்கேற்றத்தில் அறிமுகமாவதற்கு முன் டான்ஸ் மாஸ்டர் தங்கப்பனிடம் உதவியாளராக இருந்திருக்கிறார். டைரக்டராகவேண்டுமென்றே கனவு கண்டுகொண்டிருந்திருக்கிறார். அரங்கேற்றம் படத்தில் நடித்த பின், பாலச்சந்தர் இவரிடம் "என்னவாக வர விரும்புகிறாய்?" என்று கேட்டதற்கு, "உங்களைப் போல" என்று பதில் சொல்லியிருக்கிறார்.

"போடா பைத்தியக்காரா, நீ வில்லனாக நடிச்சாக்கூட டைரக்டரை விட அதிகம் சம்பாதிக்கலாம், மடத்தனம் பண்ணாதே" என்று சொன்னாராம் பாலச்சந்தர். சொல்லத்தான் நினைக்கிறேன், அவள் ஒரு தொடர்கதை என்று தொடர்ந்து நடிகனாகிவிட்டதாகச் சொல்கிறார்.




ஷியாம் பெனகலின் "அங்கூர்" படம் தந்த தாக்கத்தில், ஆர். சி. சக்தி போன்ற வேறும் சில நண்பர்களுடன் இணைந்து தயாரித்த "உணர்ச்சிகள்" என்ற படத்தில் உதவி டைரக்டராகவும் இருந்தார்.

1980ல் ராஜ்கமல் என்ற பெயரில் கம்பெனி ஒன்றை ஆரம்பித்துப் படங்கள் தயாரிக்கத் தொடங்கினார். முதல் படம் ராஜபார்வை. உயர்ந்த தரத்தையும் அடிமட்ட ஜனங்களின் ரசனையையும் இணைக்க முடியாமற் போன தோல்விகளில் அதுவும் ஒன்றாகிறது. முதல் படத் தயாரிப்பில் 15 லட்சம் நஷ்டப்பட்ட கமல், இப்போது 15 கோடி செலவில் ஹேராமைத் தயாரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்.

அவரது இலட்சியப் படமான மருதநாயகத்தைத் தொடர்ந்து எடுக்கப் பணம் திரட்டும் முயற்சியிலேயே அவரது புதிய படங்களை எடுத்து வருவதாகக் கூறுகிறார்.

தற்போது இவரைக் கதாநாயகனாக வைத்து ஒரு படம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சூப்பர் குட் ஃபிலிம்ஸாரிடம் ஊதியமாக 8 கோடி கேட்டிருக்கிறார். குறைக்க முடியாதா என்று கேட்டால், 'மருதநாயகத்திற்கு வேண்டும்' என்பதே அவர் பதிலாக இருக்கிறது.

பதினாறு வயதினிலே, மூன்றாம் பிறை என்று ஆரம்பித்த இவரது அகில இந்தியப் புகழ் ஹே ராமில் சாருக்கான், ராணி முகர்ஜி, ஹேமமாலினி, நஸ்ருதீன் ஷா என்று வட இந்தியக் கலைஞர்களின் சங்கமத்தோடு இந்தியா முழுவதுக்குமான பட உருவாக்குநராக இவரை ஆக்கியிருக்கிறது.

ஆரம்பத்தில் ஹே ராமுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகி, பின்னர் பணத் தகராறினால் விலகிச் சென்ற உலகப் புகழ் வயலின் மேதை எல். சுப்பிரமணியம் குமுதம் பேட்டியில்,






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னை வைத்து ஹே ராமுக்கு அகில உலகக் கவனம் பெற்றுக்கொள்ளவே கமல் முயன்றதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார். காந்தி வேஷத்தில் நடிப்பதற்கு, ஏற்கனவே 'காந்தி' படத்தில் நடித்த பென் கிங்ஸ்லியைக் கேட்கும்படி கமல் தன்னை வற்புறுத்தியதாகவும் சொல்லியுள்ளார்.


களத்தூர் கண்ணம்மா

அது எப்படியிருந்தாலும், பத்திரிகைகள் குறிப்பிடுவது போல கமல்ஹாசன் சந்தை நோக்கத்திற்காகவேனும் உலகளாவிய ரீதியில் முயற்சிப்பவர் என்பதில் சந்தேகமில்லை. இந்தியன், அவ்வை சண்முகிக்கு மேக்கப் கலைஞரை ஹொலிவூட்டிலிருந்து தருவித்திருந்தார்.

ஹே ராமில் இளையராஜா இசையமைத்த பகுதிகள் கூட ஹங்கேரி இசைக் கலைஞர்களால் அங்கேயே ஒலிப்பதிவு செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சர்வதேச ரீதியில் முயற்சிகளை மேற்கொண்டாலும், தேசிய தளத்தில் சிவாஜி கணேசனின் நடிக வாரிசுத் தொடர்ச்சியே தான் என்பதாகக் காண்பித்துக் கொள்ள விரும்புகிறார். தேவர் மகனில் சிவாஜி இறந்த பிறகு தந்தையின் நாற்காலியில் மகன் கமல் வந்தமரும் காட்சிக்கு ரசிகர்களிடமிருந்து கரகோஷம் பெற்றுக்கொண்டார்.

ஒப்பிடுகிற போதுகூட, 'அவர் காலத்தில் இருந்த குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு சிவாஜி சாதித்தது, இன்று நாங்கள் வீடியோக்கள், வெளிநாட்டுப் படங்கள், படவிழாக்கள் பார்த்துச் செய்து கொண்டிருப்பதை விட எவ்வளவோ அதிகம் என்று தன்னடக்கம் காட்டுகிறார்.

இந்திய அளவில் நல்ல சினிமாவின் மகா புருஷர் 'ரே' என்றால், அவருக்கு அடுத்தபடி ஷியாம் பெனகல் என்கிறார்.

"தேவர் மகன் சில்வர் ஜுப்ளிக்கு பெனகல் வந்தபோது அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டேன். எல்லோரும் என்னைக் கேலி கூட செஞ்சாங்க. சிவாஜி சாரோட காலேயும் விழுவேன்னு அவங்களுக்குத் தெரியும். எனக்கு சிவாஜியையும் புரிகிறது. ரசிகர்களும் அப்படித்தான் இருக்காங்க...

கமர்ஷியல், ஆர்ட் என்கிற வித்தியாசம் எல்லாம் இல்லை. நல்ல சினிமா, மோசமான சினிமா என்கிற வித்தியாசம்தான் உண்டு. நல்ல சினிமாவை கமர்ஷியல் சக்ஸஸ் ஆக்கணும். ஜனங்க காத்துக்கிட்டிருக்காங்க. கமர்ஷியலா வெற்றியடையணும்னா மசாலாக்களைக் குடுக்க வேண்டியதில்லை. கவனமா தரத்தை உயர்த்தி அதை விக்கணும். விக்க முடியும். உலக மார்க்கெட்டைப் பிடிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. யாரும் ஒரு தேவதூதனுடைய வருகைக்காக காத்திருக்கவில்லை. யாராவது லீட் பண்ண மாட்டாங்களான்னுதான் எல்லோரும் காத்திருக்காங்க. அவ்வளவுதான்..."


அபூர்வ சகோதரர்கள்


குணா

கமல்ஹாசன் அவரளவில் சகல கலாவல்லவன் தேவைகளிலிருந்து மீண்டு தெளிவாகிவிட்டார் என்றே தோன்றுகிறது. அவரது தயாரிப்பில் வரும் படங்கள் வித்தியாசமான முயற்சிகளாக இருக்குமாறு பார்த்துக் கொள்கிறார். அபூர்வ சகோதரர்கள், தேவர் மகன், மகாநதி போன்று மக்களிடமிருந்தும் ஆதரவு வெற்றியைப் பெற்றுக் கொள்கிறார்.

இது விரிவடையுமா? தரத்தையும் சனங்களையும் இணைக்கும் சினிமாவைக் கட்டியெழுப்புமா எதிர்காலம் என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ●


மகாநதி


இந்தியன்

## கதை சொல்லும் சிலைகள்



சிட்னி ஆர்ட் கலரியில் உள்ள "மகிமையுள்ள தசைகள்" என்ற சிலைகளின் தொகுதியில் ஒரு சிலை.

'மனித உடலைக் கலை வடிவமாக்குதல் பற்றிய கல்விக்கு 20ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிரபலமான சிலை.

**கண்ணை**
**மறைக்கிறது**

**நெஞ்சை**
**நிறைக்கிறது**

**புலன்களைப்**
**புரட்டியெடுக்கிறது**

**இன்னும்**
**இருப்பது**
**இதுக்காகத்தான்**

**பச்சையாக**
**சொல்லவா**

**முடிசூழ்ந்த**
**கண்ணில்**
**முளையடித்துக்**
**கட்டிய மனசு.**

**- விக்ரமாதித்யன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பொறந்தாச்சு



இரண்டு பிரபல வாரிசு நடிகர்களும் மீண்டும் இணைந்திருக்கும் படம்.

கோயம்புத்தூரில் உடன் படித்த கார்த்திக்கைத் தேடி சென்னைக்கு வருகிறார் கௌசல்யா. தங்குவதற்கு வீடு பார்த்து, வீட்டு புரோக்கர்களான பிரபு, விவேக் ஆகியோரிடம் போகிறார். அவர்கள் தங்கியிருக்கும் வீட்டில் ஒரு பகுதியில் கௌசல்யாவைத் தங்கவைக்கிறார்கள்.

அந்த ஊர் ரௌடி பொன்னம்பலத்திடமிருந்து காப்பாற்றுவதற்காக கௌசல்யாவைத் தன் மனைவி என்று சொல்லிவைக்கிறார் பிரபு.

இதற்கிடையில், கௌசல்யா கார்த்திக்கைச் சந்திக்க, இருவரையும் ஒன்றாக பொன்னம்பலம் பார்த்துவிட.... பிரபு அடி வாங்குகிறார்.

பிரபுவின் பழைய கதை. அக்கா மகளுக்காக பொய் சொல்லி, தனது பத்தாவது வயதிலேயே கொலைக் குற்றத்திற்காக சிறுவர் நன்னடத்தைப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார். வீடு திரும்பும் போது அக்கா மகளைத் திருமணம் செய்வதற்கு, நிறையப் பணத்துடன் சென்றால்தான் அக்கா புருஷன் சம்மதிப்பார் என்பதால் பட்டணத்தில் தங்கி உழைக்கிறார்.

திருமணத்திற்காக நகைகள், அக்கா மகளுக்கு சேலைகள் சேகரிக்கிறார்.

கௌசல்யாவின் பேச்சிலிருந்து அவர்தான் தன் அக்கா மகள் என்பதை அறிந்து கொள்கிறார். ஆனால் கௌசல்யா கார்த்திக்கைக் காதலிக்கிறார் என்பது தெரிந்துதான் யார் என்பதைச் சொல்லாமல் தன் ஆசைகளையும் மறைத்து விடுகிறார் பிரபு.

இதற்கிடையில் பிரபுவின் பாட்டி பரம்பரைச் சொத்தை பிரபு பெயருக்கே எழுதிவைத்துவிட்டு சாக, அக்காவும் புருஷனும் பிரபுவைத் தேடி பட்டணம் வருகிறார்கள்.

அவர்களிடமும் தான் யாரென்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், சொத்துக்களையும் அவர்களுக்கே கிடைக்கச் செய்து, கார்த்திக் - கௌசல்யா திருமண ஏற்பாடுகளையும் முன்னின்று செய்கிறார் பிரபு.

இவ்வளவு தியாகங்களையும் பிரபுவே செய்து விட்டால் கார்த்திக் இரண்டாந் தர ஹீரோவாகிவிட மாட்டாரா? எனவே, கடைசியில் பிரபுவின் தியாகங்களைத் தெரிந்து கொண்ட கார்த்திக், கௌசல்யாவை வெறுப்பதுபோல் நடித்து, பிரபுவையே திருமணம் செய்யவைத்து, பெரும் தியாகியாகி வெளியேறுகிறார்.

விவேக்கின் சிரிப்புமூட்டல்கள் பெரிதாக இல்லாவிட்டாலும், படத்தில் அவர்தான் ஒரே ஒரு ஆறுதல்.

தேவா வழக்கம் போல 'சின்னவீடு சித்ரா பெரிய வீடு கட்றா...' பாணியில் இரண்டு பாடல்கள், பழைய பாடல்களை ஞாபகப்படுத்த இரண்டு பாடல்கள் என்று தன் கடமையைச் செவ்வனே செய்திருக்கிறார்.



உலக அழகி யுக்தா முகே, முன்னாள் அழகிகளின் பாதையில் திரைப்படங்களில் நடிப்பதே இனி அடுத்த கட்டம் என்று அறிவித்திருக்கிறார். உலக அழகிப் பட்டம் பெற்று ஓராண்டு கடந்த பின்னரே திரைப்படங்களில் நடிக்க முடியும் என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. அடுத்த வருடம்... இடைவேளை வரை ஹீரோவோடு இது போலப் பாதி அல்லது பாதியில் பாதி உடையோடு ஊரைச் சுற்றி ஆடியோடிப் பாடிவிட்டு பிற்பாதியில் சேலையோடு வந்து கண்களைக் கசக்கி, முடிவில் எல்லாம் சுபம் என்று சிரிக்கப்போகும் பாத்திரங்களுக்கு ரெடியாகிவிடுவார். அதிலும் ஒரு பிரச்சினை... ஆறடி இரண்டங்குல உயரமான யுக்தாவுக்கு இணையான ஹீரோக்களைத் தேடுவதில் சிரமம் இருக்கப் போகிறது. அமிதாப் பச்சனின் மகனுக்கு இப்போதே தூண்டில் போட்டு வருகிறார் என்று கேள்வி.

அது ஒருபுறமிருக்க....

தமிழ்த் திரைப்படங்களில் - ஏன் ஹிந்தித் திரைப்படங்களிலும்தான்- பெண்கள் கவர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள். உலக அழகிகளும், உடைக் குறைப்புக்குத் தயாரானவர்களுமே ஹீரோயின்களாக முடிகிறது. 'காலச்சுவடு' இதழில் ரங்கராஜன் என்பவர் காரணத்தை எழுதியிருக்கிறார் இப்படி:

"இயல்பான முத்தங்களும், உடல் நெகிழ்வுகளும், ஸ்பரிசங்களும் கலாசார இறுக்கங்களாக பின்தங்கிப் போன ஒரு சூழலில்தான் இன்று தமிழ் சினிமா பெண் உடலைத் தவிர காட்டுவதற்கு வேறு எதுவும் இல்லாத அவலத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 5ம் திகதி முதல் 11ம் திகதி வரை கொழும்பு எல்.ஃபின்ஸ்டன் தியேட்டரில் டச்சுத் திரைப்பட விழா நடைபெற்றது. இலங்கையில் காண்பிக்கப்பட்ட முதல் நெதர்லாந்துப் பட விழா இது. ஏழு படங்கள் திரையிடப்பட்டன. அனுமதி இலவசம். ஏழு நாளும் திரையரங்கு நிறைந்து வழிந்தது. பலர் இடம் கிடையாது ஏமாந்து திரும்பினார்கள்.

1998ல் சிறந்த வெளிநாட்டுப் படத்திற்காக ஒஸ்கார் விருது பெற்ற CHARACTER உட்பட நடிப்பிலும் தயாரிப்பிலும் சர்வதேசத் தரம் வாய்ந்த பல படங்கள் காண்பிக்கப்பட்டன.

TROPIC OF EMERALD என்று ஒரு படம். டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவைப் பிடித்து வைத்திருந்த இரண்டாம் உலகப் போர் காலத்தைய கதை. பிரமாண்டத்திலும் நடிப்பிலும் பிரமிக்க வைத்தது.

இத்தகைய படவிழாக்களும், இதற்கு பெரிய அளவில் மக்கள் திரண்டு வருவதும் நம் சூழல் குறித்த கவலைகள் ஒழிந்து, மனநிறைவும், நம்பிக்கையும் தரும் நிகழ்வுகளாக அமைகின்றன.



## கதை சொல்லும் சிலைகள்



ஒரு டினோசோரை நெருங்குவது எப்படி?
ஒட்டிக்கொண்டு நின்றால்
கட்டைவிரல் நகம் குடை பிடிக்கும்
வாலும் தலையும் எங்கோ பல காதத்தில்
முதுகிலிருந்து பார்த்தால்
அடிவயிறும் பிறப்புறுப்பும்
அதல பாதாளத்தில்
காதிலிருந்து கால் விரல்கள்
காணாத தூரத்தில்
ஒரு டினோசோரை நெருங்குவது எப்படி?
அது நம்மை
நெருங்கச் செய்வதுதான்

- *தேவதச்சன்*

ஜப்பானில் யொகோசூகா பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்ஸில்லா (Godzilla) சிலை. இந்த விலங்கை மையமாக வைத்து இதுவரை 24 சினிமாக்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் நடைபெற்ற Godzilla-2000 மில்லேனியம் கண்காட்சியை 90 மில்லியன் மக்கள் கண்டுகளித்தனர்.



தமிழ் நடிகைகளின் கவர்ச்சிப் புயல் வேகத்துக்கு இன்றைய குறியீடு ரம்பா. சமீபத்தில் வெளியாகியிருக்கும் 'சுதந்திரம்' படத்தில் அண்ணன் செத்ததுக்காக ஒரு துளிக் கண்ணீர் சிந்துவதைத் தவிர, மற்றபடி படம் முழுவதும் அழகு காட்டுவதற்காகவே வந்து போகிறார். ரம்பாக்களெல்லாம் எப்போது கண்ணாம்பாக்களாவது? எப்போது கதைக்காக நடிக்க வருவது? ஹூம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

# இடுப்புவலியைச் சமாளிக்க...

நம்மில் பலர், முதுகுப் பிடிப்பு, இடுப்பில் நோவு என்று துன்புறுவதைக் கண்டிருக்கிறோம். ஏன், நமக்கே இருக்கவும் கூடும்.

இங்கே இவ்வாறான நோவு இடுப்பின் பின்புறம் முதுகு போன்ற பகுதிகளில் ஏற்படுவதற்கான சில அடிப்படைக் காரணங்களையும், விடுபட சில வழிமுறைகளைப் பற்றியும் ஆராய்வோம்.

### எவ்வாறு பாரங்களைத் தூக்குவது?

ஒரு கையால் எந்தவொரு பாரத்தினையும் சட்டெனத் தூக்கும்போது முள்ளந்தண்டின் அருகிலுள்ள தசைகள் *(Supportive Muscles)* உளைகின்றன. எனவே பாரங்களைத் தூக்கும்போது உங்கள் முட்டுக் கால்களை வளைத்து இரு கைகளாலும் தூக்க வேண்டும். அதிகமான எடையை ஒரே தடவையில் தூக்க எத்தனிப்பது ஆபத்தானது.

கனமான முதுகுப்பைகளும் இவ்வித உபாதைகளை ஏற்படுத்தக் கூடியது. அதிகமான எடை உங்களது உடற் சமநிலையை தாங்க மாட்டாதவிடத்து, முள்ளந்தண்டு முறுகி நிலைமாற நேரிடும்.

### நீங்கள் அமரும் நாற்காலி

அமரும் நாற்காலியின் சாய்வுப் பகுதியின் அடிப்பாகம் உங்கள் இடுப்பின் அடிப்பாகத்தை உணரக்கூடியதாகவும், கால்கள் தரையில் நிலைகொள்ளக்கூடிய உயரத்திலும் அமைய வேண்டும். நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதைத் தவிர்த்து அடிக்கடி எழுந்து நின்றும் சிறிது நடந்தும் ஒரே தசைக் கூட்டத்திற்கு நெடுநேரம் உடற் பாரத்தை சுமக்கும் நிர்ப்பந்தத்தை தவிருங்கள். அமர்ந்திருக்கும் ஒரே இடைவெளிகளில் கால்கள் வேறு சிறிய முக்காலிகளிலும் வைத்து இளைப்பாறுவதும் நல்லது.

### நீண்ட தூரப் பயணங்கள்

நீண்ட தூர பஸ், ரயில், கார் பயணங்களும் இக்கோளாறுகளுக்கு காரணியாகும். பயணத்தின் அதிர்வுகள் முழு உடலுக்கும் உளைச்சல் தரக்கூடியது. கரடுமுரடான இடங்களில் வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தியும், அரை மணி, ஒரு மணி இடைவெளிகளில் நிறுத்தி சிறிது இளைப்பாறி மீண்டும் பயணத்தைத் தொடங்கப் பாருங்கள். பிரயாணம் முடிந்த சில நிமிடங்களின் பின்னரே பொதிகளை இறக்க வேண்டும்.

### உங்கள் படுக்கை

கடினமான, கரடுமுரடான மெத்தைகள், கட்டில்களும் இன்னொரு முக்கிய காரணி. சீரான மெத்தை தசை உளைச்சல், முள்ளந்தணடின் அழுத்தம் ஆகியவற்றைக் குறைத்து, முழு உடலையும் இளைப்பாற்ற வல்லது.

ஒரே மெத்தையை நீண்ட நாட்களுக்கு வருடக் கணக்கில் பாவிக்காது அடிக்கடி மாற்றி புதிய சீரான மெத்தைகளை வாங்க வேண்டும்.

தூங்கும்போது பக்கவாட்டிலோ அல்லது மல்லாக்கவோ படுங்கள். பக்கவாட்டில் உறங்கும்போது உங்கள் முழங்கால்களுக்கு நடுவே ஒரு தலையணையை வைத்துக் கொண்டால் உடல் சமநிலையிருக்கும். குப்புறப்படுப்பது உங்கள் பின்புறத்தை வளைத்து, முள்ளந்தண்டின் அடிப்பாகத்தில் அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

### உங்கள் எடை

அதிக உடல் எடை இன்னொரு காரணி. தொந்தியுடையவர்களின் மேலதிக எடையைத் தாங்க முள்ளந்தண்டும் மேலதிக சிரமத்தை எடுக்க நேரிடுகிறது. புகை பிடிப்பதில் புகையானது முள்ளந்தண்டிற்குப் போகும் குருதியின் ஓட்டத்தை குறைப்பதாலும் இவ்வித உபாதைகள் ஏற்படும்.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சியால் இவ்வுபாதை நீக்கும் சிறந்த வழிமுறைகள் இருப்பினும் முறைகேடான உடற்பயிற்சியால் இது உருவாகவும், அதிகரிக்கவும் காரணிகள் இருக்கின்றன. முன்னால் குனிந்து விரல் நுனிகளைத் தொடுவது, பின்புற வலிகளுக்கு முக்கிய பயிற்சியாகும்.

ஆரம்பத்தில் மெதுவாகவும், இலேசான பயிற்சிகளையும் செய்யவும். இவற்றைத் தொடர்ந்து செய்யலாம். கடினமான பயிற்சிகளை விட இவையே ஆரோக்கியமானதும் மீண்டும் மீண்டும் செய்யக்கூடியதுமாகும். எடை தூக்கும் பயிற்சியில் கூட குறைந்த எடையாயினும் தொடர்ந்து முறையாக செய்யவேண்டியதே அவசியம்.

### ஓய்வு

மனச்சோர்வு, ஓய்வின்மை போன்றவற்றாலும் இப்பிரச்சினை உருவாகின்றது. பூரண ஓய்வு, மனோரீதியான அமைதி, ஆழ்ந்த மூச்சிழுத்தல் *(Deep Breathing)* போன்றவை உடல், உள ஓய்வுக்கு உதவக் கூடியன.

பல முதுகு, இடுப்பு உபாதைகள் சத்திர சிகிச்சையின்றி குணமாக, குணமாக்கக் கூடியன. தசை உளைவுகள் தானாக 4-6 வாரங்களில் குணமடையக்கூடியன.

முதுகு, இடுப்பு உபாதைகள் பாதிக்கப்பட்ட இடத்தில் ஐஸ் கட்டிகளை சில நிமிடங்கள், சீரான இடைவேளைகளில் 24-48 மணித்தியாலங்களுக்கு வைப்பதால் வீக்கம் குறைய வாய்ப்புண்டு. மாத்திரைகளில் இபுபுரோஃபன் *(Ibuprofen)* அல்லது நப்ரோக்சன் *(Naproxen)* வலி நிவாரணிகளாகச் செயற்படுகின்றன.

48 மணிநேரத்தின் பின்னரும் மாறாதவிடத்து வைத்தியரை நாடுவது அவசியம். வலி கூடி, காய்ச்சலும், ஸ்பரிசமின்மையம் ஏற்படுமிடத்து உடனடி வைத்திய உதவி அவசியம். இந்த உடற்பயிற்சியை பின்புற உடல் உபாதைகளுக்கு டாக்டர் ரொபின் மெக்மென்ஸி என்பவர் பரிந்துரைக்கும் அதே வேளை, இவற்றை செய்யுமுன், உங்கள் வைத்தியரின் அனுமதியையும் பெற வேண்டுமென்று அறிவுறுத்துகிறார். ●



**(1) பக்கவாட்டில் முகத்தைத் திருப்பி, உடலின் பக்கவாட்டில் கைகளை நேராக வைத்து குப்புறப் படுக்கவும். இதுவே ஆரம்ப நிலை. 2-3 நிமிடம் இந்நிலையிலிருங்கள்.**



**(2) உடலை கைகளை படத்தில் காட்டியவாறு வைத்து உயர்த்துங்கள். பின்புற அடித்தசைகளை தளர்வாக்கி 2-3 நிமிடம் இருக்கவும். ஒரு முறை மட்டுமே செய்யுங்கள்.**



**(3) முந்தைய நிலையிலிருந்த உங்கள் கைகளை தோள்பட்டைகளுக்கு மேலாக உயர்த்தி (படத்தில் காட்டியவாறு) முன்னங் கைகளை நேராக்கி உடலை உயர்த்தி 1 - 2 விநாடிகள் விட்டு மீண்டும் தளர்த்தவும். பின் தசைகளை தளர்ந்த நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு 10 முறை செய்யுங்கள்.**



**(4) 3ம் 4ம் பயிற்சிகளை திரும்பச் செய்யும் ஒவ்வோர் முறையும் உங்கள் உடலை முதல் முறையை விட சிறிது கூடுதலாக உயர்த்த முயற்சியுங்கள். ஒவ்வொரு இரண்டு மணித்தியாலத்திற்கொரு முறை செய்ய வேண்டும் - நாளாந்தம் எட்டு முறைக்கு மேல் இப்பயிற்சியைச் செய்யலாகாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாக் கண்ட சிங்கள சினிமா

நூலாசிரியர் : தம்பிஐயா தேவதாஸ்
வித்தியாதீபம் பதிப்பகம் 90/9 புதுச் செட்டித்தெரு கொழும்பு-13
விலை: ரூபா 200/- பக்கம் : 176



1947ம் ஆண்டு முதலாவது சிங்களப் பேசும் படம் இலங்கையில் திரையிடப்பட்டது. 1997ம் ஆண்டு வரை 850ற்கும் அதிகமான சிங்களப் படங்கள் திரையிடப்பட்டு விட்டன. அதாவது சிங்களத் திரையுலகம் பொன்விழாக் கண்டு விட்டது. முதலாவது சிங்களப் படதைத் தயாரித்தவர் என்ற பெருமை எஸ். எம். நாயகம் என்னும் தமிழ் மகனைச் சாருகிறது.....

இவ்வாறு தன் முன்னுரையில் குறிப்பிட்டு சிங்களச் சினிமா பற்றி தமிழ் வாசகர்கள் அதிகம் அறிந்திராத பக்கங்களைத் தனது 'பொன் விழாக் காணும் சிங்களச் சினிமா' என்ற இந் நூல் மூலம் வெளிப்படுத்துகிறார் நூலாசிரியர் தம்பிஐயா தேவதாஸ்.

சிங்களச் சினிமா வின் வளர்ச்சிப் படிகள், அதற்கான ஆதார சுருதிகளாக விளங்கிய முக்கியஸ்தர்களின் பங்களிப்புகள், அது தமிழ்க் கலைஞர்களோடு கொண்டிருந்த அன்னியோன்யம் என்பனபற்றி அறிந்திருப்பது இன்றைய தலைமுறைத் தமிழ்க் கலைஞர்களுக்கும் கலை ஆர்வலர்களுக்கும் உதவிகரமானது.இலங்கை போன்ற சிறிய நாட்டில் சகோதர மொழியொன்றில் ஏற்பட்ட இப் பிரம்மாண்டமான கலைத்துறையின் வளர்ச்சிப் போக்கையிட்டு அருகே வாழும் மற்றோர் இனத்தவரான எம்மிடம் அதிக விளக்கமில்லாமையும் அத் துறையோடு பெருமளவு கருத்துப் பரிமாற்றங்கள் இல்லாது ஒரு பெருஞ்சுவரால் பிரிக்கப்பட்டுள்ளதுபோன்ற நிலைமையும் எமது இரசனை வளர்ச்சிக்கு அதன் பங்களிப்புகளின் தேவையை உணராமையும் கவலைக்கிடமானதே.

இந்தியச் சினிமாவின் தாக்கத்துக்குள்ளாகியுள்ள போதிலும் சிங்களச் சினிமாவில் காப்பாற்றப்பட்டு வரும் சுயாதீனத் தன்மையையும் அதனை நிலை நிறுத்துவதற்காக இங்கு மேற்கொள்ளப்பட்ட உணர்வு பூர்வமான செயற்பாடுகளையும் நாம் எடுத்து நோக்க வேண்டியவர்களாயுள்ளோம். அத்தோடு இலங்கைத் தமிழ் சினிமாத் துறைக்கு நேர்ந்த கதிபற்றியும் தீர்க்கமாக ஆராயவேண்டியவர்களாயுள்ளோம்.

இந்நிலையில் தேவதாஸின் இந் நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

## சங்கடங்கள் (நாடகங்கள் ஐந்து)

நூலாசிரியர் : இ. முருகையன்
வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை
விலை : ரூபா 100/- பக்கம் : 134




சமகாலத்தில் வாழும் மூத்த கவிஞரான இ.முருகையனின் ஐந்து நாடகங்கள் சங்கடங்கள் என்ற நாடகத் தொகுப்பாக தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ளன.

கந்தப்ப மூர்த்தியர்,வழமை, அந்த கனே ஆனாலும், இடைத் திரை,குனிந்த தலை ஆகிய நாடகங்கள் இத் தொகுப்பில் அடங்குகின்றன.

இவை 1963, 67, 69, 73, 95 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்டவை. இவற்றில் சில வானொலியில் ஒலிபரப்பப் பட்டவை.

இவற்றில் 'கந்தப்ப மூர்த்தியா" நாடகத்தைத் தவிர மற்றவை பா நாடகங்கள்.

இன்றைய தமிழ் இலக்கியப் படைப்புகளில் நாடக நூல்களின் வரவு குறைந்து வருகிறது.

நாடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, மற்றும் மேடைகளில் ஆற்றுகைக்கு உகந்தவையேயன்றி நூலுருவில் படிப்பதற்கு உவந்ததல்ல என்ற ஒரு கருத்து வாசகர்களிடையே இப்போது வளர்ந்து வருகிறது. அதனால் நாடக நூல்கள் எழுதும் உற்சாகம் பல எழுத்தாளரிடையே குன்றிக் காணப்படுகிறது.

ஆனால் மாபெரும் நாடக ஆசிரியர்களான சேக்ஷ்பியர் போன்றோரின் படைப்புகளையெல்லாம் நாம் நாடக நூல்களாகவே படித்து ரசித்துள்ளோம்.

இதேவேளை இன்று உலகில், நாடக வடிவங்களும் உத்திகளும் வெளிப்பாட்டு முறைகளும் கொள்கைகளும் மாறிவருகின்றன. அவை தமிழிலும் ஆராயப்படவேண்டிய தேவை இலக்கிய உலகின் செழுமைக்கு அவசியமாகியுள்ளது.

தற்கால வாசகர்களுக்கு இந் நாடக வடிவ இலக்கியப் படைப்புகள் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்தவும் அதன் சுவை பற்றி உணர்த்தவும் கூடிய நாடக நூல்களும் அவைபற்றிய திறனாய்வுகளும் எமக்கு இன்னும் அதிக அளவில் தேவைப்படுகின்றன.

இந்தவகையில் மூத்த எழுத்தாளர் இ. முருகையனின் இப் பழைய நாடகங்களை நூலுருவில் வெளிவந்தமை வரவேற்கத் தக்கது.

## மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும்



நூலாசிரியர்: கே.எஸ். சிவகுமாரன்
மீரா பதிப்பகம்
விலை :ரூபா 125/-
பக்கம் :126

மூத்த எழுத்தாளரும் திறனாய்வாளரும் பத்தி எழுத்தாளருமாக தமிழ், ஆங்கில எழுத்துத் துறைகளில் நன்கறியப்பட்ட கே. எஸ். சிவகுமாரனின் இந் நூல் தமிழ் இலக்கிய உலகுக்கு பயனுள்ள ஒரு வரவாக அமைந்துள்ளது. இந்நூலில் திறனாய்வுக் கோட்பாடுகள் பற்றியும் பல்வேறு ஆளுமை மிக்க திறனாய்வாளர்களின் சிந்தனைகள், அவை குறித்த விமரிசனக் கண்ணோட்டங்கள் ஆகியவற்றையும் ஆராய்கிறார் நூலாசிரியர். உலகில் இன்று இலக்கியத் துறையில் மாறி வரும் பரிணாமங்களுக்கு மத்தியில் அவை குறித்த திறனாய்வுப் போக்குகளிலும் மாற்றங்கள் வேண்டப்படுகிறது. இவ்வகையில் கே. எஸ். சிவகுமாரனின் சிரத்தை மிக்க பங்களிப்பு பயன்மிகுந்ததாயுள்ளது.

## நாளையைத் தேடும் மனிதர்கள் (சிறுகதைத் தொகுதி)



நூலாசிரியர்: திருமலை சுந்தா
அம்மா பதிப்பகம்
திருகோணமலை
விலை: ரூபா 100/-
பக்கம் : 98

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சிவநெறிச் சஞ்சிகையில் வெளிவந்த திருமலை சுந்தாவின் 11சிறுகதைகள் நாளையைத் தேடும் மனிதர்கள் என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது.

இந் நூலில் அடங்கியுள்ள சிறுகதைகள் சமயப் போதனைகளை மையமாகக் கொண்டவை.

எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் வாசிப்பு கலாசாரத்தைப் பெருக்கவும் உள்ளூர் முயற்சியாக மேற்கொள்ளப்படும் அம்மா பதிப்பகத்தின் நூல் வெளியீட்டுப் பணியில் விளைந்த அறுவடை இச் சிறுகதைத் தொகுதி.

## அக்கினிப் பூக்கள் (சிறுகதைத் தொகுப்பு)



நூலாசிரியர்: அந்தனி ஜீவா
வெளியீடு: ஞானம் பதிப்பகம், கண்டி.
விலை: ரூபா 115/-
பக்கம் :112

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக மலையக கலை இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளரும், சமூக முன்னேற்றத்துக்கான செயற்பாட்டாளருமான அந்தனி ஜீவாவின் 70களில் மேடையேறப்பட்ட 'அக்கினிப் பூக்கள்' நாடகம் தற்போது ஞானம் பதிப்பகத்தினரால் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

மலையக கலையிலக்கியம் பற்றிப் பேசுபவர்கள். பெயரைக் குறிப்பிடாது விடமுடியாத அளவுக்குத் தன் ஆழமான சுவடுகளைப் பதித்தவர் அந்தனி ஜீவா.

படைக்கப்பட்டு அச்சாக்கம் பெறாமல் இருந்த இதுபோன்ற கலைப் படைப்புகள் காலத்தால் மறைந்துவிடாது பதிந்து வைக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து
பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

**பெறும் நன்மைகள்:**

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

HATTON NATIONAL BANK LIMITED

ஹற்றன் நஷனல் வங்கி
*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org